# புதிய ஜனநாயகம்

மே 2020
ரூ. 15.00




கரோனாவும் ஊரடங்கும்

# இடிதாங்கிகளா ஏழைகள்?

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | தலையங்கம் – தீவிரமடையும் பாசிசத் தாக்குதல்கள் | 3 |
| 2. | கரோனாவும் ஊரடங்கும்: இடிதாங்கிகளா ஏழைகள்? | 5 |
| 3. | ஊரடங்கின் கீழ் இருவேறு இந்தியாக்கள் | 11 |
| 4. | மோடி – எடப்பாடி: ஜாடிக்கேத்த மூடி! | 14 |
| 5. | கரோனாவை விட அபாயகரமானது பார்ப்பனியம்! | 17 |
| 6. | உழைப்பின் மீதான மூலதனத்தின் சர்வாதிகாரம்! | 20 |
| 7. | புதிய தாராளவாத வைரஸின் சகாப்தம்! | 22 |
| 8. | அமெரிக்க மக்களைக் காவு வாங்குவது தனியார்மயமே! | 26 |
| 9. | ஒரு வைரஸும் சில உண்மைகளும் | 29 |
| 10. | பேரழிவு முதலாளித்துவம் | 34 |
| 11. | மருத்துவர்களே நீங்கள் எந்தப் பக்கம்? | 38 |
| 12. | உத்திரப் பிரதேசம்: இந்து ராஷ்டிரத்தின் புதிய சோதனைச்சாலை! | 40 |
| 13. | இந்திய இறையாண்மை: தேசபக்தாளின் மற்றொரு பூச்சாண்டி! | 44 |
| 14. | பெண்கள் மீதான வன்முறைகள்: தோற்றுப்போன சட்டங்கள்! | 47 |


புதிய ஜனநாயகம் முகவர்கள், சந்தா தாரர்கள் மற்றும் வாசகர்களுக்கு, செவ்வணக்கம்!

நிர்வாகச் சிக்கல்களின் காரணமாக எம்மால் மார்ச் 2020 மாத இதழை வெளியிட முடிய வில்லை. ஏப்ரல் 2020 இதழைக் கொண்டுவர எமது தரப்பில் எடுக்கப்பட்ட முயற்சிகள், மார்ச் இறுதியில் அறிவிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவையடுத்து முடங்கிப் போயின.

மே 17 வரை ஊரடங்கு நீட்டிக்கப்பட்ட தாலும், சென்னை நகரில் நோய்ப் பரவல் தீவிரமாக இருப்பதன் காரணமாகவும் மற்றும் இதழின் அச்சாக்கம், அச்சிட்ட பிரதிகளை முகவர்களுக்கு அனுப்பி வைப்பது மற்றும் அச்சில் வந்த இதழை முகவர்கள், வாசகர் களுக்கு விநியோகிப்பதில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள் ஆகியவற்றை கருத்தில் கொண்டும் மார்ச், ஏப்ரல், மே இதழ்களை ஒன்றாக இணைத்து மின்னிதழாக வெளியிடுகிறோம்.

இவ்விதழை வாசகர்கள் எவரும் கட்டணம் எதுவுமின்றி இலவசமாக வாசிக்கத் தருகிறோம். கரோனா தொற்று தொடர்பான கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்திருக்கும் இம்மின்னிதழை முகநூல், மற்ற பிற சமூக வலைத்தளங்கள் வாயிலாக விரிவான அளவில் கொண்டு செல்லுமாறு முகவர்களையும், வாசகர்களையும் கேட்டுக் கொள்கிறோம்.

அச்சுப் பிரதிக்கான சந்தா தொகை செலுத்தியுள்ள வாசகர்களுக்கு விடுபட்டுள்ள இதழ்கள் அவர்கள் கணக்கில் நேர்செய்யப்பட்டு, அவர்களின் சந்தா காலம் அதற்கேற்ப நீட்டிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

முகவர்கள், சந்தாதாரர்கள், வாசக நண்பர்கள் அனைவருக்கும் 135-ஆவது மே தினப் புரட்சிகர வாழ்த்துக் களையும்; பாட்டாளி வர்க்க ஆசான் தோழர் லெனினின் 151-ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்களையும்; இ.பொ.க. (மா-லெ)வின் 52-ஆவது நிறுவன நாள் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

**- ஆசிரியர் குழு**

## பணமதிப்பழிப்பு தொடங்கி ஊரடங்கு வரை:

# தீவிரமடையும் பாசிசத் தாக்குதல்கள்

நெருக்கடியான காலம்-இந்தச் சாக்கு எல்லாவிதமான அடக்குமுறைகளையும், உரிமைகள் பறிக்கப்படுவதையும் நியாயப்படுத்திவிடுகிறது. அரசின் சட்டவிரோதமான நடவடிக்கைகளைக்கூடக் கேள்விக்கு உட்படுத்த முடியாத நிலைமையைத் தோற்றுவிக்கிறது.

கரோனா நோய்த் தொற்றை எதிர்கொள்ளுவது என்ற பெயரில் மேலிருந்து திணிக்கப்பட்ட ஊரடங்கு, ஆரோக்கிய சேது செயலி, டிரோன்களின் மூலம் பொதுமக்களின் நடமாட்டத்தைக் கண்காணிப்பது, ஊரடங்கை மீறுபவர்களுக்குத் தன்னிச்சையாக போலீசே தண்டனை அளிப்பது, அபராதம் விதிப்பது என்பதில் தொடங்கி கடைசியாக அறிவிக்கப்பட்டிருக்கும் தொழிலாளர் சட்டத் திருத்தங்கள் வரையிலும் எதுவொன்றும் சட்டப்படியாகவோ, பொதுமக்களின் நலனை முன்னிட்டோ அறிவிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவில்லை.

பிரதமர் நரேந்திர மோடி, தன்னைத் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதி என்றோ, நாடாளுமன்றத்திற்குப் பதில் அளிக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் தனக்கு உண்டு என்றோ ஒருநாளும் கருதிக் கொண்டது கிடையாது. அவரது எதேச்சதிகார மனப்பான்மையை ஏற்கெனவே பணமதிப்பழிப்பு விவகாரத்தில் நாம் அனுபவிக்க நேர்ந்தது. பாசிஸ்டு கும்பலுக்கே உரிய முட்டாள்தனத்தை, அவரது அரசு அவசர அவசரமாக ஜி.எஸ்.டி.யை அமல்படுத்திய பின் நாடே புரிந்துகொண்டது.

அதனைப் போலவே, ஒரு நான்கு மணி நேர கால அவகசாத்தில் ஊரடங்கை இந்திய மக்களின் மீது ஏவிவிட்டார், மோடி. இக்குறுகிய கால அவகாசத்திற்குள் பொது மக்கள் எப்படித் தங்களைத் தயார்படுத்திக் கொள்ள முடியும் என்பது பற்றியெல்லாம் மோடி கிஞ்சித்தும் சிந்திப்பதும் கிடையாது, அக்கறை கொள்வதும் கிடையாது.

மாநில முதல்வர்களைக் கலந்து ஆலோசித்த பிறகுதான் ஊரடங்கு இரண்டு முறை நீட்டிக்கப்பட்டிருப்பதைப் போல மைய அரசு காட்டிவருவதெல்லாம் அப்பட்டமான மோசடி, நாடகம். மோடியோடு எந்தெந்த முதல்வர்கள் பேசலாம் என்பதைத் தீர்மானித்துவிட்டுத்தான் இந்தக் கலந்தாலோசனை நாடகங்கள் நடைபெற்றுள்ளன.

எனில், நடப்பது ஜனநாயக ஆட்சியா அல்லது முடியாட்சியா? மோடி, பிரதமரா அல்லது டெல்லி சுல்தானா என்ற கேள்விகள் எழுவது தவிர்க்க முடியாதது.

புலம் பெயர்ந்த தொழிலாளர்களும் அவர்களது குடும்பங்களும் ஊரடங்கால் எதிர்கொண்டு வரும் அவலங்களுக்கு மோடி ஆற்றிய எதிர்வினையோ குரூரமானது. “வாழ்வாதாரத்தைவிட, உயிர்தான் எனக்கு முக்கியம்” என்றார், அவர்.

தொழிலாளி வர்க்கத்தைப் பொருத்தவரை உயிரும் வாழ்வாதாரமும் எதிரெதிர் துருவங்கள் அல்ல. மோடி அறிவித்த ஊரடங்கு அவர்களது வேலையை, வாழ்வாதாரத்தை மட்டும் பறிக்கவில்லை, உயிர் வாழும் உரிமையை, கண்ணியத்தை, மானம், மரியாதையைச் சேர்த்தே பறித்தது. அதனால்தான், நடந்தாவது தமது சொந்த கிராமத்திற்குச் சென்றுவிட அவர்கள் முடிவெடுத்தார்கள். அவ்வாறு நடந்தவர்களை மைய அரசும், மாநில அரசுகளும் நடத்திய விதம் இட்லரின் வதை முகாம் வரலாற்றைத்தான் நினைவுபடுத்துகிறது.

ஊரடங்கு, பொதுமக்களின் நடமாட்டத்தைக் கண்காணிக்கவும் கட்டுப்படுத்தவும் அரசிற்கும் போலீசுக்கும் அதிகாரம் அளிக்கிறது என்றால், மைய அரசு கரோனாவைக் காட்டி இறக்கிவிட்டிருக்கும் ஆரோக்கிய சேது செயலி அதனைத் தரவிறக்கம்


புதிய ஜனநாயகம்
மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தொகுதி : 35 இதழ் : 5-7
மார்ச்-மே-2020

தனி இதழ் : ரூ. 15.00
ஆண்டு சந்தா : ரூ.180.00


வடிவமைப்பு :
மு.துரை



தொடர்பு முகவரி :
புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண் : 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

மின்னஞ்சல் :
puthiyajananayagam@gmail.com

தொலைபேசி:
94446 32561




செய்வோரின் தரவுகளைத் திருடிக்கொள்ளும், அரசின் மொழியில் சொன்னால், சேகரித்துக் கொள்ளும் அதிகாரத்தை அரசிற்குத் தந்திருக்கிறது.

ஆதார் குறித்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நடந்தபோது, குடிமகன்களுக்கு அந்தரங்க உரிமை கிடையாது என வாதாடிய மோடி அரசு, ஆரோக்கிய சேது செயலியின் மூலம் பெறப்படும் தரவுகளை வேறு நோக்கங்களுக்குப் பயன்படுத்தாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது. இந்தச் செயலியை, அரசு மற்றும் தனியார் ஊழியர்கள் அனைவரும் தரவிறக்கம் செய்து கொள்ளுவதைக் கட்டாயமாக்கியிருக்கிறது மோடி அரசு. இந்த எதேச்சதிகாரம் நிறைந்த உத்தரவின் வழியாக அமைப்புரீதியில் திரட்டப்பட்ட ஊழியர்கள், தொழிலாளர்களின் தனியுரிமை பறிக்கப்பட்டிருக்கிறது.

சீனாவில் கரோனா பரவத் தொடங்கியபோது அறிமுகப் படுத்தப்பட்ட இது போன்ற செயலி, பின்னர் அம்மக்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் கருவியாகப் பயன்படுத்தப் பட்டது என்பதை நாம் நினைவில் கொண்டால், இந்தச் செயலி ஆக்டோஃபஸைப் போன்றது என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

கரோனாவைக் காட்டி எந்தவிதச் சட்டபூர்வ அங்கீகாரமுமின்றி அறிமுகப்படுத்தப்பட்ட செயலியைப் போலவே, பி.எம். கேர்ஸ் என்ற புதியதொரு நிவாரண நிதிக் கட்டமைப்பைத் தன்னிச்சையாக உருவாக்கியிருக்கிறார், மோடி. இதற்கு யார் நிவாரண நிதி அளிக்கிறார்கள், எவ்வளவு அளிக்கிறார்கள், அந்த நிதி எவ்வாறு செலவழிக்கப்படுகிறது என்ற விவரங்களை யாரும் கேட்டு அறிய முடியாது. மோடியின் தலைமையில் மூன்று கேபினட் அமைச்சர்களை உறுப்பினர்களாகக் கொண்டு செயல்படக் கூடிய இந்த நிதிக் கட்டமைப்பின் வரவு-செலவுக் கணக்குகளை மைய அரசின் தலைமைத் தணிக்கை அதிகாரிகூடத் தணிக்கை செய்ய முடியாது.

இப்படிச் சட்டபூர்வ அங்கீகாரமும், வெளிப்படைத் தன்மையும் அற்ற விதத்தில் உருவாக்கப்பட்டிருக்கும் இந்த நிதிக்கு மைய அரசு ஊழியர்கள் தமது சம்பளத்திலிருந்து நிதி அளிக்க வேண்டும் என்றும், நிதி அளிக்க விரும்பாதவர்கள் அது குறித்துத் தெரிவிக்க வேண்டுமென்றும் உத்தரவிடப்பட்டிருக்கிறது. இந்த உத்தரவின் மறைபொருள் என்னவென்றால், நெருக்கடியான காலக் கட்டத்தில் நீங்கள் அரசின் பக்கம் நிற்கவில்லை என்றால், அதற்கு எதிராக நிற்கிறீர்கள் என்பதுதான்.

இதுவொருபுறமிருக்க, கரோனாவின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் பொருளாதார நடவடிக்கைகளை மீட்டெடுப்பது என்ற போர்வையில் தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளை ரத்து செய்யும் சட்டத் திருத்தங்களை பா.ஜ.க. ஆளும் உ.பி., ம.பி., குஜராத் மாநில அரசுகள் நிறைவேற்றியுள்ளன.

சுற்றுப்புறச் சூழலைப் பாதிக்கக்கூடிய தொழிலையோ அல்லது திட்டங்களையோ தொடங்கும் முன்பாக, அத்திட்டங்கள் சுற்றுப்புறச் சூழலில் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தும் என்பது குறித்து அறிக்கை தயாரிக்க வேண்டும். அந்த அறிக்கையின் அடிப்படையில்தான் அத்திட்டங்களுக்கான பூர்வாங்க அனுமதி அளிக்கப்படும் அல்லது மறுக்கப்படும். சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாப்பதற்காக 1994-இல் கொண்டுவரப்பட்டு, 2006-இல் திருத்தப்பட்ட இந்தச் சட்டபூர்வ நடைமுறையை முற்றிலுமாகக் கைவிடும் அறிவிக்கையை, ஊரடங்கு அறிவிக்கப்படுவதற்கு முதல் நாள் வெளியிட்டிருக்கிறது, மைய அரசு.

மின்சாரச் சட்டம் 2003-இல் பாரிய திருத்தங்களைச் செய்து வரைவு மின்சாரச் சட்டம்2020-ஐ வெளியிட்டிருக்கிறது, மோடி அரசு. இவ்வரைவு சட்டமானால், அது மாநில அரசின் உரிமைகளை மட்டும் பறிக்கப் போவதில்லை. தமிழகத்தில் குடிசை வீடுகளுக்கும், விவசாயிகளுக்கு வழங்கப்படும் இலவச மின்சாரத்தை முற்றிலுமாக ஒழித்துக் கட்டிவிடும். மேலும், மின்சாரக் கட்டணத்திற்கு அளிக்கப்படும் மானியங்களை முற்றிலுமாக ஒழித்துவிட்டுத் தனியார் மின்சார விநியோக நிறுவனங்கள் பொதுமக்களையும், விவசாயிகளையும், சிறு தொழில் நிறுவனங்களையும் பகற்கொள்ளை அடிப்பதற்குக் கதவைத் திறந்துவிடும்.

கரோனா தொற்று அபாயத்தால் நாடாளுமன்றமும், மாநிலச் சட்டமன்றங்களும் முற்றிலுமாக முடக்கப்பட்டிருக்கும் நிலையில் கார்ப்பரேட் கும்பலுக்கு ஆதரவான இந்நடவடிக்கைகளை எடுக்கத் துணிகிறது, பா.ஜ.க. அரசு. கரோனா தொற்றையடுத்து உருவாகிவரும் புதிய சமூக, அரசியல் சூழ்நிலையை, அதாவது பொதுமக்கள் வீட்டுக்குள் முடக்கப்பட்டிருப்பதையும், பழைய மாதிரி அரசியல் ஆர்ப்பாட்டங்களை, பொதுக்கூட்டங்களை, பிரச்சாரங்களை நடத்த இயலாத சூழ்நிலையையும் பயன்படுத்திக் கொண்டு இவற்றை நடைமுறைக்குக் கொண்டுவருவதில் முனைப்புக் காட்டுகிறது.

கரோனா தொற்று மக்கள் அனைவரையும் பாதிப்பதில்லை. பாதிக்கப்பட்டவர்கள் அனைவரும் அத்தொற்றால் இறந்து போய்விடுவதுமில்லை. ஆனால், இந்த கரோனா தொற்று நெருக்கடியைப் பயன்படுத்திக் கொண்டு மோடி அரசு கட்டவிழ்த்துவிட்டிருக்கும் மேற்கண்ட நடவடிக்கைகள் அனைத்தும் நாட்டை கார்ப்பரேட்காவி பாசிச இருளுக்குள் விரைந்து தள்ளிச் செல்லும் அபாயமிக்கவை. யாரும் தப்பித்துவிட முடியாது.

கரோனா தொற்று அபாயத்திலும்கூடத் தமிழகத்துப் பெண்கள் டாஸ்மாக் திறக்கப்படுவதை எதிர்த்து வீதியில் இறங்கவில்லையா! அப்படிப்பட்டதொரு நெஞ்சுறுதியோடு மோடி அரசு திணிக்க முயலும் இந்த பாசிச அடக்குமுறைகளை எதிர்த்துத் தெருவில் இறங்குவோம்! ■

அட்டைப்பட கேலிச்சித்திரம்: நன்றி – சதீஷ் ஆச்சார்யா.



## கரோனாவும் ஊரடங்கும்:

# இடிதாங்கிகளா ஏழைகள்?

**முதலாளித்துவ நெருக்கடிகளும், கரோனா உள்ளிட்ட தொற்று நோய்களால் ஏற்படும் இழப்புகளும் சோசலிசத்தைத் தேர்ந்தெடுக்கும்படி மக்களை உந்தித் தள்ளுவதை யாராலும் மறுக்கவியலுமா?**

கரோனா தொற்று நோய்க்கு ஆளாகி இறந்துவிடுவோமோ என்ற அச்சத்தை விட, பட்டினியாலோ, எதிர்காலம் குறித்த நிச்சயமின்மையால் ஏற்படும் மன அழுத்தத்தாலோ இறந்துவிடுவோமோ என்ற அச்சம்தான் இன்று பெரும்பாலான இந்திய மக்களை ஆட்டிப்படைத்து வருகிறது. உலக வர்த்தகக் கழகத் தலைவரும்கூட ஒப்புக் கொண்டிருக்கும் இந்த உண்மையை, இந்தியாவை ஆளும் சங்கப் பரிவாரக் கும்பல்தான் ஏற்றுக்கொள்ள மறுக்கிறது.

கரோனா ஒழிப்பில் மோடியை உலகமே வியந்து பாராட்டுகிறதென்றும் மோடி ஆட்சியில் ஒவ்வொரு இந்தியரும் பாதுகாப்பாக உணருகிறார்கள் என்றும் அறிக்கைவிட்டு, தம்மை உண்மையைக் காண மறுக்கும் நெருப்புக் கோழிகளாகக் காட்டிக் கொண்டிருக்கிறார், மைய உள்துறை அமைச்சர் அமித் ஷா.

ஆனால், மருத்துவ ரீதியாகவும் சரி, சமூகரீதியாகவும் சரி மோடி அரசு தோற்றுப் போய் நிற்பதோடு, மக்களுக்கு எதிராகவும் செயல்பட்டுவருவதை, கரோனா பரவல் குறித்து மைய அரசு நிறுவனங்கள் வெளியிட்டு வரும் புள்ளிவிவரங்களும் மக்களின் உணர்வுகள் குறித்து ஊடகங்களில் வெளிவரும் செய்திகளும் நிரூபிக்கின்றன.

சங்கிலித் தொடராகப் பரவும் தன்மை கொண்ட கரோனா நோயை எதிர்கொள்ளக் கூடிய வகையில் நாட்டின் மருத்துவக் கட்டமைப்பு இல்லை என்பது நிதர்சனமான உண்மை. இவ்வுண்மையை, அதாவது இந்திய அரசின் இந்தக் கையாலாகத்தனத்தை மூடிமறைத்துக் கொள்வதற்குத்தான் கரோனாவைக் கட்டுப்படுத்துவதற்கு ஊரடங்கைத் தவிர வேறு வழியில்லை என்ற கருத்தைத் திரும்பத் திரும்ப வலியுறுத்துகிறது, மோடி அரசு.

இதன் மூலம் இந்த நோயை எதிர்த்து நிற்கும் பொறுப்பைத் தனி மனிதர்களின் மீது சுமத்திவிட்டு, ஆளுங்கும்பல் தப்பித்துக் கொள்கிறது.

காலரா, காச நோய் மற்றும் டெங்கு உள்ளிட்ட பருவகால தொற்று நோய்கள் பெரும்பாலும் பணக்காரர்களைப் பாதிப்பதில்லை. அவ்வர்க்கம் தமது வசதி, வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொண்டு இத்தொற்று நோய்கள் தம்மைத் தாக்காமல் தற்காத்துக் கொள்ள முடியும். ஆனால், கரோனா வைரஸின் உயிர்வாழும் தன்மையும், பரவும் விதமும் வேகமும் வேறுபட்டு இருப்பதால், பணக்கார வர்க்கத்தையும் பதம் பார்த்து விடுகிறது. அதனால்தான், இந்நோய்க்கென குறிப்பான மருந்தோ, தடுப்பூசியோ கண்டுபிடிக்கும் வரை ஊரடங்கையும் தனி மனித இடைவெளியையும் கடைப்பிடிப்பதில் முனைப்பு காட்டுகிறது, அவ்வர்க்கம்.

அதேபொழுதில், நான்கு மணி நேர கால அவகாசத்தில் மேலிருந்து திணிக்கப்பட்ட இந்த

ஊரடங்கு இந்தியாவெங்குமுள்ள 40 கோடி அன்றாடங் காய்ச்சிகள் மீது விதிக்கப்பட்ட இரட்டை தண்டனையாகும். “பட்டினியால் நகரத்தில் சாவதைவிட, கரோனாவால் எங்கள் கிராமத்தில் சாகிறோம்” எனப் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் அளித்த வாக்குமூலம்தான் ஊரடங்கின் பின்னுள்ள இவ்வர்க்க பேதத்தைத் தோலுரித்துக் காட்டியது.

### குரூரம் நிறைந்த நிவாரணம்

இந்தியாவில் ஏறத்தாழ 40 கோடி பேர் அமைப்புசாராத் தொழிலை நம்பியிருக்கும் கூலித் தொழிலாளர்கள், சுயமாக ஏதோவொரு தொழிலை, வேலையைச் செய்துவரும் அடித் தட்டு மக்கள். இவர்களுள் 12 கோடி பேர் தினந் தோறும் வேலைக்குச் சென்று தீரவேண்டிய கட்டாயத்தில் வாழ்கின்றனர். போகாது போனால், அவர்களது குடும்பங்களில் அடுப்பு எரியாது. இப்படிப் பட்டினிக் கொடுஞ்சிறையில் சிக்கிக் கொண்டோருக்கு மோடி அரசு அறிவித் திருக்கும் நிவாரணம் என்ன?



காலவயித்துக் கஞ்சிக்குக்கூட வழியின்றி, கால் தேய நடந்த களைப்பில் தேசிய நெடுஞ்சாலையோரங்களில் படுத்துறங்கும் புலம்பெயர்த் தொழிலாளர்களின் பேரவலம்.

ஏப்ரல், மே, ஜூன் ஆகிய மூன்று மாதங் களுக்கு ஒவ்வொரு மாதமும் ஐந்து கிலோ அரிசி அல்லது கோதுமை, ஒரு கிலோ பருப்பு ஆகியவை இலவசம். இந்த அறிவிப்பின் ஒட்டாக இந்த இலவசமும் அனைத்துக் குடும்ப அட்டைகளுக்கும் கிடையாது என்றொரு நிபந்தனை - எப்பேர்பட்ட குரூரமான பரோபகாரம்!

இதற்கு மேல் தேவைப்படும் ஒவ்வொரு கிலோ அரிசிக்கும் பொதுமக்கள் பணம் செலுத்த வேண்டும். அவர்கள் முன்னுரிமை குடும்ப அட்டையை வைத்தி ருந்தால், ஒரு நபருக்கு ஐந்து கிலோ என்ற வீதத்தில் அரிசியையோ கோதுமையையோ மானிய விலையில் பெற்றுக் கொள்ளலாம். முன்னுரிமை அற்ற குடும்ப அட்டையை வைத்திருந்தால் ஒரு கிலோ அரிசியை வாங்க இருபத்திரெண்டு ரூபாய் செலுத்த வேண்டும்.

“தற்போதைய மக்கள்தொகை பெருக்கத்தின்படி ஏறத்தாழ 10 கோடி பேர் மோடி அரசு அறிவித்தி ருக்கும் இலவச அரிசி/கோதுமையைப் பெற முடியாது. எனவே, எந்தவொரு நிபந்தனையும் இன்றி அனைத்து மக்களுக்கும் மானிய விலையில் உணவு தானியங் களை வழங்க வேண்டும்” என இடதுசாரி பொருளா தார அறிஞர்கள் மட்டுமின்றி, வலதுசாரி பொருளாதார நிபுணர்களும் திரும்பத் திரும்ப வலியுறுத்தினாலும், மோடி அரசு அந்த ஆலோசனைகளைக் கழிப்பறை காகிதம் போல ஒதுக்கித் தள்ளியே வருகிறது.

10 கோடி ஏழைகளுக்கு ஐந்து கிலோ அரிசியைக்கூட இலவசமாக வழங்க மறுத்துவரும் மோடி அரசு தான், இன்னொருபுறத்தில் தனது கையிருப்பிலுள்ள அரிசியைக் கை சுத்திகரிப்பான் தயாரிப்பதற்குத் தேவை யான எத்தனாலை உற்பத்தி செய்வதற்காக ஏற்றுமதி செய்யும் முடிவை எடுத்திருக்கிறது. இம்முடிவைக் கண்டனம் செய்த ராகுல் காந்திக்குப் பதில் அளித்த தலித் அமைச்சர் ராம்விலாஸ் பஸ்வான், ஏழைகள் சானி டைஸர் பயன்படுத்துவதை ராகுல் காந்தி தடுப்பதாகக் குதர்க்கமாகக் கூறியிருக்கிறார்.


சோறு கேட்டுத் தெருவில் நிற்கும் மக்களிடம் சோத்துக்குப் பதிலாக சானிடைசர் தருகிறோம், கைகழுவிக் கொள்ளுங்கள் எனக் கூறுகிறது மோடி அரசு ரொட்டி கிடைக்காவிட்டால் என்ன, கேக் சாப் பிடுங்களேன் என ஏழைகளை எகத்தாளம் செய்த பிரெஞ்சு மகாராணியை விஞ்சி நிற்கிறது மோடி அரசின் அகங்காரம்!

### பாதிப்பின் பல்வேறு பரிமாணங்கள்

இந்த ஊரடங்கு புலம்பெயர்ந்த தொழிலாளர் களை, ஆட்டோ டிரைவர், ஆட்டோ மெக்கானிக், எலெக்ட்ரீசியன், தள்ளுவண்டி வியாபாரி, நடை பாதை வியாபாரி எனப் பலவிதமான சுயதொழில் களைச் செய்துவரும் ஏழைகளை மட்டுமல்ல, விவசா யிகள், சிறு வணிகர்கள், தனியார் மற்றும் அரசுத் துறை களில் பணியாற்றும் தொழிலாளர்கள், ஊழியர்கள், ஓய்வூதியம் பெறுவோர் எனப் பல்வேறு பிரிவினரையும் பாதித்திருக்கிறது.

ராபி (குளிர்கால) பருவ தானியங்கள் அறுவடைக்குத் தயாராகிவிட்ட சமயத்தில் ஊரடங்கு திணிக்கப்பட்ட தால், விளைந்த பயிர்களை அறுக்கவும் முடியாமல், அறுத்து சந்தைக்குக் கொண்டுவந்த தானியங்களுக்கு உரிய விலையும் கிடைக்காமல் திண்டாடிப் போய் நிற்கிறார்கள் வடமாநில விவசாயிகள்.

நெல் கொள்முதல் நிலையங்களுக்குக் கொண்டுவரப்பட்ட நெல்லை ஊரடங்கைக் காட்டியும், சாக்கு இல்லை எனச் சாக்குப்போக்கு சொல்லியும் கொள்முதல் செய்யாமல் தட்டிக் கழிக்கிறது தமிழக அரசு எனக் குற்றஞ் சுமத்துகிறார்கள், தமிழக விவசாயிகள். தமிழக அரசின் அறிவிப்பின்படியே இன்னும் ஏழு இலட்சம் டன் நெல்லை விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்ய வேண்டும். அவையனைத்தும் தெருவில் கொட்டிக் கிடக்கின்றன; திடீர் மழையில் நனைந்து நாசமடைகின்றன.



சொந்த ஊருக்குச் செல்லும் வழியில் ரயில் தண்டவாளத்தில் படுத்துறங்க நேர்ந்த அவலத்தால் இறந்துபோன புலம்பெயர்த் தொழிலாளர்கள்: இது விபத்தா, அரசின் சமூகக் கொலையா?

தமிழகத்தில் 32,400 ஹெக்டேர் பரப்பளவில் மலர் விவசாயம் செய்து வரும் 1.5 இலட்சம் விவசாயிகளுக்கு ஊரடங்கால் ஏற்பட்டிருக்கும் நட்டம் 648 கோடிக்கும் அதிகம் எனக் குறிப்பிடுகிறது, தினமணி நாளிதழ் (ஏப்ரல் 14). இதோடு பழங்கள், காய்கறிகளைப் பயிரிட்டு வரும் விவசாயிகள் அடைந்திருக்கும் நட்டத்தையும் கணக்கில் கொண்டால், அது பல ஆயிரம் கோடிகளைத் தாண்டுவது நிச்சயம்.

தமிழகத்தில் 3,800 முகாம்களில் 1.88 இலட்சம் புலம் பெயர்ந்த தொழிலாளர்களைத் தங்க வைத்துப் பராமரித்து வருவதாகக் குறிப்பிட்டிருக்கிறது, தமிழக அரசு (தினமணி, ஏப்ரல் 25) மீதமுள்ள தொழிலாளர்களின் கதி என்ன? அவர்கள் சொந்த ஊருக்குத் திரும்பி விட்டார்களா, இல்லை தெருவில் திண்டாடி நிற்கிறார்களா என்பது குறித்து எந்தவொரு விளக்கத்தையும் தமிழக அரசு அளிக்கவில்லை.

தமிழக அரசின் இந்த அறிவிப்பு வெளிவந்த மறுநாளே, சென்னைக்கு அருகிலுள்ள சிறீபெரும்புதூரில் உள்ள கார்களுக்கான உதிரிபாகங்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளில் வேலைபார்த்து வந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் உணவும் பணமும் இன்றித் திண்டாடி வரும் செய்தியை வெளியிட்டது, இந்து நாளிதழ். இந்தச் செய்தி நாடெங்குமுள்ள புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் அவலத்தின் குறுக்குவெட்டுத் தோற்றம்.

தொழிலாளி வர்க்கத்தின் இந்த அவல நிலைமை ஊரடங்கு தளர்த்தப்பட்ட பிறகு, முன்பிருந்த நிலையைவிட மோசமடையவே வாய்ப்பிருக்கிறது. வேலை நீக்கமும், ஊதியக் குறைப்பும், கூலிவெட்டும், வேலை நேர அதிகரிப்பும் தொழிலாளி வர்க்கத்தின் தலைக்கு மேலே கத்தியாகத் தொங்கவிருக்கிறது.

முதல்கட்ட ஊரடங்கின் போதே நாடெங்கும் 12 கோடி பேர் வேலையிழந்துவிட்டதாகக் குறிப்பிட்டிருக்கிறது, காங்கிரசு கட்சி.

சுற்றுலா மற்றும் அது தொடர்புடைய போக்குவரத்து, தங்கும் விடுதிகள் உள்ளிட்டவற்றில் மட்டும் கரோனா பாதிப்பால் 3.8 கோடி பேரும் (ஆங்கில இந்து, ஏப்.11);

50 சதவீத ஏற்றுமதி ஆர்டர்கள் ரத்து செய்யப்பட்டிருப்பதால், ஏற்றுமதி சார்ந்த துறைகளில் மட்டும் 1.5 கோடி பேரும் (ஆங்கில இந்து, ஏப்.11);

சில்லறை வணிகத் துறையில் 20 சதவீத அளவிற்கு, அதாவது 80,000 பேரும் (ஆங்கில இந்து, ஏப்.8) வேலையிழக்கக் கூடும் எனச் செய்திகள் வெளிவந்துள்ளன.

இந்தியாவில் செயல்பட்டு வரும் 45 சதவீதப் பன்னாட்டு நிறுவனங்கள் பணிக்கு ஆட்களைத் தேர்வு செய்வதை நிறுத்தி வைத்துள்ளன. மேலும், 25 சதவீத நிறுவனங்கள் தங்களது பணியாளர்களின் ஊதியத்தைக் குறைத்துள்ளன என நிதி ஆலோசனை நிறுவனமான ஜின்னோவ் தெரிவித்திருக்கிறது. (தினமணி, ஏப்.5)

"ஊரடங்கு நேரத்திலாவது ரேஷனில் நல்ல அரிசி போடக்கூடாதா?" எனக் குமுறுகிறார்கள் பொதுமக்கள்.

19 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒரு கிலோ பருப்பை இலவசமாக வழங்கப் போவதாக மார்ச் மாத இறுதியில் அறிவித்தது, மைய அரசு. ஆனால், ஏப்ரல் மாத இறுதியிலும் 3 கோடி குடும்பங்களுக்குக்கூட அப்பருப்பை வழங்கவில்லை எனச் செய்திகள் வெளிவருகின்றன (இந்து, ஏப்ரல் 26).

"பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் தனது கணவருக்கு மாதமொன்றுக்கு நான்காயிரம் ரூபாய்க்கு மருந்து வாங்க வேண்டும். தமிழக அரசு கொடுத்திருக்கும் ஆயிரம் ரூபாய் தனது குடும்பத்தின் சாப்பாட்டு செலவுக்கே பத்தாது எனும்போது நான் எப்படி மருந்து வாங்க முடியும்?" எனக் கேட்கிறார், மதுரையைச் சேர்ந்த சிறு வியாபாரியின் மனைவி.

"கோடை காலம் தொடங்கிவிட்டால் ஜூஸ் வியாபாரம் சூடு பிடித்துவிடும் என்ற தைரியத்தில் கடனை வாங்கி மகளின் கல்யாணத்தை முடித்துவிட்டேன். இப்பொழுது என்ன செய்வதென்றே புரியவில்லை" என்கிறார் தள்ளுவண்டியில் ஜூஸ் வியாபாரம் செய்து வரும் ஒரு பெண்.



கொள்முதல் நிலையங்களுக்குக் கொண்டுவரப்பட்ட நெல் மூட்டைகளை, ஊரடங்கைக் காட்டித் தமிழக அரசு கொள்முதல் செய்ய மறுத்துவிட்டதால், அவை திடீரெனப் பெய்த மழையில் நனைந்து நாசமாகிக் கிடக்கும் அவலம்.

இவ்வாறு சோற்றுக்கும் அப்பால் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டிய இக்கட்டான நிலைக்கு அடிதட்டு மக்களைத் தள்ளிவிட்டிருக்கிறது ஊடரங்கு.

மருத்துவத் துறையைச் சேர்ந்த அறிவியலாளர்கள் கரோனாவிற்கு ஒரு தடுப்பூசியைக் கண்டு பிடித்துப் பொதுமக்களை அகால மரணத்திலிருந்து காப்பாற்றிவிடக் கூடும். ஆனால், தமது வேலையை, கூலியை, வாழ்வாதாரத்தை இழந்து நிற்கும் ஏழைகளை, தொழிலாளி வர்க்கத்தை இந்தப் பாதிப்பிலிருந்து மீட்பதற்கு என்ன தடுப்பூசி இருக்கிறது?

## புதிய தாராளவாதத்தின் கருணை


கரோனா நோய்த் தொற்றை மருத்துவரீதியாகவும் சமூகப் பொருளாதார ரீதியாகவும் எதிர்கொள்ள ஐந்து இலட்சம் கோடி ரூபாய் முதல் பத்து இலட்சம் கோடி ரூபாய் வரை நிதி தேவைப்படும் எனக் கூறப்படும் நிலையில், மோடி அரசு இதுவரை ஒதுக்கியிருக்கும் நிதி இரண்டு இலட்சம் கோடி ரூபாய்தான். இதில் ரேஷன் பொருள் விநியோகம் உள்ளிட்ட நிவாரணங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் 1.70 இலட்சம் கோடி ரூபாயைக் கழித்துவிட்டால், கரோனாவிற்கென ஒதுக்கப்பட்டுள்ள நிதி வெறும் 30,000 கோடி ரூபாய்தான்.

கரோனாவை எதிர்கொள்ள இரண்டு இலட்சம் கோடி டாலர்களை (ஏறத்தாழ 1,40,00,000 கோடி ரூபாய்) ஒதுக்கியிருக்கும் அமெரிக்க அரசே, கரோனா பரவலையும் இறப்புகளையும் கட்டுப்படுத்த முடியாமல் திணறும்போது, அமெரிக்காவைவிட அதிக மக்கள் தொகையையும் ஏழைகளையும் சிதிலமடைந்த பொது சுகாதாரக் கட்டமைப்பையும் கொண்டிருக்கும் இந்தியாவில் வெறும் 30,000 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கப்பட்டிப்பது மக்களின் உயிரைக் கிள்ளுக்கீரையாகக் கருதும் ஆணவமின்றி, வேறென்ன?

அரசாங்கமும்தான் இதற்கு மேல் என்ன செய்துவிட முடியும் என நமக்கு நாமே சமாதானம் சொல்லிக்கொண்டு இந்த விடயத்தைக் கடந்து சென்றுவிடக் கூடாது. ஒரு வர்க்கத்திடமிருந்து எடுக்காமல் இன்னொரு வர்க்கத்திற்குக் கொடுக்க முடியாது என்பதுதான் சமூகப் பொருளாதாரத்தின் அரிச்சுவடி. மக்களின் உயிரையும் வாழ்வாதாரத்தையும் காப்பாற்ற வேண்டுமானால், கார்ப்பரேட் முதலாளி வர்க்கத்தின் மீது கூடுதல் வரி விதிப்பதும், அவ்வர்க்கம் அரசுக்குச் செலுத்த வேண்டிய வரி நிலுவைகளை, கடன் பாக்கிகளை வசூலிப்பதும் தவிர்க்கவியலாது. ஆனால், மோடி அரசோ அதற்கு நேர் எதிரான திசையில், அதாவது சுமையைத் தொழிலாளி வர்க்கத்தின் மீது ஏற்றிவைத்து கார்ப்பரேட் முதலாளி வர்க்கத்தைக் காப்பாற்றிவிடவே விரும்புகிறது.

ஏர்டெல், வோடாஃபோன், ரிலையன்ஸ் கம்யூனிகேஷன்ஸ். ஐடியா, டாடா குழுமம் மற்றும் ஏர்செல் ஆகிய ஆறு தனியார் செல்லிடப் பேசி நிறுவனங்கள் அலைக்கற்றைப் பயன்பாடு தொடர்பாக மைய அரசுக்குச் செலுத்த வேண்டிய கட்டண பாக்கி மட்டும் ஏறத்தாழ 85,000 கோடி ரூபாய். கரோனா தொற்று பரவிவரும் இந்த நெருக்கடியான காலக்கட்டத்தில்கூட இந்தப் பாக்கியை உடனடியாக வசூலிக்க மறுத்துவரும் மோடி அரசு, இந்த நிலுவையைச் செலுத்த அந்நிறுவனங்களுக்கு இருபது ஆண்டு கால அவகாசம் அளிக்க முன்வந்திருக்கிறது.

இந்தியத் தரகு முதலாளித்துவ நிறுவனங்கள் மற்றும் இந்தியாவில் செயல்படும் பன்னாட்டு நிறுவனங்களின் மீது விதிக்கப்படும் கார்ப்பரேட் வரியைச் சற்று உயர்த்துவதன் மூலம் 50,000 கோடி ரூபாய் வரை கூடுதல் வருமானம் ஈட்டுவதற்கான திட்டமொன்றை வருமான வரித்துறையின் இளம் அதிகாரிகள் தயாரித்து வெளியிட்டிருக்கிறார்கள். மோடி அரசு அவர்களது ஆலோசனையை ஏற்க மறுத்திருப்பதோடு, அந்த ஆலோசனையை முன்வைத்த அதிகாரிகள் குறித்துக் குற்ற விசாரணை நடத்த உத்தரவிட்டிக்கிறது.



இந்தியப் பணக்கார வர்க்கம் மற்றும் கார்ப்பரேட் நிறுவனங்கள் இந்திய அரசுக்குச் செலுத்த வேண்டிய வருமான வரி பாக்கி மட்டும் 9.32 இலட்சம் கோடி ரூபாயாகும். இதனை வசூலிப்பது தொடர்பாக நான்கு இலட்சத்திற்கும் மேலான வழக்குகள் வருமான வரித் தீர்ப்பாயங்களிலும் நீதிமன்றங்களிலும் நிலுவையில் உள்ளன (லைவ் மிண்ட் இணைய தள இதழ், மார்ச் 30, 2020).

இந்த நிலுவைக்கு அப்பால், பொருளாதார நெருக் கடியைக் காரணமாகக் காட்டி இந்தியத் தரகு முதலா ளித்துவ நிறுவனங்கள் மீது விதிக்கப்படும் வருமான வரியைக் குறைத்து, 1.45 இலட்சம் கோடி ரூபாய் அளவிற்கு 600 கார்ப்பரேட் நிறுவனங்களுக்குக் கடந்த ஆண்டின் இறுதியில் மொய் எழுதியது, மோடி அரசு.

இந்த வரிக்குறைப்பிற்கு அப்பால், 2014 முதல் 2019 வரையிலான மோடியின் முதல் ஐந்தாண்டு கால ஆட்சியில் மட்டும் இந்தியப் பணக்கார வர்க்கத் திற்கும் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கும் அளிக் கப்பட்ட பல்வேறு வரித் தள்ளுபடிகளின் மூலம் அக்கும்பல் அடைந்த இலாபம் ஐந்து இலட்சம் கோடி ரூபாய்.

மோடி அரசால் கடந்த ஆறு ஆண்டுகளில் 6.66 இலட்சம் கோடி ரூபாய் பெறுமான வாராக் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றன. இதில் விஜய் மல்லையா, நிரவ் மோடி, மெகுல் சோக்ஸி ஆகியோர் வாங்கிய 68,000 கோடி ரூபாய் கடன்களும் அடக்கம்.

68,000 கோடி ரூபாய் தள்ளுபடிக்கு விளக்கம் அளித்திருக்கும் மாமி நிர்மலா சீதா ராமன், இந்தக் கடன்களைக் கணக்குப் புத்த கத்திலிருந்துதான் நீக்கியிருப்பதாகவும், வங்கி கள் அக்கடன்களை வசூலிப்பதற்கு எவ்வித் தடையும் கிடையாது எனக் கூறியிருக்கிறார். பூ வேறாம் புய்பம் வேறாம்!


இந்தியத் தரகு முதலாளிகளும் பன்னாட்டு கார்ப் பரேட் நிறுவனங்களும் கொழுத்துத் திரிய மக்களின் வரிப் பணத்தை, சேமிப்புகளை இப்படிப் பல்வேறு வழிகளில் அக்கும்பலுக்குப் படையல் வைத்துவரும் மோடி அரசு, பொதுமக்களுக்கு என வரும்போது பற்றாக்குறை என மூக்கைச் சிந்துகிறது. இன்னொரு புறத்திலோ இந்நெருக்கடியான காலக்கட்டத்திலும் மக்களிடமிருந்து கொள்ளையடித்துக் கஜானாவை நிரப்பிக் கொள்ளவும் தயங்கவில்லை.

### மக்களைக் கொள்ளையடிக்கிறார் மோடி

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெயின் விலை சரிந்துவரும் வேளையில், பெட்ரோல், டீசல் விற்பனையின் மூலம் தனது வருமானம் சரிந்துவிடாமல் இருப்பதற்காக, பெட்ரோல், டீசல் மீது விதிக்கப்படும் கலால் வரியை கடந்த மார்ச் மாதத்தில் மூன்று ரூபாய் வரை உயர்த்திக் கொண்டது மைய அரசு. இந்த உயர்வின் மூலம் இந்த ஆண்டில் ரூ.39,000 கோடி ரூபாய் கூடுதல் வரி வருமானம் மைய அரசிற்குக் கிடைக்கவிருக்கிறது (தினமணி, 24.03.2020).

தமிழக நெடுஞ்சாலைகளில் உள்ள 48-க்கும் மேற் பட்ட சுங்கச் சாவடிகளில் ஊரடங்கு முடியும் முன்பே கட்டண வசூலைத் தொடங்கிக் கொள்ள அனுமதித் திருக்கும் மைய அரசு, அவற்றுள் 26 சுங்கச் சாவடிகளில் 5 முதல் 12 விழுக்காடு வரை சுங்கக் கட்டணத்தை அதிகரித்துக் கொள்ளவும் அனுமதித்திருக்கிறது.


குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் தமது தொழிலையும், அதனை நம்பியிருக்கும் தொழிலாளர் களையும் காப்பாற்ற இரண்டு இலட்சம் கோடி ரூபாய் வரை நிதி ஒதுக்க வேண்டும் எனக் கோரி வருகிறார்கள். அக்கோரிக்கையை இதுவரை கண்டு கொள்ள மறுக்கும் மோடி அரசு, மியூச்சுவல் பண்டு நிறுவனங்களும், வங்கி சாராத நிதி நிறுவனங்களும் கையில் காசில்லாமல் தடுமாறிவிடக் கூடாது என அக்கறை கொண்டு, பொதுத் துறை வங்கிகள் அந்நிறுவனங்களின் பங்கு பத்திரங் களில் 50,000 கோடி ரூபாய் முதலீடு செய்ய வேண்டு மென வழிகாட்டியிருக்கிறது, ரிசர்வ் வங்கி.




மைய அரசின் செலவீனங்களைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றால், ஆயுதக் கொள்முதலைக் குறைக் கலாம், 20,000 கோடி ரூபாய் செலவில் புதிய நாடாளு மன்றம் கட்டும் திட்டத்தைக் கைவிடலாம். ஆனால், மோடி அரசோ யூரியா அல்லாத மற்ற உரங்களுக்கும் வழங்கப்படும் மானியத்தில் ஏறத்தாழ 700 கோடி ரூபாயைச் சிக்கன நடவடிக்கை என்ற பெயரில் வெட்டி யிருக்கிறது.

மைய அரசின் ஊழியர்களுக்கும் ஓய்வூதியம் பெறு வோருக்கும் இந்த ஆண்டு தர வேண்டிய பஞ்சப்படி உயர்வை நிறுத்தி வைப்பதன் மூலம் ஏறத்தாழ 37,530 கோடி ரூபாயை அவர்களிடமிருந்து பிடுங்கிக்கொள்ளத் திட்டமிட்டிருக்கிறது.

தொழிலாளர்களின் வருங்கால வைப்பு நிதி மற்றும் நடுத்தர வர்க்கத்தினர் முதலீடு செய்யும் சிறு சேமிப்புத் திட்டங்களுக்கு வழங்கப்பட்டு வந்த வட்டியை ஏப்.1, 2020 முதல் 1.4 சதவீதம் அளவிற்குக் குறைக்கும் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.




“கரோனா ஊரடங்கு காலத்தில் தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்க வேண்டும் எனத் தொழில் நிறுவனங்களை வற்புறுத்த முடியாது” எனத் தொழிலாளர் நலனுக்கான நாடாளுமன்ற நிலைக்குழு நாடாளுமன்ற சபாநாயகரிடம் அறிக்கை அளித்திருக்கிறது. மேலும், 300 பேர் வரை வேலை செய்யும் தொழிலகங்கள் ஆட்குறைப்பு செய்யவும், நிறுவனத்தை மூடவும் முடிவெடுத்தால், அதனைத் தடுக்காமல் அந்நிறுவனங்களுக்குச் சிறப்பு அனுமதி வழங்கலாம் என்றும் பரிந்துரைத்திருக்கிறது, அக்குழு.

### எது அபாயகரமானது?

பொதுமக்களின் கண்ணில் சுண்ணாம்பும் கார்ப்பரேட் முதலாளியின் கண்ணில் வெண்ணெயும் தடவும் இந்த அணுகுமுறையைப் பொருளாதார மொழியில் சொன்னால், அதன் பெயர்தான் புதிய தாராளவாதக் கொள்கை. பணமதிப்பழிப்பு, ஜி.எஸ்.டி. ஆகிய மக்கள் விரோத நடவடிக்கைகளின் அடிப்படையாக இருப்பது இத்தாராளவாதக் கொள்கைதான். உணவு, கல்வி, பொது சுகாதாரம், மருத்துவம், பொதுப் போக்குவரத்து உள்ளிட்ட மக்களின் அடிப்படைத் தேவைகளுக்கு வழங்கப்பட்டு வந்த மானியங்களைப் படிப்படியாக வெட்டி, அவற்றின் சுமை முழுவதையும் படிப்படியாக மக்கள் மீது ஏற்றி வைத்து வருவதும் இத்தாராளவாதக் கொள்கைதான். இருநூற்று நாற்பத்தைந்து ரூபாய் மதிப்பு கொண்ட அதிவிரைவு கரோனா வைரஸ் பரிசோதனைக் கருவியை அறுநூறு ரூபாய்க்கு மாநில அரசுகளிடம் விற்றுத் தனியார் நிறுவனங்கள் கொள்ளை இலாபம் அடைய ஏற்பாடு செய்து கொடுத்திருப்பதும் இப்புதிய தாராளவாதக் கொள்கைதான்.

தனியார்மயம்-தாராளமயப் பொருளாதாரக் கொள்கைகள் மூலம்தான் நாடு வல்லரசாக முடியும் என ஆரூடம் சொன்னார்கள். ஆனால், இன்று நாம் காண்பதென்ன? தனியார்மயம்-தாராளமயத்தால் ஆதாயம் அடைந்த வர்க்கங்கள் தமது பங்களாக்களில், பண்ணை வீடுகளில், அடுக்குமாடிக் குடியிருப்புகளில் பாதுகாப்பாக உட்கார்ந்துகொண்டு, வேலையிழந்து, வாழ்வாதாரத்தை இழந்து அடுத்த வேளை சோற்றுக்கு அல்லாடும் மக்களைப் பார்த்து தெருவில் இறங்காதே என உத்தரவிடுகிறார்கள்.

கரோனா வைரஸின் பரிணாமம் இயற்கை நிகழ்வாக இருந்தாலும், இப்படிப்பட்ட கொள்ளை நோயைத் தோற்றுவிக்கும் வைரஸ்கள் உருவாகக் காரணமாக அமைவது முதலாளித்துவத்தின் இலாப வெறிதான். வளர்ச்சி என்ற பெயரில் இயற்கையை, சுற்றுப்புறச் சூழலை வகைதொகையின்றி அழிக்கும் பொருளாதார நடவடிக்கைகள்தான் கரோனா போன்ற வைரஸ்கள் உருவாகும் வாய்ப்புகளை ஏற்படுத்துகின்றன என்பதையும்; சார்ஸ், நிபா, எபோலா என கரோனாவிற்கு முன்னதாக உலக மக்களை அச்சுறுத்திய கொள்ளை நோய்கள் உருவாவதற்கும் முதலாளித்துவ பெருவீத உற்பத்தியில் காணப்படும் அராஜகம்தான் முதன்மைக் காரணம் என்பதையும் இப்பொழுது பல அறிவியலாளர்களும் ஏற்றுக் கொள்கிறார்கள் (இந்து, ஏப்ரல் 26).

இந்த முதலாளித்துவ அராஜக உற்பத்தி இயற்கையை மட்டும் அழிக்கவில்லை. தொழிலாளர்களின் கூலியை வெட்டுகிறது, அவர்களது வேலையை நிச்சயமற்றதாக மாற்றுகிறது, சிறுதொழில்களை அழிக்கிறது, நிலத்தை அபகரித்துக் கொள்கிறது. சுருக்கமாகச் சொன்னால், பெருவாரியான மக்களின் உயிரையும் வாழ்வாதாரத்தையும் தினம் தினம் கேள்விக்குறியாக்குகிறது.

அதனால்தான் கரோனா போன்ற வைரஸ்களைவிட அபாயகரமானது தனியார்மய, தாராளமய வைரஸ் எனக் கூறுகிறோம். முன்னதற்கு மருத்துவர்கள் தடுப்பூசியைக் கண்டுபிடித்துவிடக் கூடும். பின்னதற்கான தடுப்பூசியை மக்கள்தான் தமது சொந்த அனுபவத்திலிருந்துதான் தேர்ந்தெடுக்க வேண்டும்.

முதலாளித்துவம் ஏற்படுத்திவரும் பேரழிவா அல்லது சோசலிசமா என்பதுதான் இன்று உலக மக்கள் முன் நிற்கும் கேள்வி.

முதலாளித்துவ நெருக்கடிகளும், கரோனா போன்ற தொற்று நோய்களால் ஏற்படும் இழப்புகளும் சோசலிசத்தைத் தேர்ந்தெடுக்கும்படி மக்களை உந்தித் தள்ளுவதை யாராலும் மறுக்கவியலுமா?

■ ஆர்.ஆர்.டி.

# ஊரடங்கின் கீழ் இருவேறு இந்தியாக்கள்!

**சிலரால் சமூக இடைவெளியைக் கடைப்பிடிக்க முடியுமெனினும், சமூகப் பாதுகாப்பற்ற பெரும்பான்மையான இந்தியர்களால் அதனை முற்றிலுமாகக் கடைப்பிடிக்க முடியாது.**

**வெ**றும் நான்கு மணி நேர கால அவகாசத்தில் பிரதமர் நரேந்திர மோடி ஊரடங்கை அமல்படுத்திய தற்குக் காரணம் என்னவாக இருந்திருக்கக் கூடும்? பொதுமக்களை வீட்டுக்குள்ளேயே இருத்தி வைத்திருக் கவும், சமூக இடைவெளியை கண்டிப்பான முறையில் நடைமுறைப்படுத்துவதும்தான் இதன் தேவையெனில், இந்நடவடிக்கை படுமோசமாகத் தோற்றல்லவா போயிருக்கிறது! இலட்சக்கணக்கான புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் பகல், இரவு, வெயில், மழை எனப் பாராமல் நடந்து, வெட்ட வெளிகளில் படுத்துறங்கி, போலீசின் பார்வையிலிருந்து சாதுர்யமாகத் தப்பி, சில சமயங்களில் லாரிகளின் தார்ப்பாய்களுக்குள்ளும்கூட ஒளிந்துகொண்டு ஏதாவதொரு வழியில் முண்டிய டித்துக் கொண்டு தம் வீடுகளுக்குத் திரும்ப முயன்று வருகிறார்கள். கோவிட்-19 நோய்த்தொற்றால் இதுவரை இறந்தோரின் எண்ணிக்கைக்கு ஏறத்தாழ நிகராக, இந்த மனிதத்தன்மையற்ற பயணத்தால் பலர் இறந் துள்ளனர். இவர்களுக்கெல்லாம் மோடி என்ன பதில் சொல்லப் போகிறார்? சுதந்திர இந்தியாவில் மனிதர் களால் தூண்டப்பட்ட மிகப்பெரும் துயரமான இடப் பெயர்வு இது. இவ்விவகாரத்தை இன்னும் சிறப்பாகக் கையாண்டிருக்க முடியுமெனினும், துன்பகரமாக நடந்துவிட்டிருக்கிறது.

### திட்டமிடாமல் எடுக்கப்பட்ட முடிவு

முன்னெச்சரிக்கையோடு வந்த ஒரு பேரழிவு தான் கோவிட்-19. எனவே, தன்னிச்சையான, திட்டமிடாத மற்றும் மோசமான தயாரிப்புடன் கூடிய இந்த முடிவு எவ்வகையிலும் நியாயமானதல்ல. மேலிருந்து திணிக்கப்பட்ட பிரதமரின் இரவு 8 மணி ஊரடங்கு அறிவிப்பு நடைமுறை சாத்தியமான மற்றும் அத்தியாவசிய நிவாரண நடவடிக்கைகளை உள்ளடக்கியதாக அமையவில்லை. இதற்குத் தயார் நிலையில் இல்லாத மக்களிடம் குழப்பத்தையும் நிச்சயமற்ற, பாதுகாப்பற்ற நிலையையும் இது ஏற்படுத்தியது. இந்த அறிவிப்பினைத் தொடர்ந்து, மிகத் துரிதமாகவும், மறுபடியும் எவ்வித முன்னறிவிப்புமின்றியும் அனைத்துப் பொதுப் போக்கு வரத்துக்களும் ரத்து செய்யப்பட்டன. இலட்சக்கணக் கான புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் வாழ்வை முடக்கிப் போட்ட இந்த ஒருதரப்பான ஊரடங்கு உத்தரவு தோல்வியில்தான் முடியும். வேலை இல்லை, அரசிடமிருந்து எந்த உத்தரவாதமும் இல்லை, எதிர் காலம் குறித்த அச்சம் எல்லாமும் சேர்ந்து, நம்மைப் போலவே, புலம்பெயர்ந்த தொழிலாளர்களும் தர்க்கரீதி யாகத் தொலைதூரத்திலுள்ள தமது வீடுகளில் தமது பாது காப்பைத் தேடி ஓடினர். அதனால்தான், ஏதாவது ஒரு வகையில், நடந்தேனும்கூட தம் வீடுகளுக்குச் செல்ல முடிவெடுத்தனர். கொள்கை வகுப்பாளர்களுக்கும், ஆளும் மேட்டுக்குடி வர்க்கத்துக்கும் முறைசாரா தொழிலாளர்களின் வாழ்நிலை பற்றி எந்தவொரு புரிதலும் இல்லை.

அதிவேகமாக அடுத்தடுத்து விடுக்கப்பட்ட முரண்பாடான மற்றும் ஒருங்கிணைக்கப்படாத அரசு உத்தரவுகள், குழப்பத்தை அதிகரித்தன. முதலில் பேருந்து சேவைகள் நிறுத்தப்பட்டன. பின்னர் அந்த உத்தரவுகள் இரத்து செய்யப்பட்டன. உதாரணத்திற்கு, இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் தங்களது வீடு நோக்கி நடந்து சென்று கொண்டிருக்கையில், மார்ச்-29 அன்று மத்திய உள்துறை அமைச்சகம் அவர்களைத் தடுத்து நிறுத்தி 14 நாட்கள் தனிமைப்படுத்தி வைக்கு மாறு (Quarantine) உத்தரவிட்டது. பிரச்சாரகர்களோ சமூக இடைவெளியைக் கடைப்பிடிக்க வேண்டிய கட்டாயத்தைத் திரும்பத்திரும்பக் கூறிக் கந்தலாகிப் போன அறிக்கைகளை வெளியிட்டு வந்தனர். ஒரே அறையில் 10 பேர் நெருக்கியடித்து வாழ்ந்துவரும் இத்தொழிலாளர்களின் வாழ்க்கையைப் பற்றி அறியாத வர்களா இவர்கள்! இப்போலி அறியாமை இத்தகைய அறிக்கைகளைப் பொருளற்றதாக்கி விடுகிறது. நகர்ப்புற சேரிப் பகுதிகளில் சமூக இடைவெளி என்பது எதார்த்த மற்ற கருத்தாக்கமாகும். முறைசாரா தொழிலாளர்கள் என்று அழைக்கப்படும் இப்பிரிவினரின் மோசமான சூழ்நிலைகளை அரசு உணர்ந்து, அங்கீகரித்து அதனைச் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கவில்லையெனில் எந்த உத்தரவும் வேலைக்காகாது. பெருமளவிலான உணவுப் பொருட்களை இருப்பில் வைத்துக்கொண்டு தனித்த அறைகள் கொண்ட விசாலமான வீடுகளில் பாது காப்பாக வசிப்பவர்கள் இந்தப் பிரச்சினையைப் புறந் தள்ளிவிடலாமென விரும்ப முடியாது.

வைரஸ் தாக்குதலுக்குப் பலியாகிவிடுவோம் எனத் திகிலடைந்துள்ள மேட்டுக்குடியினரின் அச்ச உணர்வுக்கு மிகவிரைவாக எதிர்வினையாற்றும் வகையில் இந்த ஊரடங்கு தானே உருவமெடுக்கிறது. களநிலைமைகளைப் புரிந்து கொண்டும், அந்நிலைமை களின் மீது பரிவு கொண்டும் ஒரு செயல்திட்டத்தைத் தயாரிப்பதற்கான குறைந்தபட்ச சிந்தனைத் திறனும் நடைமுறையும் (அரசிடம்) மிகச் சிறிதளவே காணக் கிடைக்கிறது.

நாம் உருவாக்கியிருக்கும் இரண்டு இந்தியாக் களுக்கு இடையிலான கூர்மையான பிளவை இந்த வைரஸ் திருப்பிப் போடுகிறது. வெளிநாடு களிலிருந்து திரும்பிய (இந்தியர்களின்) தடித்தனத் தினால்தான் கோவிட்-19 பரவியது. அவர்களுள் பலர் வசதியானவர்கள், செல்வாக்குமிக்கவர்கள் என்ப தோடு, தொற்றொதுக்கம் (Quarantine) செய்யப் பட்டதையும் மீறியவர்கள். இந்த ஊரடங்கு ஏழைகள் மற்றும் அமைப்புசாரா தொழில்கள் மீது ஏற்படுத்தி யிருக்கும் தாக்கம், அதனின் சமூக - பொருளாதார நிலைமைகளுக்கு நேர்எதிர் விகிதத்தில் அமைந் திருக்கிறது. இதனால் ஏற்பட்ட விரக்தி, அவர்களின் கண்ணியத்தையோ, சுதந்திரத்தையோ பறித்துவிட வில்லை. ஆச்சரியமூட்டும்வகையில் அவர்கள் இதுவரை தங்கள் கோபத்தை வெளிப்படுத்தவில்லை. வீட்டுக்கு செல்ல வேண்டுமென்பதே அவர்களின் விருப்பமாக இருக்கிறது.



அரசின் பார்வையில் புலம் பெயர்ந்த தொழிலாளர்கள்
கண்ணியம் நிறைந்த மனிதர்கள் இல்லை;
வெறும் பொதி மூட்டைகள்!

இந்த ஊரடங்கின் (முதல்) ஒரு வாரம், இந்தியாவின் முறைசாராத் தொழிலாளர்களின் வாழ்நிலை எதார்த் தத்தின் மீதான அரசின் அக்கறையின்மையையும் அலட் சியத்தையும் கொடூரமாக வெளிக்காட்டியுள்ளது. வருமானத்திற்கான உத்திரவாதம், போக்குவரத்து அல்லது உணவு ஏதுமில்லாமல் அல்லாடுவதைவிட, வீட்டிற்கு நடந்து செல்வதே இந்தத் தொழிலாளர்களின் தர்க்கரீதியான தேர்வாக அமைந்துவிட்டது. முகக்கவசம் என ஏதோவொன்றை அணிந்துகொண்டு, ஒவ்வொரு நாளும் பல்வேறு மாநிலங்களினூடே பல மைல் தூரம் நடந்துசெல்லும் ஆணும், பெண்ணும், சிறு குழந்தை களும் ஒருவேளை தாம் இறக்க நேரிட்டால்கூட அது தம் வீட்டிலேயே நடக்கட்டும் என்பதை வெளிப்படை யாகவே தெரிவித்தனர்.

## உணவு மற்றும் போக்குவரத்தை உறுதி செய்தல்

உண்மையான ஆதரவு கிடைத்தால் மட்டுமே தாம் இருக்குமிடத்தில் மக்கள் தங்கியிருப்பார்கள். மத்திய உள்துறை அமைச்சகம் உத்தரவுப்படி இந்தத் தொழிலாளர்களை 14 நாட்கள் தொற்றொதுக்க (Quarantine) முகாம்களில் இருத்தி வைக்க கட்டாயப் படுத்துவது நடைமுறைக்கு ஒவ்வாதது மட்டுமல்ல, சாத்தியமில்லாததுமாகும். இந்த மனிதப் பேரவலத் திற்கு உடனடியாகச் செவிமடுத்துப் போக்குவரத்து வசதிகளை ஏற்பாடு செய்து தந்த அதிகாரிகள் மீது நடவ டிக்கை எடுக்கப் பிறப்பிக்கப்பட்ட எதிர் உத்தரவுகள் அல்லது புலம்பெயரும் தொழிலாளர்களைச் சாலை யிலேயே சிறைவைக்குமாறு மிக அலட்சியமாகக் கட்டளையிட்ட அரியானா அரசின் உத்தரவு ஆகியவை தான் மிகவும் மோசமானவை. இந்தத் தொழிலாளர்கள் குற்றவாளிகளோ, தப்பியோடுபவர்களோ கிடையாது.

வெளிநாடுகளில் சிக்கியிருந்த இந்தியர்களைக் கணிசமான தொகையைச் செலவழித்து இந்தியாவிற்குத் திரும்ப அழைத்துவர அரசால் முடியுமெனில், தொழி லாளர்கள் தமது வீடு திரும்புவதற்கு மேம்பட்ட போக் குவரத்து வசதியைச் செய்து தர முடியாமல் போனதற்கு எந்தவொரு காரணமும் இருக்க முடியாது. நடந்தே வீடு திரும்புவது என ஏற்கெனவே முடிவெடுத்து நடக்கத்



இத்தாலிக்குப் படிக்கச் சென்ற இந்திய மேட்டுக்குடி மாணவர்களைப் பத்திரமாகவும், கண்ணியமாகவும், இலவசமாகவும் அங்கிருந்து விமானத்தில் அழைத்து வந்தது மோடி அரசு.

தொடங்கியவர்கள், தாம் செல்லும் வழித் தடத்தில் மருத்துவப் பரிசோதனைகள், தமக்குத் தேவையான உணவு, சாத்தியமான சுகாதார வழிகாட்டுதல்கள், தமது மனதில் எதிர்காலம் குறித்த நம்பிக்கை ஆகியவை கிடைக்கப் பெற்று, பாதுகாப்பாகத் தமது வீடுகளைச் சென்றடைந்திருக்க வேண்டும். அவர்கள் தமது கிராமங்களைச் சென்றடைந்ததும், அவர்களைக் கண்காணிப்பின் கீழ் கொண்டுவரலாம், அவர்களை மேலும் பரிசோதனைகளுக்கு உட்படுத்தலாம், தனிமைப்படுத்தலாம், தேவையெனில் அவர்களைத் தொற்றொதுக்கமும் (Quarantine) செய்யலாம். அடுத்த சில மாதங்களுக்கு அவர்களது குடும்பங்களுக்குத் தேவையான உணவு, மருத்துவ தேவை மற்றும் வருமானத்திற்கும் குறைந்தபட்ச உத்திரவாதங்களை அரசு வழங்கியிருக்க வேண்டும். அவர்கள்தான் குடும்பத்தின் முதன்மையான வருமானமீட்டுபவர்கள் என்பதையும், ஊரில் உள்ள தங்களது குடும்பத்தினரின் வாழ்வு குறித்த தவிப்புதான் அவர்களை வீடுகளை நோக்கி இழுக்கிறது என்பதையும் நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

கடுமையான உத்தரவுகளோ அல்லது வெற்றுரைகளோ வேலைக்காகாது. அரசாங்கங்கள், தலைமைத்துவத்தையும், தீர்வையும், பொறுப்பையும், பரிவையும் காட்ட வேண்டும். வளங்கள் திறம்படவும் உகந்த முறையிலும் பயன்படுத்தப்பட வேண்டும். நியாய விலைக் கடைகளுக்கு ஒவ்வொரு மாதமும் 40 இலட்சம் டன் உணவு தானியங்கள்தான் தேவைப்படும் நிலையில், தற்போது 5.8 கோடி டன் உணவுதானியங்களை சேமிப்புக் கிடங்கில் பதுக்கி வைத்திருப்பதற்கு எவ்வித சால்ஜாப்பும் சொல்ல முடியாது. உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பயன்பெறும் அட்டைதாரர்களுக்கு மூன்று மாதங்களுக்கு இலவச உணவுதானியங்கள் வழங்கச் சொன்ன நிதியமைச்சரின் அறிவிப்பைத் தாண்டி, பலரும் கோரிக்கை வைத்ததைப் போல, குடும்ப அட்டை இல்லாத மக்கள் பசியால் வாடுவதைத் தவிர்க்க, எவ்வித நிபந்தனையுமின்றிக் குறைந்தபட்சமாக மேலும் ஒரு மாதத்திற்குரிய பங்கை மாநிலங்களுக்கு உடனடியாக விநியோகிக்கும் விதத்தில் தனது கையிருப்பில் உள்ள வளத்தை மைய அரசு பயன்படுத்த வேண்டும். இன்று பசிப் பிணி தெருக்களில் மட்டும் நடமாடவில்லை, மொத்த நாட்டையே வேட்டை மிருகம் போலப் பின் தொடருகிறது.

பொருள் வளங்கள் போதுமான அளவில் நம் நாட்டில் உள்ளன. கரோனா தொற்று அதிகமுள்ள ராஜஸ்தானிலுள்ள பில்வாரா போன்ற மாவட்டங்கள், இந்த நெருக்கடியைக் கையாள்வதற்காக தனியார் மருத்துவமனைகள், தங்கும் விடுதிகள், கல்லூரி விடுதிகளைப் பயன்படுத்திக் கொள்ளும் பொருட்டுத் தமது வசம் எடுத்துள்ளன. இதுபோன்ற வளங்கள் அரசிடமோ அல்லது தனியார் கைகளிலோ யாரிடம் இருந்தாலும் அவை அனைவருக்கும் கிடைக்கும் வகையில், மிகப்பெரும் தேவையின் அடிப்படையில், அவற்றைப் பயன்பாட்டுக்குக் கொண்டுவர வேண்டிய தருணமிது.

துப்புரவுப் பணியாளர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்கள் ஆகிய முன்னணி செயற்பாட்டாளர்கள் ஆர்வத்துடன் செயல்பட்டு, தமது சேவைகளை விரிவாகச் செய்து கொண்டிருப்பதை நாடு முழுக்க சீராகவும், தொடர்ச்சியாகவும் கிடைப்பதை அரசு உத்திரவாதப்படுத்த வேண்டும். அதனுடன் குடிமைச்சமூகம் மிகவும் பாதிக்கப்படக் கூடியவர்களைக் கண்காணித்து ஆதரவளிக்க வேண்டும். நம்முடைய அனைத்து அத்தியாவசிய சேவைகளின் அளிப்புச் சங்கிலிகள் பராமரிக்கப்பட வேண்டுமெனில், அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்புசாரா பிரிவுகளைச் சார்ந்து இந்தச் சேவைகளைச் செய்துவரும் முன்னணி செயல்பாட்டாளர்களுக்குக் கருவிகளும், விரைவான பயிற்சியும், போதுமான காப்பீடும் வழங்கப்பட வேண்டும். பாரபட்சமின்றி, அனைத்து மனித உயிர்களும் விலை மதிப்பற்றவைதான். யார் ஒருவரையும் ஒதுக்கித் தள்ளிவிட முடியாது.

சமூகப் பாதுகாப்பு இல்லாமல் சமூக இடைவெளி இருக்க முடியாது. ஒரு தேசமாக நாம் இந்த அபாயத்திலிருந்து மீண்டு வருவதை விமர்சனரீதியாக அணுகினால், நம்மிடையே உள்ள ஏற்றத்தாழ்வுகளை நாம் குறைப்பதோடு, தளர்ந்துவிடாமல், விடாமுயற்சியுடன் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். ஏற்கெனவே ஊறிப்போயுள்ள தனிநபர் மனப்பாங்கை இந்தக் கட்டாய தனிமைப்படுத்தல் மேலும் வலுப்படுத்துகிறது. கோவிட்-19 உற்பத்தியாளர்களையும், நுகர்வோரையும் ஒருசேர பாதிக்கிறது. இந்த ஒன்றிணைக்கப்பட்ட உலகில் நாம் ஒன்றாக வாழ்வோம் அல்லது மடிவோம்.

ஆங்கில இந்து நாளிதழில் (31.03.2020) மஜ்தூர் கிஸான் சக்தி சங்கடன் எனும் அமைப்பில் பணியாற்றி வரும் சமூகச் செயற்பாட்டாளர்கள் அருணா ராய், நிகில் தே ஆகிய இருவரும் இணைந்து எழுதிய Locking down two different Indias என்ற கட்டுரையின் மொழியாக்கம்.

**மொழியாக்கம்: பூங்குழலி**

# மோடி – எடப்பாடி:

# ஜாடிக்கேத்த மூடி!

**கரோனா தொற்றைக் களத்தில் எதிர்கொண்டு வரும் மாநில அரசுகளுக்குப் போதிய நிதி ஒதுக்க மறுக்கிறது, மோடி அரசு. அதைக் காரணமாக வைத்து, மதிப்புக் கூட்டு வரி உயர்வு, டாஸ்மாக் திறப்பு எனத் தமிழக மக்களை வதைக்கிறது, எடப்பாடி அரசு.**

“நிதியைத் தாருங்கள், இல்லையேல் மாநிலங்களுக்கு அதிகாரங்களை வழங்குங்கள்” என மோடி அரசை எச்சரிக்கும் விதத்தில் தெலுங்கானா மாநில முதல்வர் சந்திரசேகர் ராவ் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

கேரள மாநில நிதியமைச்சர் தாமஸ் ஐசக் மைய அரசிடமிருந்து நிதியைப் பெறுவதற்கு பா.ஜ.க. அல்லாத மாநில அரசுகளின் நிதியமைச்சர்களைக் கொண்ட குழுவை அமைத்து, அக்குழுவின் மூலம் மைய அரசிற்கு அழுத்தம் கொடுக்கப் போவதாகக் கூறியிருக்கிறார்.

பிரதமர் மோடியுடன் காணொளி வழியாக நடந்த ஆலோசனைக் கூட்டத்திலும், கடிதங்களின் வழியாகவும் கரோனாவை எதிர்கொள்ள தமிழகத்திற்குத் தேவையான நிதியையும், மைய அரசு தமிழகத்திற்குத் தர வேண்டிய வருடாந்திர வரி நிலுவைகளையும் தருமாறு வற்புறுத்தியிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார், தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி.

கரோனா தொற்று என்ற பேரிடரை எதிர்கொண்டு வரும் ஒவ்வொரு மாநிலமும் எந்தளவிற்கு நிதிப் பற்றாக்குறையில் சிக்கித் திணறுகின்றன என்பதையும், இந்நெருக்கடி நேரத்திலும்கூட மாநிலங்களுக்குக் கொடுக்க வேண்டிய பல்வேறு நிதிகளை, நிலுவைத் தொகைகளை முழுமையாக வழங்காமல் மைய அரசு இழுத்தடித்து வருவதையும் ஆங்கில இந்து நாளிதழ் தினந்தோறும் செய்திக் கட்டுரையாக வெளியிட்டு வருகிறது.

தமிழகத்தை எடுத்துக்காட்டாகக் கொண்டால், கரோனா நோய்த் தொற்றை எதிர்கொள்ளுமளவிற்கு மாநில அரசின் மருத்துவக் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்காக 3,000 கோடி ரூபாயும், இந்நோய்த் தொற்றின் காரணமாக எழுந்துள்ள சமூகப் பொருளாதார சிக்கல்களை எதிர்கொள்ள ரூ.9,000 கோடியும் ஒதுக்க வேண்டுமென கோரிய தமிழக அரசு, தேசியப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து உடனடியாக 1,000 கோடி ரூபாயை ஒதுக்குமாறு கேட்டிருந்தது.

தமிழக அரசின் இந்தக் கோரிக்கைக்கு மைய அரசு காலத்தால் ஒதுக்கிய நிதி எவ்வளவு தெரியுமா? பூஜ்யம்! அதிர்ச்சியாக இருந்தாலும் அதுதான் உண்மை. தமிழகம் மட்டுமின்றி, கேரளா உள்ளிட்ட பல மாநிலங்களுக்கும் கரோனா தொற்றை எதிர்கொள்ள மைய அரசு இதுவரை ஒரு பைசாகூட ஒதுக்கவில்லை.

அதேசமயம், மைய அரசு தனது வரி வருவாயிலிருந்து ஒவ்வொரு மாநிலத்திற்கும் தர வேண்டிய பங்கு, வருவாய்ப் பற்றாக்குறை பங்கு, ஜி.எஸ்.டி. செயல்படுத்தப்பட்டதால் ஏற்பட்டிருக்கும் இழப்பீட்டை ஈடுகட்ட ஒதுக்கப்படும் நிதி ஆகியவற்றில் ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஏற்றவாறு ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை ஒதுக்கிவிட்டு, அதனையே கரோனாவை எதிர்கொள்ள ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களை மாநிலங்களுக்கு ஒதுக்கிவிட்டதைப் போல விளம்பரம் தேடி வருகிறது.

இவ்வாறு ஒதுக்கப்பட்ட நிதியிலும் ஓரவஞ்சனை நடந்திருக்கிறது. எடுத்துக்காட்டாக, மைய அரசு தமிழகத்திற்குச் சமீபத்தில் ஒதுக்கிய 6,420 கோடி ரூபாயில், 510 கோடி ரூபாய் மாநிலப் பேரிடர் நிதியிலிருந்து ஒதுக்கப்பட்டிருக்கிறது. முதலாவதாக, இந்த

மாநில முதல்வர்களுடன் கலந்துரையாடல் என்ற நாடகம்.



ஒதுக்கீடு கரோனாவை எதிர்கொள்வதற்கான சிறப்பு ஒதுக்கீடு கிடையாது. வருடாவருடம் ஒதுக்க வேண்டிய பேரிடர் நிதியாகும். இரண்டாவதாக, தேசியப் பேரிடர் நிதியிலிருந்துதான் 1,000 கோடி ரூபாய் தமிழகம் ஒதுக்கக் கோரியிருந்ததேயொழிய, மாநிலப் பேரிடர் நிதியிலிருந்து அல்ல. இதிலும்கூட தமிழகம் கேட்ட தொகை கொடுக்கப்படவில்லை என்பது ஒருபுற மிருக்க, பா.ஜ.க. ஆளும் உ.பி., ம.பி., பீகார் ஆகிய மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகையைவிடக் குறைவு.

இந்த நிதி ஒதுக்கப்பட்ட சமயத்தில் 165 நோயாளி களைக் கொண்டிருந்த ம.பி.க்கு 910 கோடி; 305 நோயாளிகளைக் கொண்டிருந்த உ.பி.க்கு 966 கோடி; வெறும் 32 நோயாளிகளைக் கொண்டிருந்த பீகாருக்கு 708 கோடி ரூபாயை ஒதுக்கிய மோடி அரசு, 571 நோயாளிகளைக் கொண்டிருந்த தமிழகத்திற்கு 510 கோடியும், கேரளாவுக்கு வெறும் 157 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கியது.

கரோனா தொற்றைக் கட்டுப்படுத்த முடியாமல் திணறுகின்ற, பா.ஜ.க. வாக்குவங்கி அதிகமுள்ள மகாராஷ்டிராவுக்கு 1,611 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்ட நிலையில், அந்நோயைக் கட்டுப்படுத்துவதில் நல்ல முன்னேற்றம் கண்டிருக்கும் கேரளாவிற்கு 157 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கப்பட்டிருப்பது ஓரவஞ்சனை மட்டுமல்ல, தண்டனையுமாகும்.

●●●


**க**ரோனாவை எதிர்கொள்வதில் இதுவரை மத்திய மோடி அரசு செய்தது என்ன? பிரதமர் நரேந்திர மோடி இரண்டு முறை தொலைக் காட்சியில் தோன்றி, இந்திய மக்களுக்கு அருளுரை செய்தார். ஊரடங்கு என்ற இடியை இறக்கினார். மூன்று முறையோ நான்கு முறையோ மாநில முதல்வர்களுடன் காணொளி மூலமாகக் கலந்துரையாடினார். கைதட்டச் சொன்னார், விளக்கேற்றச் சொன்னார். மத்தியக் குழு என்ற பெயரில் ஓர் உளவுப் படையை மாநிலங் களுக்கு அனுப்பி வைத்தார்.

இதற்கு மாறாக, பல்வேறு குறைபாடுகள் இருப் பினும் மாநில அரசுகள்தான் பரிசோதனைகளை நடத்து கின்றன; தீவிரமாகப் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கின்றன; மிதமாகப் பாதிக்கப்பட்ட நோயாளிகளைத் தனிமைப்படுத்திப் பராமரிக்கின்றன.

தமிழகத்திற்கு ஜி.எஸ்.டி. வரி விதிப்பிலிருந்து கிடைக்கும் பங்கு தவிர, ஒவ்வொரு மாதமும் 10,000 கோடி ரூபாய் வரை மாநில அளவிலேயே வரி வருவாயை ஈட்டி வந்தது. இவ்வருவாய் கடந்த இரண்டு மாதங்களாக சுருங்கிப் போய்விட்ட நிலை யிலும், கரோனா தொற்றை எதிர்கொள்ளும் வகையில் இதுவரை 3,000 கோடி ரூபாய்க்கு மேல் தமிழக அரசு செலவழித்திருப்பதாகக் கூறப்படுகிறது. இதிலொரு சிறிய பங்கைக்கூட ஏற்றுக் கொள்ள மறுக்கும் மோடி அரசு, உதவிக்குப் பதிலாக உபதேசங்களையும் உத்தரவுகளையும் மட்டுமே வாரிவழங்கி வருகிறது.

ஜி.எஸ்.டி. வரி விதிப்பைத் திணித்ததன் மூலம், மாநிலங்களின் நிதி ஆதாரத்தின் அடித்தளத்தையே ஆட்டங்காண வைத்துவிட்டது, மைய அரசு. ஜி.எஸ்.டி. வரி விகிதத்தைத் தீர்மானிப்பது மற்றும் வசூலிப்பது ஆகிய அதிகாரங்களை மைய அரசு எடுத்துக்கொண்டதன் மூலம் ஒவ்வொரு மாநிலமும் மைய அரசின் தயவை எதிர்பார்த்திருக்கும் அடிமை நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டன.

இந்த ஜி.எஸ்.டி வரிக்கு அப்பால், தனிநபர் வருமான வரி, கார்ப்பரேட் நிறுவனங்கள் மீது விதிக் கப்படும் வருமான வரி, செஸ் வரிகள், ரிசர்வ் வங்கி, பொதுத்துறை வணிக வங்கிகள், காப்பீடு நிறுவனங்கள், பொதுத்துறை தொழிலகங்கள் ஆகியவற்றிடமிருந்து பெறப்படும் இலாப ஈவு எனப் பல்வேறு வழிகளில் வருடத்திற்கு பல இலட்சம் கோடி ரூபாய்க்கு வருமானம் ஈட்டி வருகிறது.




சமீபத்தில் பெட்ரோல், டீசல் மீது விதிக்கப்படும் கலால் வரியை இரண்டு தவணைகளில் உயர்த்திக் கொண்டதன் மூலம் இந்த நெருக்கடியான ஆண்டில் மட்டும் ஏறத்தாழ இரண்டு இலட்சம் கோடி ரூபாய் கூடுதல் வரி வருமானம் மைய அரசிற்குக் கிடைக்கும் எனக் கூறப்படுகிறது. இந்தக் கலால் வரி ஒவ்வொரு மாநில மக்களிடமிருந்தும் பிடுங்கப்படும் வரி. இப்படிப் பிடுங்கப்பட்ட பணத்திலிருந்துகூட கரானாவை எதிர் கொண்டு வரும் மாநிலங்களுக்கு சிறப்பு நிதியுதவி அளிக்க மோடி அரசு மறுக்கிறதென்றால், இந்த அரசை கரோனா வைரஸைவிட அபாயகரமான ஒட்டுண்ணி என்றுதான் கூற வேண்டும்.

கரோனாவை எதிர்கொள்ள மாநிலங்களுக்கு ஒரு இலட்சம் கோடி ரூபாய் வரை சிறப்பு நிதியாக ஒதுக்க வேண்டும் எனக் கோரப்பட்டது. அதற்குப் பதில் இல்லாத நிலையில் மைய அரசு மாநிலங்களுக்குத் தர

வேண்டிய நிலுவை நிதியைத் தாருங்கள் எனக் கோரப் பட்டது. அதையும் முழுமையாக, ஒரே தவணையில் கொடுக்க மைய அரசு தயாராக இல்லை. சிறப்பு நிதியும் கிடையாது, வர வேண்டிய நிலுவையும் உடனடியாக வராது என்ற நிலையில், மாநிலங்கள் வெளிச் சந்தையில் கடன் வாங்கும் வரம்பை அதிகரிக்கக் கோரின. மேலும், ரிசர்வ் வங்கியிலிருந்து பெறப்படும் குறுகிய கால சிறப்புக் கடனுக்கு வட்டியைத் தள்ளுபடி செய்யக் கோரின.

இவை எதற்குமே செவிசாய்க்காத மோடி அரசு, இதற்கு மாறாக, இந்த நெருக்கடியான காலக்கட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டு மாநிலங்களின் எஞ்சியிருக்கும் அதிகாரங்களைப் பறிக்கும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது.

பொது சுகாதாரமும் மருத்துவமும் மாநில அதிகாரத்திற்குட்பட்டது. ஒரு பேரிடர் காலத்தில் மைய, மாநில அரசுகள் இணைந்து இயங்க வேண்டுமென அரசியல் சாசனம் கூறுகிறது. மைய அரசிற்கு வழங்கப்பட்டிருக்கும் இந்தச் சலுகையைப் பயன்படுத்திக் கொண்டு, கரோனா விரைவுப் பரிசோதனைக் கருவியைத் தமிழகம் கொள்முதல் செய்ய முடிவெடுத்த நிலையில், அதற்குத் தடை போட்டு, மைய அரசிடமிருந்து பெற்றுக் கொள்ளுமாறு உத்தரவிட்டது மோடி அரசு. ஊரடங்கை அறிவிப்பது, நீட்டிப்பது தொடங்கி நோய்த் தொற்று ஏற்பட்ட பகுதிகளை சிவப்பு, ஆரஞ்சு, பச்சை எனப் பிரிப்பது வரையிலும் மைய அரசின் அதிகாரம் நீள்கிறது.


கஜானா காலி என்ற காரணத்தைச் சொல்லி, டாஸ்மாக் கடைகளைத் திறந்து மக்களைக் கொள்ளையடிக்கத் திட்டமிடுகிறார், எடப்பாடி.

மோடி எந்தவொரு சட்ட வரையறைக்கும் உட்படாமல் சர்வாதிகார மனப்பான்மையோடு உருவாக்கியிருக்கும் பி.எம் கேர் நிதிக்கு கார்ப்பரேட் நிறுவனங்கள் நன்கொடை அளித்தால், அந்த நன்கொடை கார்ப்பரேட் சமூகக் கடப்பாடு திட்டத்தின் கீழ் ஏற்றுக் கொள்ளப்படும் எனக் கூறியிருக்கும் மைய அரசு, அந்நன்கொடையை மாநில முதலமைச்சர்கள் நிவாரண நிதிக்கு அளித்தால், அந்நன்கொடை கார்ப்பரேட் சமூக உதவித் திட்டத்தின் கீழ் வராது என அறிவித்திருக்கிறது. இது ஓரவஞ்சனையானது மட்டுமல்ல, கார்ப்பரேட் நிறுவனங்கள் மாநில அரசிடம் நன்கொடை அளிப்பதைத் தடுக்கும் கயமைத்தனமாகும்.

இதற்கு அப்பால், மாநில அரசுகளின் நிதிச் சுமையை மேலும் அதிகரிக்கும் விதத்தில், மைய அரசு மாதந்தோறும் ஒதுக்கும் அரிசி, கோதுமை கோட்டாவிற்கு அப்பாலும் அரிசி, கோதுமை தேவைப்படும் மாநிலங்கள், அதனை கிலோ ஒன்றுக்கு ரூ.22 கொடுத்து மைய அரசிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும் என ஓலை அனுப்பியிருக்கிறது.

உ.பி., பீகார், ம.பி., ஒடிசா உள்ளிட்ட பின் தங்கிய மாநிலங்களைச் சேர்ந்த ஏழை விவசாயிகள்தான், தமிழகம் உள்ளிட்ட தொழில்மயமான மாநிலங்களுக்கு வேலை தேடி புலம் பெயர்ந்திருக்கிறார்கள். இப்பொழுது இப்புலம் பெயர்ந்த தொழிலாளர்களை அவரவர் சொந்த மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கும் செலவையும் பொறுப்பையும் அவர்கள் பணியிலிருந்த மாநில அரசுகளின் தலையில் கட்டிவிடும் வகையில் மைய அரசு காய்களை நகர்த்தி வருகிறது.

இந்திய அரசியல் சாசனச் சட்டம் இந்தியாவை மாநிலங்களின் ஒன்றியமாக வரையறுக்கிறது. ஆனால், நடைமுறையில் ஒற்றையாட்சி முறையை நோக்கி நகர்ந்து வருகிறது, மோடி அரசு. இந்த அயோக்கியத்தனத்தை மாநில மக்களின் நலன், உரிமையிலிருந்து எதிர்த்து நிற்க வேண்டிய மாநில அரசுகளோ ஊசலாடுகின்றன. தம் பங்குக்கு மாநில மக்களையே தண்டிக்கின்றன.

எடுத்துக்காட்டாக, தமிழகம் தனது நிதிப் பற்றாக்குறையை ஈடுகட்ட பெட்ரோல், டீசல் மீது விதிக்கப்படும் மதிப்புக் கூட்டு வரியைக் கூட்டியிருக்கிறது. டாஸ்மாக் கடைகளைத் திறந்தே தீருவேன் என மல்லுக் கட்டுகிறது. 5,000 கோடி ரூபாயை மிச்சம் பிடிப்பதற்காக அரசு ஊழியரகளின் ஓய்வூதிய வயதை உயர்த்தி, வேலையில்லா இளைஞர்களின் எதிர்காலத்தோடு விளையாடுகிறது. ஊரடங்கு முடிவுக்கு வந்த பின் பேருந்துக் கட்டணம் தொடங்கி அனைத்துச் சேவை கட்டணங்களும் உயரக்கூடிய அபாயம் உருவாகியிருக்கிறது.

மருந்து, மாத்திரைகள், உரிய சிகிச்சைகள் மூலம் கரோனா தொற்றை வெற்றி கொண்டுவிடலாம். ஆனால், கரோனாவின் பெயரைச் சொல்லி மக்களின் இரத்தத்தை உறிஞ்சிவரும் மைய, மாநில அரசுகள் என்ற இந்த ஓட்டுண்ணிகளை நாம் வெல்லுவதற்கு நம்முன் உள்ள மருந்தென்ன? சமரசமற்ற போராட்டம் தவிர!

■ **இளங்கதிர்**

# கரோனாவை விட அபாயகரமானது பார்ப்பனியம்!

பார்ப்பனக் கும்பல் தனது நச்சுக் கருத்துக்களைத் தூசி தட்டி மக்கள் மத்தியில் பரப்புவதற்கு கரோனா தொற்றை கேரியராகப் (Carrier) பயன்படுத்துகிறது.

**க**ரோனா நோய்த் தொற்று விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்குப் பரவியது, இந்நோய்த் தொற்றைத் தடுக்கத் தனி மனித இடைவெளியைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதையெல்லாம் பயன்படுத்திக் கொண்டு பார்ப்பன பண்பாட்டையும், அதன் மூடத்தனங்களையும், அதனின் சாதி ஆதிக்கக் கருத்துக்களையும் மீண்டும் அரியணையில் அமர்த்திவிட கரோனா தொற்றை நைச்சியமாகப் பயன்படுத்தி வருகிறது, பார்ப்பன பாசிசக் கும்பல்.

இத்திருப்பணியை முழு ஊரடங்கு அறிவிக்கப்பட்ட மறுநாளே தொடங்கி வைத்தார் பிரதமர் மோடி. தான் தேர்ந்தெடுக்கப்பட்ட வாரணாசி தொகுதியைச் சேர்ந்த மக்களுடன் உரையாற்றிய அவர், “மகாபாரதப் போரில் 18 நாட்களில் வெற்றி கிட்டியது. கரோனாவிற்கு எதிராக இந்தியா நடத்தும் போரில் 21 நாட்களில் வெற்றி கிடைக்கும்” எனத் தொன்மை நம்பிக்கையையும் ஆரூடத்தையும் கலந்துகட்டி மூடத்தனமான பிரச்சாரங்களுக்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்தார்.

தலையே ஆடிய பிறகு வால்கள் சும்மா இருக்குமா? கோவில்களில் கொடுக்கப்படும் துளசித் தீர்த்தத்தின் சிறப்பு, மஞ்சள் - வேப்பிலையின் மகிமை உள்ளிட்டவற்றை உலக மக்களுக்கு எடுத்துச் சொல்லத் தொடங்கினர் சங்கிகள். இதனால் ஊரிலிருக்கும் வேப்ப மரங்கள் மொட்டையானதே தவிர, வேறு எந்தப் பலனும் கிட்டவில்லை.

மோடி எதை உளறிக் கொட்டினாலும், அதற்கு ஒரு கோனார் நோட்ஸ் போடுவதை சங்கிகளும் அவரது ஆதரவாளர்களும் வழக்கமாகக் கொண்டுள்ளனர். மோடி பொதுமக்களைத் தமது வீடுகளில் கூடி நின்று கைதட்டச் சொன்னதற்கு, “மக்கள் கூடி நின்று கைதட்டும்போது ஒலி உண்டாகும். இதன் மூலம் ஓர் அதிர்வு ஏற்பட்டு, அவ்வதிர்வு நம்மைச் சுற்றியுள்ள வைரஸ்களைக் கொல்லும். கோவில்களில் இதனால் தான் மணி ஒலித்து சத்தம் உண்டாக்குகிறார்கள்” என மணியான விளக்கத்தை அளித்தனர்.

இந்த விளக்கத்தைத் தூக்கிச் சாப்பிடும் வண்ணம் இந்திய மருத்துவக் கழகத்தின் முன்னாள் தலைவர், “மக்கள் அனைவரும் ஒருங்கிணைந்த முறையில் இந்த வைரஸ் எங்களைப் பாதிக்காது என எண்ணினால், அவர்களது கூட்டு உணர்வு அதனைச் சாதித்துக் காட்டும் என்றும், இதனை யோக தத்துவத்தின் அடிப்படையில் தான் கூறுவதாகவும், குவாண்டம் தத்துவமும் இதனைக் கூறுகின்றதென்றும்” பேசி ஒரு காணொளியைச் சமூக வலைத்தளங்களில் வெளியிட்டார்.

இயற்பியல் அறிவியலாளர்கள் இந்த காணொளியைப் பார்த்திருந்தால், அதிர்ச்சியில் மரணமடைந்திருக்கக்கூடும். நல்வாய்ப்பாக, அப்படி எதுவும் நடக்கவில்லை. ஏனென்றால், இந்தக் காணொளியைப் போட்ட சில மணி நேரத்திலேயே அதனை விலக்கிக் கொண்டு விட்டார், அந்த வேத விஞ்ஞானி.

அடுத்து, ஏப்ரல் 5 ஆம் தேதி இரவு ஒன்பது மணிக்கு ஒன்பது நிமிடம் விளக்கேற்ற அழைப்பு விடுத்தார் மோடி. சும்மாவே வாயை மெல்லும் சங்கிகள், ஒன்பது மணி, ஒன்பது நிமிடம் என்ற டைமிங் கிடைத்தால் சும்மா இருப்பார்களா? கல்வி வியாபாரி ஒய்.ஜி. மகேந்திரனின் மகள் மதுவந்தி, வேதவாக்கு

கரோனா தொற்று நோய்க்குத் தடுப்பு மருந்து கோமியமாம்!





(இடமிருந்து) வேதவாக்கு இதழ் ஆசிரியர் ஏ.எம்.இராஜகோபாலன், ஒய்.ஜி.மகேந்திரன் மகள் மதுவந்தி மற்றும் இந்திய மருத்துவக் கழகத்தின் முன்னாள் தலைவர் கே.கே.அகர்வால்.

இதழின் ஆசிரியர் ஏ.எம்.ராஜகோபாலன் ஆகியோர், "ஏப்ரல் 5 அன்று சனி பகவான், குரு பகவான் இருவரும் தனுசு ராசியில் சஞ்சரிக்கும் கிரக நிலையில்தான் மோடி விளக்கேற்றச் சொல்லியிருக்கிறார். நெய் தீபம் அல்லது நல்லெண்ணெயின் தீபத்தின் ஒவ்வொரு துளிக்கும் மகத்தான சக்தி உள்ளது. அதனால்தான் தீபம் ஏற்றுவதை சர்வகிரகதோஷ நிவாரணி என்று ஜோதிட சாஸ்திரத்தில் குறிப்பிடப்படுவதாக" பில்டப் தந்தார்கள். இப்படி 'மகத்தான சக்தி' கொண்ட நல்லெண்ணெய் தீபத்திற்குப் பதிலாக கோவில்களில் மின்சார விளக்கைப் பார்ப்பனக் கும்பல் ஏன் பயன்படுத்துகிறது என்பதுதான் நமக்கு விளங்கவில்லை.

இந்தப் பார்ப்பனக் குப்பைகளுக்கு அப்பால், தீண்டாமை மற்றும் சைவ உணவின் மகத்துவங்களைத் தூக்கிப் பிடித்து, இக்கருத்தியல்களுக்காகப் பார்ப்பன சாதியினரை ஆராதிக்க வேண்டுமெனவும் சங்கி கும்பல் வாதிட்டு வருகிறது.

"வௌவால்கள், தவளைகள், நெருப்புக் கோழிகள் எல்லாவற்றையும் சிறப்பு உணவாக சீனர்கள் உட்கொள்வதை என்னவென்று சொல்வது?" என உணவுப் பழக்கத்தை முன்வைத்து சீனர்களை இழிவு படுத்திவிட்டு, "இந்தியாவில் ஒரு குறிப்பிட்ட வகுப்பினர் கைக்கொண்டிருந்த உணவுப் பழக்கமும், தூய்மை கருதி அவர்கள் கடைப்பிடித்த அணுகுமுறையும் இன்றைக்கு மிகவும் தேவைப்படுகின்ற நெறிமுறைகள்" எனக் குறிப்பிடுகிறது தினமணியின் நடுப்பக்கக் கட்டுரை. (தினமணி, 18.03.2020)

"தூய்மை கருதி அவர்கள் கடைப்பிடித்த அணுகுமுறை" என்ற இந்த ஒரு வரிக்காகவே இந்தக் கட்டுரையை எழுதிய திருக்கோவலூர் பண்பாட்டுக் கழகத் தலைவர் டி.எஸ். தியாகராசனையும், இதனைப் பிரசுரித்த தினமணி ஆசிரியர் வைத்தியநாதனையும் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்திருக்க வேண்டும்.

தமிழகத்தில் சைவ உணவுப் பழக்கம் அருகி வருவதாக முதலைக் கண்ணீர் வடிக்கும் துக்ளக், "இப்போது தமிழகத்தின் பிரதான உணவு அசைவ பிரியாணியும், புரோட்டா குருமாவும்தான்" என வன்மத்தோடு சாடுகிறது. மேலும், "ஒரு குறிப்பிட்ட சமூகத்தைத் தொடர்ந்து வன்ம நோக்கில் இழிவு படுத்துவதற்காகவே சைவ உணவைத் தமிழகம் புறக்கணித்ததாக"க் குறிப்பிட்டுத் தனது திராவிட வெறுப்பு அரசியலையும் பதிவு செய்கிறது. (துக்ளக், 01.04.2020)

ஏதோ சைவ உணவுப் பழக்கத்தையே பார்ப்பன சாதியினர்தான் கண்டுபிடித்து மற்ற உலகத்தினருக்குத் தெரிவித்ததைப் போல இக்கும்பல் எழுதுவது கடைந்தெடுத்த பொய். சைவ, அசைவ உணவுப் பழக்கம் என்பதெல்லாம் உயிரினங்களின் பரிமாண வளர்ச்சியினூடாகக் கைவரப் பெற்றவை. மேலும், தண்ணியடிக்கும் போது (சோமபானம் பருகும் போது) சைடு டிஷ்ஷாக இளங்கன்று மாமிசத்தை ஒரு பிடிபிடிப்பதைத் தனது பண்பாடாகக் கொண்டிருந்த ஆரிய பார்ப்பனக் கும்பல், அதை மூடிமறைத்துவிட்டுத் தன்னை ஜீவகாருண்யவாதி போலக் காட்டிவருவது கடைந்தெடுத்த அயோக்கியத்தனம்.

கரோனா வைரஸ் விலங்குகளிடமிருந்து மனிதனுக்குப் பரவியது உண்மை என்றபோதும், அதற்கும் அசைவ உணவுப் பழக்கத்திற்கும் முடிச்சுப் போடுவது உள்நோக்கம் கொண்ட சதியாகும். இந்த நோய்க்குக் குறிப்பிட்ட மருந்து இதுவரை கண்டுபிடிக்கப்படாததால், நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் உணவை எடுத்துக் கொள்ளுமாறுதான் மருத்துவர்கள் பரிந்துரைக்கிறார்கள். அவர்களது பரிந்துரையில் காய்கறிகளுக்கும் இடமுண்டு, முட்டை, இறைச்சி போன்ற அசைவ உணவிற்கும் இடமுண்டு.

பார்ப்பன சனாதனத்தை ஆதரித்து தினமணியின் நடுப்பக்கத்தில் தொடர்ச்சியாகக் கட்டுரை எழுதி வரும் ஊடகவியலாளர் கோதை ஜோதிலட்சுமி, முன்னோர்கள் மூடர்கள் அல்லர் என்ற கட்டுரையில், "ஊர்க் கட்டுப்பாடு என்றும் ஆசாரம் என்றும் மரபாகப் பல வழக்கங்களை நம் மக்கள் கடைப்பிடித்தனர். ஆயிரம் ஆண்டு வழக்கங்களை அரை நூற்றாண்டில் நாகரிகம் என்ற பெயரில் தூக்கியெறிந்தோம்" என அங்கலாய்ப்போடு குறிப்பிட்டுவிட்டு, இன்றைக்கு அறிவுறுத்தப்படும் தனிமனித இடைவெளியை அன்றே பாரதப் பண்பாடு சொல்லியிருப்பதாகப் பெருமை பாராட்டிக் கொள்கிறார். (தினமணி, 31.03.2020)

ஊர்க் கட்டுப்பாடு என்பது தாழ்த்தப்பட்டோர் வசிக்க விதிக்கப்பட்ட சேரியையும், ஆதிக்க சாதியினர் வசிக்கும் அக்ரஹாரம், மேலத் தெருவையும் பிரிக்கும் தீண்டாமை தவிர வேறென்ன? ஆசாரம் என்ற சொல் பார்ப்பனக் கும்பல் மற்றவர்களிடமிருந்து தம்மை விலக்கிக் கொள்ளும் தீண்டாமையைக் குறிப்பது தவிர வேறென்ன? எனவே, மருத்துவர்கள் அறிவுறுத்தும் தனி மனித இடைவெளியும், கோதை ஜோதிலட்சுமி உள்ளிட்ட பார்ப்பனக் கும்பல் வலியுறுத்தும் ஊர்க் கட்டுப்பாடும் ஆசாரமும் ஒன்றல்ல.

இந்த உண்மையைத் தனது கட்டுரையில் அவரே ஒப்புக் கொள்கிறார். “நம் பாட்டிமார்கள் காய்கறிகளிலிருந்து வெளியில் வாங்கிவரும் எந்தப் பொருளானாலும் அதை நேரடியாக ஒருவரின் கைகளில் இருந்து மற்றொருவர் பெற்றுக் கொள்ளாமல் தரையில் வைக்கச் சொல்லிவிட்டு அதில் தண்ணீர் தெளித்துப் பின்னர் எடுத்துக்கொள்ளும் பழக்கத்தை ஆசாரம் என்ற பெயரால் கொண்டிருந்தனர்.”

இந்த ஆசாரத்தைப் பார்ப்பனப் பாட்டிமார்கள் தவிர, வேறு எந்த ஆயாக்கள் கடைப்பிடித்து வந்தனர்? பார்ப்பனப் பாட்டிமார்கள் கடைப்பிடித்து வந்த இந்த ஆசாரம் என்பது தமது சாதிக்குப் புறத்தே உள்ள மற்ற அனைவரையும் அசுத்தமானவர்களாக, தீண்டத்தகாத வர்களாகக் கருதும் பார்ப்பனக் கொழுப்பு, வக்கிரம் தவிர வேறல்ல.

இந்த ஆசாரம், ஊர்க் கட்டுப்பாட்டிற்கெல்லாம் ஓர் அறிவியல் அடிப்படை இருப்பதாகத் துணிந்து புளுகும் கோதை ஜோதிலட்சுமி, “ஒருவரையொருவர் காணும் போது கைகூப்பி வணங்குவது நமது கலாச்சாரம். அதைத் தவிர்த்துவிட்டு ஒருவரையொருவர் கைகுலுக்கி முகமன் கூறிக்கொண்ட மேலை வழக்கத்தை நாக ரிகம் எனக் கருதி ஏற்றோம். இன்றைக்கு உலகமே நம்முடைய கைகூப்பி வணங்கும் கலாச்சாரத்துக்கு திரும்ப வேண்டியதன் அவசியத்தை உரக்கச் சொல்லிக் கொண்டிருக்கிறது” எனப் பீற்றிக் கொள்கிறார்.

கை குலுக்கும் மேலைக் கலாச்சாரத்தின் மீதே இவ்வளவு வன்மம் என்றால், இசுலாமியர்கள் ஒருவரை யொருவர் ஆரத் தழுவிக் கொள்ளும் பண்பாட்டைப் பின்பற்றி வருகிறார்களே, அதன் மீது சனாதனிகளுக்கு எவ்வளவு ஆத்திரம் இருக்கும்?

கை குலுக்குவது தன்னைப் போலவே மற்றவனை மதிக்கும் மரியாதை மற்றும் நட்பின் வெளிப்பாடு என்றால், ஆரத் தழுவிக் கொள்வது மற்றவனைத் தனது சகோதரனைப் போலப் பாவிப்பதற்கு ஒப்பாகும்.

பார்ப்பன சனாதன வரலாற்றில் இந்த நட்பிற்கு, சகோதரத்துவத்திற்கு என்றைக் காவது இடமிருந்தது உண்டா? தனது மதத்தைச் சேர்ந்தவன் என்றாலும், ஒருவனது சாதி தான் அவனது மதிப்பை, மரியா தையைத் தீர்மானிக்கிறது. சங்கர மடத்தில் சுப்பிரமணிய சுவா மிக்கு நாற்காலியும், பொன் னாருக்குத் தரையும் ஒதுக்கப் படுவதற்கு அடிப்படை இந்தச் சாதிப்படி நிலை மற்றும் பாகுபாடுதான். இந்து மதத்தில் கை கூப்புவது மரியாதையின் வெளிப்பாடா, தீண்டாமையின் வெளிப்பாடா எனப் பட்டிமன்றமே நடத்தலாம். மேலும், பீற்றிக் கொள்ளப்படும் இந்த சனாதன மரியாதைகள் எதுவும் தாழ்த்தப்பட்டோருக்கு ஒரு நாளும் கொடுக்கப்பட்டதில்லை.

பச்சையாகத் தீண்டாமையை ஆதரித்து பார்ப்பன தினமலர் வெளியிட்டிருந்த கேலிச்சித்திரம்.




கரோனா தொற்றுக்கு ஒரு மருந்தோ, தடுப்பூசியோ கண்டுபிடிக்கப்பட்டால், இன்று கடைப்பிடிக்கப்படும் தனி மனித இடைவெளி இல்லாது ஒழிந்துபோகும். ஆனால், பார்ப்பனக் கும்பல் கரோனா தொற்றை முன்னிறுத்திப் புதுப்பிக்க முயலும் சமூகத் தீண்டாமை அப்படிப்பட்டதல்ல. சமூக வளர்ச்சியின் காரண மாக சிறுகச்சிறுக வழக்கொழிந்துவரும் தீண்டாமை, சாதி ஏற்றத்தாழ்வு, மூடப் பழக்க வழக்கங்கள் ஆகிய பார்ப்பன - வேளாளப் பண்பாட்டை மீண்டும் நடை முறைக்குக் கொண்டுவரும் கயமைத்தனம் அது.

ஊரடங்கையடுத்து, தமது வேலைகளும், தொழில் களும் நிலைக்குமா எனக் கண் கலங்கி நிற்கிறார்கள், உழைக்கும் மக்கள். ஆனால், இல.கணேசன், இலங்கை ஜெயராஜ் உள்ளிட்ட சனாதனவாதிகளோ ஆலயம் மூடப்பட்டிருப்பதற்காகக் கண்ணீர் வடிக்கின்றனர். “ஆலயங்கள் திறக்கப்பட்டு, அங்கு வேத விற்பன்னர் களால் முன்னையதைவிட அதிகமாகப் பூஜைகளும் யாகங்களும் செய்யப்படல் வேண்டும். அவற்றில் எழுகின்ற மந்திர அதிர்வு, நிச்சயம் இன்றைய இயற்கையின் சீற்றத்தைத் தணிக்குமென நான் உறுதியாய் நம்புகின்றேன்” என அறிவுறுத்துகிறார், இலங்கை ஜெயராஜ் (தினமணி, 08.05.2020)

கோவில்களில் மட்டுமென்ன, கரோனாவிற்கு சிகிச்சை அளிக்கப்படும் மருத்துவமனைகளில் இனி மருத்துவர்கள், செவிலியர்களுக்குப் பதிலாக வேத விற்பன்னர்களை நிறுத்திவிடுவோம். மருந்துகள், மருத்துவ உபகரணங்களுக்குப் பதிலாக மந்திரச் சுவடிகளைக் கொண்டுவந்துவிடுவோம். மந்திர ஒலியை முழங்கி கரோனா தணிகிறதா எனப் பரிசோதித்துப் பார்த்து விடலாம்.

எனினும், இப்பரிசோதனை முயற்சிக்கு ஆய்வக எலிகளைப் போல யாரைப் பயன்படுத்துவது என்பதுதான் கேள்வி. தினமணி வைத்திய நாத அய்யரும், இலங்கை ஜெயராஜும், கோதை ஜோதிலட்சுமியும் இல.கணேசனும் இப்பரிசோதனைக்குத் தயாரா?

■ தமிழ்ச்சுடர்

# உழைப்பின் மீதான மூலதனத்தின் சர்வாதிகாரம்!

**எட்டு மணி நேர வேலை உரிமை பறிக்கப்பட்டிருப்பது, கார்ப்பரேட் பாசிசம் என்றால் என்னவென்பதை யாவருக்கும் புரியும்படி எடுத்துக்காட்டியிருக்கிறது.**

இந்திய முதலாளித்துவத்தின் நவீன முகமாகக் காட்டப்படும் இன்ஃபோசிஸ் நாராயண மூர்த்தி, "இந்தியத் தொழிலாளர்கள் கடினமாகவும், அதிக நேரமும் உழைக்க வேண்டும். குறிப்பாக, நாளொன்றுக்கு 10 மணி நேரம் எனும் வீதத்தில், வாரத்திற்குக் குறைந்த பட்சம் அறுபது மணி நேரம் எனும் அளவில் அடுத்த இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு உழைக்க வேண்டும்" எனக் கூறியிருக்கிறார். அது அவரது விருப்பம் மட்டுமல்ல, ஒட்டுமொத்த இந்தியத் தரகு முதலாளித்துவ வர்க்கத்தின் விருப்பமும் ஆகும்.

அவர் முன்வைத்த இந்த ஆலோசனை கடந்த மே-1 அன்று, அதாவது எட்டு மணி வேலை நேரத்திற்காக நடந்த தொழிலாளி வர்க்கத்தின் போராட்டத்தை நினைவுகூறும் தொழிலாளர் தினத்தன்று பத்திரிகைகளில் வெளிவந்திருப்பது தற்செயலானது அல்ல.

நாராயண மூர்த்தி வேலை நேரத்தைப் பத்து மணி நேரமாக அதிகரிக்கக் கோரினார் என்றால், ஆட்சியாளர்களோ நாளொன்றுக்கு 12 மணி நேரம், வாரத்திற்கு அதிகபட்சமாக 72 மணி நேரம் என வேலை நேரத்தைக் கூட்டும் உத்தரவுகளை மாநிலம் மாநிலமாகப் போட்டு வருகின்றனர்.

தொழிலாளி வர்க்கம் இரத்தம் சிந்திப் போராடிப் பெற்ற எட்டு மணி நேர வேலை என்ற உரிமையைப் பறிக்கும் கைங்கர்யத்தை முதலில் தொடங்கி வைத்தது, பா.ஜ.க. ஆளும் மத்தியப் பிரதேச அரசு. அதனைத் தொடர்ந்தும், அம்மாநிலத்தோடு போட்டிபோட்டுக் கொண்டும் உத்திரப் பிரதேசம், குஜராத், இமாச்சலப் பிரதேசம் என பா.ஜ.க. ஆளும் மாநிலங்களும்; காங்கிரசு ஆளும் இராசஸ்தான், பஞ்சாப் மாநில அரசுகளும் 12 மணி நேர வேலை உள்ளிட்ட பல்வேறு "சீர்திருத்தங்களை" அறிவித்து, தொழிலாளி வர்க்கத்தை நிராயுதபாணியாக மூலதனத்தின் பலிபீடத்தில் நிறுத்தியுள்ளனர்.

உத்தரப் பிரதேசத்தில் 35 தொழிலாளர் நலச் சட்டங்களை மூன்றாண்டுகளுக்கு இடைநீக்கம் செய்திருக்கிறது, ஆதித்யநாத் அரசு.

குஜராத்தில், புதிய தொழில் நிறுவனங்களுக்குக் குறைந்தபட்ச கூலிச் சட்டம், தொழில்துறை பாதுகாப்பு விதிகள் மற்றும் தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டம் ஆகிய 3 சட்டங்களைத் தவிர, மற்ற அனைத்துச் சட்டங்களில் இருந்தும் 1200 நாட்களுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது. கூடுதல் வேலை நேரத்திற்கான கூலியை அதிகரிக்காமலேயே, 8 மணிநேர வேலையை 12 மணி நேரமாக உயர்த்தியுள்ளது குஜராத் அரசு.

இம்மாநில அரசுகள் வேலை நேரத்தை அதிகரிக்க உத்தரவிட்டிருப்பதைத் தாண்டியும் புதிய முதலீடுகளை ஈர்ப்பது என்ற போர்வையில் பல்வேறு சலுகைகளை முதலாளி வர்க்கத்திற்கு அளித்துள்ளன.

குறிப்பாக, மத்தியப் பிரதேசத்தில், ஆலைகள், கடைகள் மற்றும் பீடி உற்பத்தியாளர்களின் பதிவு மற்றும் உரிமம் தொடர்பாகத் தரப்படும் விண்ணப்பங்கள் மீது முடிவெடுக்க இதுவரை ஒரு மாத காலம் அவகாசம் அளிக்கப்பட்டிருந்தது. இனி இம்முடிவை ஒரே நாளில் எடுக்க வேண்டும். அவ்வாறு செய்யத் தவறும் அதிகாரிக்கு அபராதம் விதிக்கப்படும் என்றும், அந்த அபராதத் தொகை சம்பந்தப்பட்ட முதலாளிக்கு இழப்பீடாகத் தரப்படும் என்றும் மாற்றங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன.

மேலும், தொழிற்சாலைகளுக்கான உரிமத்தைப் புதுப்பிக்க ஆண்டுதோறும் விண்ணப்பிக்கத் தேவையில்லை, பத்தாண்டுகளுக்கு ஒருமுறை விண்ணப்பித்தால் போதும். ஒப்பந்தத் தொழிலாளர் சட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் உரிமம் வாங்கத் தேவையில்லை. மாறாக, ஒட்டுமொத்த ஒப்பந்த காலத்திற்கும் சேர்த்தே ஒருமுறை உரிமம் வாங்கினால் மட்டும் போதுமானது.

இருபதுக்கும் குறைவான ஒப்பந்தத் தொழிலாளர்களைப் பணிக்கு வைத்திருந்தாலே அது குறித்து ஒப்பந்ததாரர்கள் பதிவு செய்ய வேண்டும் என்றிருந்த சட்ட நடைமுறை கைவிடப்பட்டு, அந்த எண்ணிக்கை 50 ஆக அதிகரிக்கப்பட்டிருக்கிறது. ஒப்பந்தத் தொழிலாளர் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரியவையாக வகைப்படுத்தப்பட்டுள்ள குற்றங்களை இசைவான முறையில் பேசித் தீர்த்துக் கொள்ளக்கூடியதாக மாற்றும் திட்டத்தையும் ம.பி. அரசு முன்மொழிந்திருக்கிறது.

50-க்கும் மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்ட சிறு - குறு - நடுத்தர நிறுவனங்களுக்கு பொருந்தக் கூடிய தொழில்துறை வேலைவாய்ப்புச் சட்டம், இனி 100 அல்லது அதற்கும் மேற்பட்ட தொழிலாளர் களைக் கொண்ட நிறுவனங்களுக்கும் பொருந்தக்கூடிய வகையில் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது.

இதுவரை, 61 பதிவேடுகளைப் பராமரித்தும், 13 அறிக்கைகளை தாக்கல் செய்தும் வந்த நிறுவனங்கள் இனி ஒரேயொரு பதிவேட்டைப் பராமரித்து, ஒரே யொரு அறிக்கையைத் தாக்கல் செய்தால் போதுமானது. மேலும், நிறுவனங்கள் தமக்குத்தாமே வழங்கிக் கொள்ளும் சான்றிதழ் மட்டுமே போதுமானது.

இவ்வாறு அனுமார் வால் போல நீளும் இம்மாற்றங்கள் அனைத்தும் மாநில அரசின் நிறுவனங் களைப் பொருத்தவரை அடுத்த 1,000 நாட்களுக்கு அமலில் இருக்கும் என்று உத்தரவிட்டிருக்கும் ம.பி. அரசு, இதனைத் தனது மாநிலத்திலுள்ள மற்றெல்லா நிறுவனங்களுக்கும் நீட்டிக்கும் வகையில் மைய அரசின் அனுமதியைக் கோரியிருக்கிறது. இம்மாற்றங்கள் அனைத்தும் இன்ஸ்பெக்டர் ராஜ்ஜியத்தை முழுமையாக முடிவுக்குக் கொண்டுவந்துவிட்டதாக ம.பி. முதல்வர் சிவராஜ் சிங் சவுகான் கூறியிருக்கிறார். இதிலிருந்தே தொழிலாளி வர்க்கம் நிராயுத பாணியாக மூலதனத்தின் தாக்குதலை எதிர் கொள்ள வேண்டியிருக்கும் அபாயத்தை யாரும் புரிந்துகொள்ள முடியும்.

அந்நிய ஆக்கிரமிப்பு, உள்நாட்டுக் கலகம், தேசத்தின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஆகிய அசாதாரணமான அவசர நிலையை நாடு எதிர்கொள்ளும்போது மட்டும் தொழிற் சாலைச் சட்டங்களில் இருந்து தொழிற் சாலைகளை மூன்று மாதங்களுக்கு விலக்கு அளிக்கும் அதிகாரத்தை அச்சட்டம் மாநில அரசுகளுக்கு வழங்கியிருக்கிறது. இந்த ஓட்டையைப் பயன்படுத்திக் கொண்டுதான் தொழிலாளர்களின் உரிமைகள் பறிக்கப்பட் டிருக்கின்றன.

நாடு கரோனா வைரஸ் மீது போர் தொடுப்பதாக கூறிவருகிறது, மோடி அரசு. ஆனால், உண்மையில், கரோனா தொற்றைச் சாக்காக வைத்துக்கொண்டு, தொழிலாளி வர்க்கத்தின் மீதுதான் போரை ஏவிவிட் டிருக்கிறார்கள்.

இந்திய அரசியல் சாசனச் சட்டம் கட்டாய உழைப்பைத் தடை செய்திருக்கிறது. ஆனால், பல்வேறு மாநில அரசுகள் கொண்டுவந்திருக்கும் இம்மாற்றங்கள் அனைத்தும் கட்டாய உழைப்பை, அதாவது, அதிக வேலை நேரம், குறைந்தபட்சக் கூலி கிடையாது என்ற கொத்தடிமைத்தனத்தைத் தொழிலாளி வர்க்கத்தின் மீது திணிப்பதன் வழியாக அரசியல் சாசனத்தை வெற்றுக் காகிதமாக்கிவிட்டன.

குறைந்தபட்சக் கூலி, எட்டு மணி நேர வேலை என்பதெல்லாம் சட்டத்தில் இருந்தாலும், இதற்கு முன்பும்கூட இவ்வுரிமைகள் இந்தியாவெங்கும் பரவலாக நடைமுறையில் இருந்ததில்லை. குறிப்பாக, அமைப்புசாரா துறைகளை எடுத்துக்கொண்டால், இந்தச் சட்டங்கள் செல்லுபடியானதேயில்லை. இப்பொழுது இம்மாற்றங்கள் மூலம் அமைப்புசார்ந்த தொழில் களுக்கும் கொத்தடிமைத்தனம் விரிவுபடுத்தப்பட் டிருக்கிறது. எனவே, இனி அரசு ஊழியர்களும் பொது மற்றும் தனியார் துறைகளைச் சேர்ந்த நிரந்தரத் தொழி லாளர்களும் மற்றவர்களைவிடத் தாம் பாதுகாப்பாக இருப்பதாக நினைத்து இறுமாந்து கொள்வதற்கு இடமே கிடையாது.

தொழிலாளர் நலச் சட்டங்கள் பொதுப் பட்டியலில் இருப்பதால், இம்மாற்றங்களை அடுத்த மூன்று ஆண்டு களுக்கு அனுமதிக்கக் கோரி மாநில அரசுகள் மைய அரசிடம் முறையிட்டுள்ளன. பிரதமர் மோடி என்ன முடிவெடுப்பார்? ஆட்டிற்கு நீதி வழங்குமா ஓநாய்?




1,000 நாட்கள் அல்லது 1,200 நாட்கள் கழித்து, தற்போது மாநில அரசுகளால் பறித்துக் கொள்ளப் பட்டிருக்கும் உரிமைகளையெல்லாம் திரும்பக் கிடைத்துவிடும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. இப்புதிய எதார்த்தத்தை நிரந்தரமாக்கிவிடவே ஆளும் வர்க்கமும் ஆட்சியாளர்களும் முயல்வார்கள்.

2020-இல் இந்தியா வல்லரசாகும் என அப்துல் கலாம் உளறியதையே, நகர்ப்புறத்து நடுத்தர வர்க்கமும் பிதற்றிக்கொண்டு திரிந்து வந்தது. ஆனால், தொழிலாளர் நலச் சட்டத்தில் கொண்டுவரப்பட் டிருக்கும் இம்மாற்றங்கள், நாட்டை, குறிப்பாக இந்திய உழைக்கும் மக்களை, 18, 19-ஆம் நூற்றாண்டு களில் நிலவிய இருண்ட காலத்திற்குள் இழுத்துச் செல்லுகின்றன.

■ **வசந்தன்**

# புதிய தாராளவாத வைரஸின் சகாப்தம்!

பணமதிப்பழிப்பு நடவடிக்கையைப் போலவே, கரோனா நோய்த் தொற்றுக்கு எதிரான ஊரடங்கு உத்தரவையும் திடீரென அறிவித்து, பெரும்பான்மையான மக்களை, குறிப்பாக தினக்கூலித் தொழிலாளர்களை, புலம் பெயர்ந்த தொழிலாளர் குடும்பங்களைத் திண்டாட வைத்துவிட்டது, மோடி அரசு. அத்தியாவசியப் பொருட்களை வாங்குவதற்கு அலைமோதிய மக்கள் திரளும்; சென்னை, திருப்பூர் உள்ளிட்ட தொழில் நகரங்களிலிருந்து சொந்த ஊருக்குத் திரும்பிச் செல்லுவதற்காகப் பேருந்து நிலையங்களிலும் தொடர்வண்டி நிலையங்களிலும் குவிந்த குடும்பங்களும்; தமது கிராமங்களுக்குத் திரும்ப முடியாத வடமாநிலங்களைச் சேர்ந்த தொழிலாளர் குடும்பங்கள் சென்னை தெருக்களில் தத்தளித்து நின்றதுமான காட்சிகள் அனைத்தும் துக்ளக் வம்சத்தைச் சேர்ந்த பேரரசன் முகம்மது பின் துக்ளக்கை, இந்து சாம்ராட் நரேந்திர தாமோதரதாஸ் மோடி வென்றுவிட்டதை எடுத்துக் காட்டின.

பிரதமர் மோடி கரோனா வைரஸ் தொற்று தொடர்பாக நாட்டு மக்களிடம் இரண்டாம் முறையாக உரையாற்றப் போகிறார் என்ற செய்தி வந்தவுடன், இந்தக் கொள்ளை நோயால் பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்பட்டிருக்கும் பிரிவினர் அனைவருக்கும் பயனளிக்கக்கூடிய சலுகைகளை, நிதி ஒதுக்கீடை அறிவிப்பார் என்ற எதிர்பார்ப்பு பொருளாதார நிபுணர்களிடமும்கூட நிலவியது. ஆனால், மோடியோ, சலுகைகளை அறிவிப்பதற்குப் பதிலாக, ஊரடங்கு உத்தரவு மூலம் இந்த வைரஸை எதிர்த்துப் போராடும் பெரும் சுமையைப் பொதுமக்களின் தலையின் மீது சுமத்திவிட்டு ஒதுங்கிக் கொண்டார்.

இந்தக் கொள்ளை நோயை மருத்துவம், பொது சுகாதாரம், சமூக நிதியுதவித் திட்டங்கள் உள்ளிட்டு பல்வேறு வழிகளில் போராடி ஒழிப்பதற்கு ஐந்து முதல் ஆறு இலட்சம் கோடி ரூபாய் நிதி தேவைப்படும் என்றும், இது இக்கொள்ளை நோய் ஏற்படுத்தவல்ல பேரழிவை ஒப்பிடும் போது பெரும் நிதிச் சுமையல்ல என்றும் ப.சிதம்பரம் உள்ளிட்டுப் பல்வேறு பொருளாதார நிபுணர்களும் சுட்டிக்காட்டி வரும்போது, மோடி அரசோ முதல் கட்டமாக வெறும் 15,000 கோடி ரூபாயை மட்டுமே ஒதுக்கிவிட்டு, வீட்டினுள் அடைந்து கிடப்பது மட்டும்தான் இந்த வைரஸை ஒழிக்கக்கூடிய ஒரே சாத்தியமான வழி என அறிவுரை வழங்கிவிட்டு ஒதுங்கிப் போய்விட்டது.

தாபிஷ் கைர்.



இரண்டாம் கட்டமாக அறிவிக்கப்பட்ட 1.70 இலட்சம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு என்பது புதிய மொந்தை பழைய கள்ளு எனக் கூறத்தக்க மோசடி. பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட திட்டங்களையே மறு ஒலிபரப்பு செய்திருக்கிறது, மோடி அரசு. பட்ஜெட் பற்றாக்குறை அதிகரித்து விடக்கூடாது என்பதற்காகவே இவ்வளவு குறைவாக நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாக அம்பலப்படுத்தியிருக்கிறது, இந்து நாளிதழ்.

பொருளாதார மந்தத்தால் உள்நாட்டு தரகு முதலாளிகளின் இலாபம் சரிந்துவிடாமல் தூக்கி நிறுத்துவதற்காக இரண்டு இலட்சம் கோடி ரூபாய் வரையில் வரித் தள்ளுபடி உள்ளிட்ட பல்வேறு சலுகைகளை ஓரிரு மாதங்களுக்கு முன்பு வாரி வழங்கிய மோடி அரசு, பொதுமக்களின் நலன் என வரும் போதோ கஜானாவை இறுக மூடிவைக்கிறது.

மோடி மட்டுமின்றி, பெரும்பாலான நாடுகளின் அரசுத் தலைவர்கள் அனைவருமே கரோனா வைரஸை எதிர்த்துப் போராடுவதைப் பொதுமக்களின் தலையின் மீதுதான் ஏற்றி வைத்து வருகின்றனர். டென்மார்க்கில் வாழ்ந்துவரும் இந்திய நாவலாசிரியரும் கல்வியாளருமான தாபிஷ் கைர் முதலாளித்துவ அரசுகளின் இந்த அணுகுமுறையின் அடிப்படையில் கரோனா வைரஸை உலகின் முதல் புதிய தாராளவாத வைரஸ் என வரையறுக்கிறார். அமெரிக்கா மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகளின் அனுபவத்தின் வழியாக அவர் வந்தடைந்திருக்கும் இந்த முடிவு இந்திய அரசுக்கும் பொருந்தும்.

கடந்த மார்ச்-24 அன்று ஆங்கில இந்து இதழில், “புதிய தாராளவாத வைரஸின் சகாப்தம்” (The age of the neo liberal virus) என்ற தலைப்பில் வெளியான தாபிஷ் கைர் எழுதிய கட்டுரை வாசகர்களுக்காக மொழிபெயர்த்து வெளியிடப் படுகிறது. ■




**கோ**விட்-19 என்ற நோயை உருவாக்கக்கூடிய கரோனா வைரஸ்தான் இந்த உலகின் முதல் புதிய தாராளவாத வைரஸ். இப்படிக் கூறுவது ஏற்கெனவே பாதுகாப்பற்று வாழும் நோயுற்றவர்களை, வயது முதிர்ந்தோரை, ஏழைகளை (பட்டினி கிடக்காமல் இவர்களால் தனிமைப்படுத்திக் கொள்ள முடியாது) இந்த வைரஸ் எளிதாகத் தாக்கக்கூடிய அபாயத்தைக் குறைத்து மதிப்பிடுவதாகாது. மாறாக, உலகின் பல்வேறு நாட்டு அரசுகள் இந்த வைரஸை எவ்வாறு எதிர்கொள்கின்றன என்பதைத்தான் விமர்சிக்க வேண்டியிருக்கிறது. ஐரோப்பாவில் ஒப்பீட்டளவில் சிறப்பான சமூக நல முதலாளித்துவ அரசுகளாக உள்ள, நான் வசித்துவரும் டென்மார்க் உள்ளிட்ட நாடுகளுக்கும்கூட இந்த விமர்சனம் பொருந்தக்கூடியதுதான்.

பல்வேறு ஐரோப்பிய நாடுகளைப் போலவே டென்மார்க்கிலும் மார்ச்-12 தொடங்கி இரண்டு வார காலத்திற்கு ஊரடங்கு நடவடிக்கைகள் அமலுக்கு வந்தன. இங்கிலாந்து உள்ளிட்ட சில நாடுகள் மட்டும்தான் இதற்கு விதிவிலக்காக இயங்கி வந்தன. அறுபது இலட்சம் மக்கள் தொகை கொண்ட டென்மார்க்கில் மார்ச்-12 வாக்கில் 500 பேருக்கு நோய்த் தொற்று ஏற்பட்டிருந்தது.

அவசியமான இந்த ஊரடங்கு நடவடிக்கையை முன்னரே எடுத்திருக்க வேண்டும். எனினும், இந்த ஊரடங்கைத் தவிர, இந்த நோயைக் கட்டுப்படுத்தத் தேவையான மற்றைய அவசியமான நடவடிக்கைகள் எதுவும், நான் இந்தக் கட்டுரையை எழுதும் தருணத்திலும், மார்ச்-17 வரை டென்மார்க்கில் எடுக்கப்படவில்லை.

மற்றைய நடவடிக்கைகளுள் மிக முக்கியமான, இன்றியமையாத ஒன்று மருத்துவப் பரிசோதனை. மற்றைய ஐரோப்பிய நாடுகளைப் போலவே, டென்மார்க்கிலும் நோய்த்தொற்று தீவிரமடைந்த நோயாளிகளுக்கு மட்டும்தான் மருத்துவப் பரிசோதனை நடத்தப்படுகிறது. மிதமான தொற்று அறிகுறிகள் உள்ளவர்களைப் பொருத்தவரை - நூற்றுக்கும் மேற்பட்ட பிற நோய்களும் இதே போன்ற அறிகுறிகளை வெளிபடுத்தக்கூடியவைதான் - தனிமைப்படுத்திக் கொள்வது மட்டுமே அறிவுறுத்தப்படுகிறது. உள்நாட்டினுள் மருத்துவப் பரிசோதனை விரிவாக நடத்தப்படாத அதே வேளையில், டென்மார்க் அரசு, அரசியல்ரீதியான நடவடிக்கையாக, பிற நாடுகளுடனான தனது எல்லைகளை மூடிவிட்டது. செல்வ வளமிக்க மேற்குலக நாடுகளில் மருத்துவப் பரிசோதனையின் முடிவு தெரிவதற்கு இரண்டிலிருந்து நான்கு நாட்கள் வரை கால தாமதம் ஆகும் அதேவேளையில், கரோனாவால் பாதிக்கப்பட்ட சீனப் பகுதிகளில் நான்கு மணி நேரத்தில் பரிசோதனை முடிவுகளைத் தெரிந்துகொள்ள முடியும் என்பது ஆச்சரியமான விடயம்தான்.

ஆக, இதிலிருந்து நாம் விளங்கிக்கொள்வதென்ன? டென்மார்க் உள்ளிட்ட நாடுகள் சமூக நல மற்றும் மருத்துவ வசதிக் கட்டமைப்புகளைக் கொண்டிருந்த போதும், புதிய தாராளவாத அணுகுமுறையைத்தான் வெளிப்படுத்துகின்றன என்பதுதான் ஐயத்துக்கு இடமின்றித் தெரிகிறது. இந்த வைரஸைக் கட்டுப்படுத்தக்கூடிய பொறுப்பின் பெரும்பகுதி, தனிமைப்படுத்திக் கொள் என்ற கட்டளையின் வழியாகச் சாதாரண குடிமகனிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது. சாதாரண சளித் தொல்லைகளால் பீடிக்கப்பட்டவர்கள்கூடத் தனிமைப் படுத்திக் கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகியுள்ள நிலையில், அறிவுரைகளையும் கட்டளைகளையும் அள்ளிவிடும் அரசுகளோ மிகக் குறைந்த அளவிற்கே நிதி ஒதுக்கியுள்ளன.



உ.பி. காஸியாபாத் பேருந்து நிலையத்தில் அலைமோதிய புலம்பெயர்த் தொழிலாளர் குடும்பங்கள்.

இது வியப்புக்குரியதல்ல. கடந்த இரண்டு பத்தாண்டுகளில், எப்பொழுதெல்லாம் கார்ப்பரேட் நிறுவனங்களோ அல்லது குறிப்பிடத்தக்க பெரிய வங்கிகளோ தடுமாறத் தொடங்கியவுடனேயே, தேசிய அரசுகள், சுகாதாரம், ஆராய்ச்சி உள்ளிட்ட பொது சேவைகளுக்கான நிதி ஒதுக்கீடுகளை வெட்டி, அதன் மூலம் கிடைக்கும் பொதுப் பணத்தை கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு வாரி வழங்கியுள்ளன. இது உலகெங்கும் நடந்திருக்கிறது. இது மீண்டும் நடந்து வருகிறது.

சில நாட்களுக்கு முன்னர்தான், டென்மார்க் அரசு கரோனா வைரஸ் தொற்றால் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியை எதிர்கொள்வதற்காகத் தனது நாட்டைச் சேர்ந்த கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு 5,000 கோடி அமெரிக்க டாலர் (ஏறத்தாழ 3,50,000 கோடி ரூபாய்) மதிப்புடைய சலுகைகளை வழங்கியது. இத்தொற்று நோய் ஓர் அபாயமாக உருவாவதற்கு முன்னரே, அமெரிக்காவின் டிரம்ப் அரசு, தனது நாட்டின் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கும், நிதி மூலதனத் துறைக்கும் 1.5 இலட்சம் கோடி அமெரிக்க டாலர்களை வாரி வழங்கியது. இத்தொற்று அமெரிக்காவில் பரவி, தேசிய அவசர நிலை அறிவிக்கப்பட்ட சமயத்தில் மேலும் 70,000 கோடி அமெரிக்க டாலர்கள் அமெரிக்க கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு நிதியுதவியாக வழங்கப்பட்டது. இங்கிலாந்து அரசு, இத்தொற்று அபாயத்தை முழுமையாக ஏற்க மறுத்தாலும், தனது நாட்டின் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு 90,000 கோடி அமெரிக்க டாலர்களை நிதியுதவியாக வழங்கியிருக்கிறது. மற்றைய நாடுகளிலும் இதே கதைதான்.

தேசியப் பொருளாதாரம் பெரும் வீழ்ச்சியைச் சந்திக்காமல் தடுப்பதற்கு இத்தகைய முட்டுக் கொடுத்தல்கள் அவசியம்தான் எனினும், இதில் இரண்டு பெரிய சிக்கல்கள் உள்ளன. இந்தச் சலுகைகளின் பெரும் பகுதி வேலைவாய்ப்புகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற கண்டிப்பான நிபந்தனையோடு ஒதுக்கப்படவில்லை. அதிலும் குறிப்பாக, மிகவும் குறைவான கூலி பெறும் தொழிலாளி வர்க்கத்தின் பாதுகாப்பு புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. டென்மார்க், நார்வே, ஸ்வீடன் நாடுகள் கூட்டாக இணைந்து இயக்கும் ஸ்காண்டிநேவியன் ஏர்லைன்ஸ் நிறுவனம் ஏற்கெனவே 10,000 ஊழியர்களை இடைநீக்கம் செய்துவிட்டது. மற்றைய நாடுகளிலும் தனியார் துறையைச் சேர்ந்த ஊழியர்களும் தொழிலாளர்களும் வேலையிலிருந்து தூக்கியெறியப்படுவது நடந்து வருகிறது.

அமெரிக்காவின் குடியரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிடுவதற்காக ஜனநாயகக் கட்சியின் சார்பில் சீட்டு கேட்டுப் போட்டியிட்டு வரும் பெர்னி சாண்டர்ஸ் என்ற அரசியல் தலைவர் ஒருவர் மட்டும்தான், “இந்தச் சலுகைகள் மக்கட் தொகையில் 95 சதவீதமாக உள்ள உழைக்கும் மக்களின் வேலைகளைப் பாதுகாப்பதற்காகக் கொடுக்கப்பட வேண்டுமேயொழிய, 5 சதவீத மேட்டுக் குடியினரின் பங்கு மதிப்பு வீழ்ந்து விடாமல் முட்டுக் கொடுக்க வழங்கப்படக் கூடாது” என வலியுறுத்தி வருகிறார். மற்றொரு சிக்கல் என்னவென்றால், அநேகமாக எந்தவொரு நாடும் இதற்கு இணையான தொகையை இத்தொற்று நோயை எதிர்கொள்ளும் விதத்தில், மக்கள் நல்வாழ்வு, சமூகத் துறைகளுக்கு ஒதுக்கவில்லை.

வெள்ளையர் அல்லாத நாடுகளில் எந்தவொரு அசம்பாவிதம் ஏற்பட்டாலும், அது மேற்குலக நாடுகளில் கனன்று கொண்டிருக்கும் இன வெறியைத் தூண்டிவிடும் என்பதோடு, சீனாவில் ஏற்பட்டுள்ள இந்த வைரஸ் பீதி அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நிதி மூலதனக் கும்பலைத் தமது பங்குகளை அவசர அவசரமாக விற்கும் நிலைக்கும் தள்ளியிருக்கிறது. சீனாவின் குறிப்பிடத்தக்க தொழில்துறைகளைக் கட்டுப்படுத்தும் அளவிற்குப் பங்குகளை வைத்திருக்கும் இந்தக் கும்பல், அப்பங்குகளை மிகவும் மலிவாக விற்பதை சீன அரசும், சீன முதலீட்டாளர்களும் வாங்கி வருகின்றனர். சீனா, தற்சமயம் இந்த வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்தும் நிலையை எட்டி

யிருப்பதோடு, தனது நாட்டின் பொருளாதாரத்தையும் தொழில்துறைகளையும் முன்னைக் காட்டிலும் அதிக அளவில் கட்டுப்படுத்தும் நிலையை மீண்டும் பெற்றிருக்கிறது எனக் கூறலாம். இதன் மறுபக்கத்தில் அமெரிக்காவின் காங்கிரசு மற்றும் செனட் சபைகளைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள், அமெரிக்கப் பங்குச் சந்தை வீழ்ச்சியடைவதற்குச் சற்று முன்பே, உள்பேரத்தின் மூலம் தமது பங்குளை விற்றுக் காசாக்கி விட்டனர். மீண்டுமொரு ஒரு புதிய தாராளவாத வைரஸ்: இந்தப் போக்கு உழைக்கும் வர்க்கத்தின் உரிமைகளைப் பாதிக்கும் வண்ணம் கணினிமயமாக்கம் (digitalisation) மற்றும் இயந்திர மனிதமயமாக்கம் (robotisation) ஆகிய துறைகளிலும் தொடரும்.



சிறு தொழில், சிறு வணிகம் உள்ளிட்ட அமைப்புசாரா தொழில்களின் முடக்கத்தால் ஏறத்தாழ 40 கோடி அமைப்புசாராத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

"இந்த வைரஸைக் கட்டுப்படுத்துவதற்கு முன்பாக பல பேர் இறப்பது தேவையானதுதான்" என வெளிப்படையாக ஒப்புக்கொண்ட முதல் நாடு இங்கிலாந்துதான். இந்த வைரஸைக் கட்டுப்படுத்துவதற்குப் போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்படாத தருணத்தில் அரசியல்வாதிகள் கூறிவருவது இதுதான்: "இந்த வைரஸ் அநேகமாக வயது முதிர்ந்தவர்கள், நோய் வாய்ப்பட்டிருப்பவர்கள், ஊட்டச்சத்துக் கிடைக்காத ஏழைகள் ஆகியோரைத்தான் கொல்கிறது. பொருளாதார உற்பத்திக்குப் பயனற்ற இந்தக் கூட்டம் வாழ்ந்தால் என்ன, செத்தால் என்ன என்பது பற்றி நாம் உண்மையில் அக்கறை கொள்ளத் தேவையில்லை."

அரசியல் விமர்சகர்கள் அரசியல்வாதிகளின் இந்த உள்ளக்கிடக்கையை சுட்டிக்காட்டியவுடனேயே, அந்த வர்க்கம் தாம் கூறியதிலிருந்து பின்வாங்கியதோடு, "நாங்கள் மக்களிடம் பொய் கூறாமல் தமது கடமையைச் செய்வதாக"த் தமது கூற்றுக்கு விளக்கமளித்தார்கள்.

அவர்கள் உண்மையைப் பேசுகிறார்களா? அல்லது, நிதி மூலதனத்தின் மதிப்பு மட்டுமே அக்கறைக்குரியது என்ற புதிய தாராளவாத தர்க்கத்திற்கு ஆட்பட்டுப் பேசுகிறார்களா? பசி என்ற கொள்ளை நோயைக் கட்டுப்படுத்தக்கூடிய தடுப்பு மருந்தான உணவுப் பொருட்கள் கையிலிருந்தும், ஒவ்வொரு நாளும் 8,000 குழந்தைகள் பசி என்ற வைரஸுக்குப் பலியாவது இந்தப் புதிய தாராளவாத சமன்பாட்டின் ஒரு பகுதியாகும். கரோனா வைரஸ் தாக்குதலிலிருந்து நம்மைத் தற்காத்துக் கொள்ள நாம் பரபரப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கும் தருணத்தில், மற்ற கொள்ளை நோய்களை எதிர்த்த போராட்டம் தவிர்க்கவியலாதவாறு பாதிக்கப்படும்.

கரோனா தாக்குதலையடுத்து அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த ஏகபோக கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை ஒப்பிடும்போது மருத்துவ, சுகாதாரத் துறைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி குறைவானது என்கிறார், கட்டுரையாளர் தாபிஷ் கைர்.



இந்தக் கொள்ளை நோயை எதிர்கொள்வதற்கு இன்னும் பல நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருக்கிறது. இன வெறியும் தேசியவாதமும் இதற்கு உதவாது. இந்தக் கொள்ளை நோயைப் போல எதிர்காலத்தில் சந்தேகத்திற்கு இடமின்றி வரக்கூடிய கொள்ளை நோய்களை எதிர்கொள்வதற்கும் பல்வேறு நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருக்கிறது. ஒரு நூற்றாண்டுக்கு முன்பாக, 1918-இல் உருவான ஸ்பானிஷ் ஃப்ளு என்ற கொள்ளை நோய் - பிரிட்டிஷ் அல்லது நேச நாட்டுப் படையினர் மத்தியில் உருவாகிப் பரவியது - 5 கோடி மக்களைக் காவு வாங்கியது. இந்த கரோனா வைரஸை முதல் புதிய தாராளவாத வைரஸ் என்ற முறையில் அணுகி, அதற்கேற்ப செயல்படவில்லை என்றால், பெரிதாக எதுவொன்றும் நடவாது.

**மொழியாக்கம்: ரஹீம்**

# அமெரிக்க மக்களைக் காவு வாங்குவது தனியார்மயமே!

**டிரம்ப் அரசின் திமிரும் முட்டாள்தனமும் கலந்த அலட்சியம், பொது சுகாதாரத்திற்கு அரசின் நிதி ஒதுக்கீடு வெட்டு, தனியார் மருத்துவமனைகளின் ஆதிக்கம் – இவைதான் கரோனா தொற்று நோய்க்கு பல்லாயிரக்கணக்கான அமெரிக்க மக்கள் பலியாகிவருவதற்குப் பின்னுள்ள சமூகப் பொருளாதாரக் காரணிகள்.**

அமெரிக்கா, சபிக்கப்பட்ட தேசமாக மாறிவிட்டிருக்கிறது கரோனா தொற்றால் மே மாதத்தின் முதல் வாரத்தில் அந்நாட்டில் மட்டும் கரோனாவால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 12.5 இலட்சத்தையும், பலியானோர் எண்ணிக்கை 70,000-தையும் தாண்டி விட்டது. உலகின் மிகப்பெரிய வல்லரசாக மட்டுமின்றி, மருத்துவம் உள்ளிட்ட பல்வேறு அறிவியல் புலங்களிலும் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைச் சாதித்திருக்கும் அமெரிக்கா, இந்நோய்ப் பரவலையும், அதனால் ஏற்பட்டுவரும் பலி எண்ணிக்கையையும் கட்டுப்படுத்த முடியாமல் திணறுவதுதான் பலரையும் ஆச்சரியமும் அதிர்ச்சியும் கொள்ளச் செய்திருக்கிறது.

அமெரிக்காவின் இந்த அவல நிலைக்கு சீனாவையும் உலக சுகாதார நிறுவனத்தையும் குற்றஞ்சுமத்துகிறார், அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப். இந்த அபாண்டமான பழியை டிரம்பின் கைத்தடிகள் தவிர, மற்ற எவரும் ஆதரிக்கவில்லை. மாறாக, டிரம்பின் முட்டாள்தனத்தையும் அவரது அரசின் செயலின்மையையும் சுட்டிக் காட்டுகின்றன, முதலாளித்துவப் பத்திரிகைகள்.

இதனை யாருமே மறுக்க முடியாதுதான். தெருக்கள், கட்டிடங்கள் உள்ளிட்ட புறவெளிகளில் ஒட்டிக்கொண்டிருக்கும் கரோனா வைரஸை அழிக்க வல்ல கிருமிநாசினியை மனித உடம்பிற்குள் செலுத்தி கரோனா வைரஸைக் கொன்றுவிடலாமே என்ற அளப்பரிய ஆலோசனையை அள்ளிவிட்ட அறிஞர் பெருமகனல்லவா டிரம்ப்!

கரோனா நோய்ப் பரவலை உலகெங்கிலும் மருத்துவ அவசர நிலையாக அறிவிப்பது குறித்து கடந்த ஜனவரி 22 அன்று உலக சுகாதார நிறுவனம் ஆலோசனைக் கூட்டம் நடத்திய சமயத்தில், அமெரிக்க அரசு முந்திரிக் கொட்டையாக முந்திக்கொண்டு, அமெரிக்காவில் இந்நோய் முழுமையான கட்டுக்குள் இருப்பதாக அறிவித்தது. அதிபர் டிரம்ப் இன்னும் ஒருபடி மேலே போய், ஃப்ளு காய்ச்சலைவிட அபாயகரமானதல்ல கரோனா தொற்று என அறிவித்தார். அமெரிக்காவில் மார்ச் மாதத்தில் இந்நோயால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 500-ஐத் தாண்டியிருந்த சமயத்தில், சராசரி அமெரிக்கனை இந்த நோய் பாதிக்கப் போவதில்லை என ஆரூடம் சொன்னார், டிரம்ப். இப்படி இந்த நோயின் அபாயம் குறித்த அக்கறையின்றி அலட்சியமாகவே நடந்துவந்தது, அமெரிக்க அரசு.

மருத்துவக் கண்காணிப்போடு முழு ஊரடங்கை அமல்படுத்துவது அல்லது முழு ஊரடங்கை அமல்படுத்தாமல் விரிவான பரிசோதனைகளைச் செய்து, அதன் மூலம் நோய் கண்டோரையும், அவரோடு தொடர்புடையவர்களையும் கண்டறிந்து தனிமைப்படுத்துவது என இந்த நோயை எதிர்கொள்ள இரண்டு விதமான வழிமுறைகள் செயல்படுத்தப்படுகின்றன.

வல்லரசான அமெரிக்காவிலும், அதன் கூட்டாளியான தென் கொரியாவிலும் ஜனவரி 20 அன்றுதான் முதல் கரோனா நோயாளி கண்டறியப்பட்டார். தென் கொரியா விரிவான பரிசோதனைகளை மேற்கொண்டு இந்நோய்ப் பரவலைக் கட்டுப்படுத்தியது. ஆனால், அதிபர் டிரம்போ முழு ஊரடங்கையும் உடனடியாக அறிவிக்காமல், விரிவான பரிசோதனைகளையும் உடனடியாக மேற்கொள்ளாமல் தட்டிக் கழித்து, அமெரிக்க மக்களை இந்நோய்த் தொற்றுக்குப் பலியிட்டிருக்கிறார்.

எந்தவொரு நாட்டிலும் முழு ஊரடங்கை அறிவிப்பதையும், அதை நீட்டித்துக் கொண்டே செல்வதையும் கார்ப்பரேட் முதலாளிகள் விரும்புவதில்லை. அமெரிக்க முதலாளிகளும் இதற்கு விதிவிலக்கல்ல என்பது ஒருபுறமிருக்க, டிரம்ப், அதிபர் என்ற முறையில் மட்டுமின்றி, தானே ஒரு ரியல் எஸ்டேட் முதலாளி என்ற முறையிலும் ஊரடங்கை அமல்படுத்த மறுத்தார்.

மேலும், அதிபர் தேர்தல் நெருங்கி வரும் சமயத்தில் ஊரடங்கை அமல்படுத்தினால் தனது வாக்கு வங்கியான வெள்ளையினத் தொழிலாளி வர்க்கத்தின் வேலை காலியாகி, அது தனது வெற்றி வாய்ப்பைப் பாதிக்கக் கூடும் என்பதாலும் அவர் ஊரடங்கை அமல்படுத்த

மறுத்ததோடு, ஊரடங்கை எதிர்த்து நடந்த ஆர்ப்பாட்டங்களையும் ஆதரித்து வந்தார். அதேசமயத்தில், பிப்ரவரி மாதத்தில் தொடங்கப்பட்ட மருத்துவப் பரிசோதனை நிர்வாகக் குளறுபடிகளினால் முறையாகவும் நடைபெறவில்லை, விரிவாகவும் நடைபெறவில்லை.

கரோனா தொற்றுக்கு அமெரிக்க மக்கள், குறிப்பாகக் கருப்பின ஏழைகள் பலியிடப்பட்டதற்கு இவையெல்லாம் காரணங்கள் என்றபோதும், இவற்றைத் தாண்டி முதலாளித்துவப் பத்திரிகைகள் அம்பலப்படுத்த விரும்பாத அடிப்படையான காரணமொன்று உள்ளது. அதுதான் முழுமையாகத் தனியாரின் ஆதிக்கத்தில் இருக்கும் அமெரிக்காவின் மருத்துவக் கட்டமைப்பு.

●●●

அமெரிக்காவில் மருத்துவக் காப்பீடு இல்லாமல் தலைவலிக்குக்கூட சிகிச்சை கிடைத்துவிடாது. அந்நாட்டில் மருத்துவக் காப்பீடு இல்லாமல் சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டுமென்றால் ஒன்று பணக்காரனாக இருக்க வேண்டும்; இல்லையென்றால் போண்டியாவதற்குத் தயாராக இருக்க வேண்டும். இந்த நிலையில் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்பவர்களையும் காப்பீடு எடுத்துக்கொள்ள வைக்கும் திட்டத்தோடு ஒபாமா கேர் திட்டம் 2010-ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்படி வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்பவர்கள் செலுத்த வேண்டிய காப்பீடு கட்டணத்திற்கு அரசு மானியம் அளித்தது. இந்த மானியச் செலவிற்கு காப்பீடு எடுத்துக் கொள்ள விரும்பாதவர்களின் மீது வரி விதிக்கப்பட்டது.

இந்த வரி பெரும்பாலும் பணக்கார வர்க்கத்தின் மீதே விதிக்கப்படுவதாக இருந்ததால், ஒபாமாவிற்கு அடுத்து அதிபர் பதவிக்கு வந்த டிரம்ப் இந்த வரி விதிப்பை நீக்கினார். இதன் மூலம் ஒபாமா கேர் திட்டத்தை முற்றிலுமாக ஒழித்துவிடும் முதல் அடியை அவர் எடுத்துவைத்தார். தற்பொழுதும் வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ள அமெரிக்கர்கள் காப்பீட்டு மானியம் பெற விண்ணப்பிக்க முடியும் என்றாலும், அரசின் பற்றாக்குறையைக் காட்டி அம்மானியத்திற்கு ஒப்புதல் அளிப்பது விரைவாக நடப்பதில்லை.

அமெரிக்கத் தொழிலாளர்களுள் 34 சதவீதத் தொழிலாளர்கள் மருத்துவக்காப்பீடு பெற அரசின் மானியத்தைத்தான் நம்பியிருக்கிறார்கள். 50 சதவீதத் தொழிலாளர்களுக்கான மருத்துவக் காப்பீட்டிற்கு அவர்கள் வேலை பார்க்கும் நிறுவனங்கள் பொறுப்பெடுத்துக் கொள்கின்றன என்றாலும், தொழிலாளி வேலையிழக்கும்போது அவரது மருத்துவக் காப்பீடும் தானாகவே காலாவதியாகிவிடும். கரோனா தொற்றைத் தொடர்ந்து அந்நாட்டில் ஏறத்தாழ மூன்று கோடிக்கும் அதிகமான தொழிலாளர்கள் வேலையிழந்து, அரசின் வேலையில்லா நிதியுதவியைப் பெற விண்ணப்பித்திருக்கிறார்கள். இதன் பொருள், இன்றைய நெருக்கடியில் இந்த மூன்று கோடித் தொழிலாளர்களின் உயிருக்கு எந்த உத்தரவாதமும் இல்லை என்பதுதான்.




இதுவொருபுறமிருக்க, கடந்த சில ஆண்டுகளில் அமெரிக்க அரசின் நோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையத்திற்கு ஒதுக்கப்படும் நிதியில் 120 கோடி அமெரிக்க டாலர்கள் (ஏறத்தாழ 8,000 கோடி ரூபாய்) வெட்டப்பட்டுவிட்டது. அதனின் கையிருப்பு நிதியிலிருந்து 3.5 கோடி அமெரிக்க டாலர்கள் வெட்டப்பட்டது. மேலும், கடந்த இருபது ஆண்டுகளில் மருத்துவ அவசர கால தயாரிப்பு திட்டப் பணிகளுக்கான ஒதுக்கப்படும் நிதியில் 61.7 கோடி அமெரிக்க டாலர்கள் வெட்டப்பட்டதால், பேரழிவு ஏற்படும் காலங்களில் வட்டார அளவில் பணியாற்றக்கூடிய பயிற்சிபெற்ற ஊழியர்கள் போதுமான அளவில் பணியமர்த்தப்படவில்லை.

மேலும், கடந்த சில ஆண்டுகளாக வட்டார அளவில் செயல்பட்டு வந்த பல சிறிய தனியார் மருத்துவமனைகள் திவால் நோட்டீசு கொடுத்து தங்களது நிறுவனங்களை மூடிவிட்டதால், அமெரிக்க மக்கள் சிறிய சிகிச்சைகளுக்குக்கூட நகர்ப்புறங்களில் செயல்பட்டு வரும் மிகப்பெரும் ஐந்து நட்சத்திர தனியார் மருத்துவமனைகளை நோக்கித் தள்ளப்பட்டனர். இன்றைய நிலையில் அமெரிக்காவிலுள்ள தனியார் மருத்துவமனைகளை பெயின் காப்பிடல், கே.கே.ஆர்., ஜோயல் ஃப்ரீட்மேன் ஆகிய மூன்று நிதி நிறுவனங்கள்தான் கட்டுப்படுத்தவதாகக் குறிப்பிடுகிறது, இந்து குழும இதழான ஃப்ரெண்ட்லைன்.

நகர்ப்புறங்களைச் சேர்ந்த இந்த ஐந்து நட்சத்திர தனியார் மருத்துவமனைகள் அரசின் நிதியுதவியையும் ஏற்றுக் கொள்ளுவதில்லை, காப்பீடு திட்டங்களையும் ஏற்றுக் கொள்ளுவதில்லை. இதன் பொருள் காசிருப்பவன் மட்டும்தான் இம்மருத்துவமனைகளில் சிகிச்சை பெற முடியும். இந்தியாவிலுள்ள தனியார் மருத்துவமனைகளே கரோனா சிகிச்சைக்கு நாளொன்று ரூ.70,000 ரூபாய் வரை கட்டணம் வசூலிக்கும்போது, அமெரிக்கத் தனியார் மருத்துவமனைகள் சொத்தையே பிடுங்காமல் விடமாட்டார்கள்!

டிரம்ப் அரசின் திமிரும் முட்டாள்தனமும் கலந்த அலட்சியம், பொது சுகாதாரத்திற்கு அரசின் நிதி ஒதுக்கீடு வெட்டு, தனியார் மருத்துவமனைகளின் ஆதிக்கம் - இவைதான் கரோனா தொற்று நோய்க்கு பல்லாயிரக்கணக்கான அமெரிக்க மக்கள் பலியாகிவருவதற்குப் பின்னுள்ள சமூகப் பொருளாதாரக் காரணிகள்.




அடிமுட்டாள் டிரம்புக்குப் பதிலாக வேறொரு அதிபுத்திசாலி அமெரிக்காவின் அதிபராகியிருந்தாலும் இந்த நிலைமையில் பெரியதொரு மாற்றம் ஏற்பட்டிருக் காது. காரணம், தனியார்மயம். தான் வாங்கி வந்த வரத் தாலே பத்மாசுரன் அழிந்ததைப் போல, சுதந்திர சந்தை என்ற போர்வையில் அமெரிக்கா உலகெங்கும் திணித்த தனியார்மயம்-தாராளமயம், இன்று அதனையே சின்னா பின்னமாக்கி வருகிறது.

●●●

**க**ரோனாவிற்கு அமெரிக்க மக்களைக் கொத்துக் கொத்தாகப் பலியிட்டு வரும் தனது குற்றத்தை மறைத்துக் கொள்ளும் முகமாகத்தான், சீனா அமெ ரிக்கா மீது ஒரு உயிரியல் போரை ஏவிவிட்டிருப்பதைப் போல கோயபல்சு பிரச்சாரத்தை நடத்தி வருகிறார், அதிபர் டிரம்ப். உலக சுகாதார நிறுவனம் சீனாவிற்குத் துணை போவதாகக் குற்றஞ்சுமத்தி, அதற்கு அமெரிக்கா அளிக்க வேண்டிய நிதியை வெட்டவுள்ளதாக அறிவித் திருக்கிறார்.

சீனாவின் வுஹான் மாகாணத்தில் கடந்த ஆண்டு டிசம்பர்-1 அன்று முதல் கரோனா நோயாளி அடை யாளம் காணப்பட்டார். அடுத்த முப்பதாவது நாள், டிசம்பர்-31, 2019 அன்று இப்புது வகையான நோய் பற்றி சீனா உலக சுகாதார நிறுவனத்திற்குத் தெரிவிக் கிறது. ஜனவரி 3, 2020 அன்று இந்நோயை உருவாக்கும் வைரஸ் அடையாளப்படுத்தப்படுகிறது. கோவிட்-19 எனப் பெயரிடப்பட்ட அந்த வைரஸின் மரபணு வரிசையை ஜனவரி 9, 2020 அன்று சீனா உலக சுகாதார நிறுவனத்திற்கும் ஏனைய நாடுகளுக்கும் அறியத் தருகிறது.

மேலும், ஜனவரி 1, 2020 அன்று சீனாவின் நோய்த் தடுப்பு மையத்தின் அதிகாரிகள் அமெரிக்க அரசின் நோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையத்தின் தலைவர் ராபர்ட் ரெட்பீல்டிடம் இப்புது வகையான வைரஸ் பற்றிய தகவலை அதிகாரப்பூர்வமாகத் தெரிவித்துள்ளனர்.

பொதுவெளியில் இவ்வளவு உண்மைகள் உள்ள நிலையிலும் சீனாவை உலகின் எதிரியாகக் காட்ட முயலு கிறது, அமெரிக்க அரசு. இக்கோயபல்சு பிரச்சாரம் அதிபர் தேர்தலை எதிர்நோக்கி யிருக்கும் டிரம்ப் என்ற அரசியல்வாதியின் கயமைத்தனத்தை மட்டும் எடுத்துக் காட் டவில்லை; அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் மேலாதிக்க வெறியையும் சேர்த்தே எடுத்துக் காட்டுகிறது.

சீனாவைப் பொருளாதார ரீதியாகப் பலவீனப்படுத்தி, தான் விதிக்கும் வர்த்தக நிபந்தனைகள் அனைத்தையும் ஏற்றுக் கொள்ளும் நிலைக்கு சீனாவைத் தள்ளுவது தான் அமெரிக்க ஏகாதிபத்தியம் நடத்திவரும் கோயபல்சு பிரச்சாரத்தின் உடனடி நோக்கம்.

சீனா மீது ஒரு பொய்ப் பிரச்சார யுத்தத்தை நடத்தி வரும் அமெரிக்கா, தனது மேலாதிக்கத்தை ஏற்க மறுத்து எதிர்த்துவரும் இரான், வெனிசுவேலா, கியூபா ஆகிய நாடுகள் மீது தான் விதித்திருக்கும் பொருளாதாரத் தடையுத்தரவுகளை இந்த இக்கட்டான நேரத்தில்கூட ரத்து செய்ய மட்டுமல்ல, தளர்த்தவும் மறுத்துவரு கிறது. இதைவிடக் கேவலமாக, இந்த நெருக்கடியைப் பயன்படுத்திக்கொண்டு வெனிசுவேலாவில் ஆட்சிக் கவிழ்ப்பை நடத்த முயன்று தோற்றுப் போய் நிற்கிறது, அமெரிக்கா.

உலக சுகாதார நிறுவனம் கரோனா நோய்த் தொற்றை எதிர்கொள்ளும் விதத்தில் தனக்குக் கூடுதலாக 67.5 கோடி அமெரிக்க டாலர்கள் நிதி தேவைப்படும் எனக் கோரியிருக்கும் நிலையில்தான், அந்நிறுவனத்திற்கு 50 கோடி டாலர்கள் நிதி வழங்கி வந்த அமெரிக்கா, அதனைக் கணிசமாக வெட்டப் போவதாக அறிவித் திருக்கிறது.

அமெரிக்காவின் இந்த அறிவிப்பு உலக சுகாதார நிறுவனத்தை மட்டுமல்ல, அதையும் தாண்டி, கரோனா நோய்த் தொற்றை எதிர்கொள்ள உலக சுகாதார நிறுவனத் திடமிருந்து நிதியுதவியை எதிர்பார்க்கும் பல்வேறு ஏழை நாடுகளை, குறிப்பாக ஆப்பிரிக்க கண்டத்து ஏழை நாடுகளைத் தண்டிப்பதாகும்.

ஒரு நெருக்கடியான காலக்கட்டம்தான் உண்மையான நண்பர்களை அடையாளம் காட்டு மெனில், அமெரிக்க ஏகாதிபத்திய அரசிற்கு அந்தத் தகுதி ஒருபோதும் கிடையாது என்பதை ஏழை நாடு களுக்கு மட்டுமல்ல, அமெரிக்க மக்களுக்கும் எடுத்துக் காட்டியிருக்கிறது, கரோனா வைரஸ்.

■ பரணிதரன்

# ஒரு வைரஸும் சில உண்மைகளும்

**கரோனா நோய்த்தொற்றால் ஏற்படும் உயிர் பலிகளும் அதைக் கட்டுப்படுத்த போடப்பட்ட ஊரடங்கின் எதிர்விளைவுகளும் ஏகாதிபத்திய உலகமயமாக்கலின் தோல்வியை சாதாரண மக்களும் புரிந்துகொள்ளும்படி எடுத்துக்காட்டுகின்றன.**

**வெ**றும் இருநூற்று நாற்பத்தைந்து ரூபாய் பெறுமான கரோனா அதிவிரைவு பரிசோதனைக் கருவியை இந்திய அரசு உள்நாட்டிலேயே இதுவரை ஏன் தயாரிக்கவில்லை?

ஹைட்ராக்சி குளோரோகுயின் மருந்தை இந்தியாவை மிரட்டிப் பெற வேண்டிய நிலையில் அமெரிக்கா இருப்பதேன்? பல்வேறு மருந்துப் பொருட்களின் காப்புரிமையைத் தனது கையில் வைத்திருக்கும் அமெரிக்க நிறுவனங்கள், அமெரிக்காவில் கரோனாவிற்கு முன்பாகவே பரவலாகப் பரிந்துரைக்கப்படும் இம்மருந்தை உள்நாட்டில் உற்பத்தி செய்யாமல் இருப்பதேன்? "செவிலியர்கள் தமக்குத் தேவையான பாதுகாப்பு உடைகளைத் தாமே தைத்துக் கொள்ளும்படி" உத்தரவிட வேண்டிய அவல நிலை அமெரிக்காவிற்கு ஏன் ஏற்பட்டது?

தனக்குச் சேர வேண்டிய பாதுகாப்பு உடைகள் உள்ளிட்ட மருத்துவ உபகரணங்களை அமெரிக்கா அடாவடித்தனமாக எடுத்துச் சென்றுவிட்டதாக அமெரிக்கா மீது குற்றஞ்சுமத்த வேண்டிய கையறு நிலையில் ஜெர்மன் இருப்பதன் காரணமென்ன?

மிக ஏழ்மையான நிலையில் உள்ள ஓர் ஆப்பிரிக்க நாடு முகக் கவசத்திற்கும், பாதுகாப்பு உடைகளுக்கும், பரிசோதனைக் கருவிகளுக்கும், மருந்து மாத்திரைகளுக்கும் இறக்குமதியையோ, மற்று நாடுகளின் உதவியையோ நம்பியிருப்பதை நம்மால் புரிந்துகொள்ள முடியும். ஆனால், ஏற்கெனவே வல்லரசாகிவிட்ட அமெரிக்கா, ஜெர்மனி உள்ளிட்ட மேற்கத்திய முதலாளித்துவ நாடுகளும், நீண்ட நாட்களாக வல்லரசுக் கனவில் மிதந்து கொண்டிருக்கும் இந்தியாவும் என்-95 முகக் கவசத்திற்குக்கூட சீனாவை அண்டியிருக்க வேண்டிய நிலையை எப்படி விளங்கிக் கொள்வது? சீனத் தயாரிப்புகள் தரம் குறைந்தவையாக உள்ளன என ஒருபுறம் குற்றஞ்சுமத்திக் கொண்டே, இன்னொருபுறத்தில் சீனாவிடமிருந்து இறக்குமதி செய்து தீரவேண்டிய கட்டாயத்திலுள்ள இந்நாடுகளின் முரண் நிலையை எப்படிப் புரிந்துகொள்வது?

பொருளுற்பத்தித் துறைகளில் கடந்த முப்பது, நாற்பது ஆண்டுகளில் உலகு தழுவிய அளவில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் மாற்றங்களைப் புரிந்துகொள்வதன் வழியாகத்தான் மேற்சொன்ன கேள்விகளை விளங்கிக்கொள்ள முடியும். அது மட்டுமின்றி, தனியார்மயம்-தாராளமயம்-உலகமயம் திணித்திருக்கும் அம்மாற்றங்கள் கரோனா தொற்றுநோய் உருவாக்கியிருக்கும் நெருக்கடிக்கு ஈடுகொடுக்க முடியாமல் தோற்றுப்போய் விட்டதையும், அந்நோய்க்கும், பொருளாதார நெருக்கடிக்கும் உலக மக்களைப் பலியிட்டு வருவதையும் விளங்கிக் கொள்ள முடியும்.

●●●

இரண்டாம் உலகப் போரின் முடிவில் மேற்கத்திய முதலாளித்துவ அரசுகள் சேமநல அரசுகளாக அவதாரமெடுத்தன. சோசலிச அபாயத்திலிருந்து தப்பித்துக் கொள்ளவும், இரண்டாம் உலகப் போர் சமயத்தில் ஏற்பட்ட முதலாளித்துவப் பெரு நெருக்கடியிலிருந்து விடுபடவும் சேமநல அரசு என்ற அவதாரம் மேற்கத்திய முதலாளித்துவ அரசுகளுக்கு அவசியமானதாக இருந்தது. இம்முறையின் கீழ் தொழிலாளர்களின் அரசியல், பொருளாதார உரிமைகள் ஓரளவு பாதுகாக்கப்பட்டன. சமூகத்திற்கு அவசியமான கல்வி, மருத்துவம், போக்குவரத்து உள்ளிட்ட அத்தியாவசியமான சேவைகள் அனைத்தையும் வழங்குவதற்கும் அரசே பொறுப்பெடுத்துக் கொண்டது. இந்தியாவில் 1990-களுக்கு முன்பு வரை இச்சேம நல அரசு முறைதான் கலப்புப் பொருளாதாரம் அல்லது நேரு பாணி சோசலிசம் என்ற பெயரில் நடைமுறையில் இருந்து வந்தது.

வட அமெரிக்க மற்றும் ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகளில் கிட்டதட்ட 1980 வரை நீடித்த இச்சேமநல அரசு முறை முதலாளித்துவத்தின் பொற்காலம் எனக் கூறப்பட்டாலும், இன்னொருபுறத்தில் அரசின் கடன்களும் பற்றாக்குறையும் அதிகரித்துக்கொண்டே சென்றன. இந்த நெருக்கடியிலிருந்து மீளத் தனியார்மயத்தை அருமருந்தாக முன்னிறுத்தினார்கள், தீவிர




வலதுசாரிகள். அவர்களின் அரசியல் பிரதிநிதிகளாக அமெரிக்காவில் ரொனால்ட் ரீகனும், பிரிட்டனில் மார்க்கரெட் தாட்சரும் அதிகாரத்துக்கு வந்தவுடன் சேமநல அரசிற்கு முடிவுரை எழுதப்பட்டது.

“சமூகம் என ஒன்றில்லை” என அறிவித்தார் மார்க்கரெட் தாட்சர். “அரசுதான் பிரச்சினை” என்றார் ரீகன். தனியார்மயம் என்பது உண்மையில் நிதி மற்றும் தொழில் முதலாளி வர்க்கத்தின் அப்பட்டமான, அம்மணமான சர்வாதிகாரமாகும். மூலதனத்திற்குச் சேவை செய்வதைத் தாண்டி, அரசுக்குச் சமூகப் பொறுப்பு எதுவும் கிடையாது என்பதுதான் இதனின் அடிப்படை.

இத்தனியார்மயத்தின் கீழ் ஐரோப்பிய நாடுகளில், குறிப்பாக இங்கிலாந்தில் தொழிற்சங்கங்களின் செல்வாக்கு சிதைக்கப்பட்டு, தொழிலாளர்களின் உரிமைகள் படிப்படியாக பறிக்கப்பட்டன. சமூகத்தின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொடுக்கும் கடமையிலிருந்து அரசு விலகிக்கொள்ள, அவையனைத்தும் கட்டணம் செலுத்தி நுகர வேண்டிய ஒன்றாகத் தனியார்மயமாக்கப்பட்டன.

இதே காலகட்டத்தில் ரசிய சோவியத் ஒன்றியத்திலும், அதனின் தொங்குசதை நாடுகளாக இருந்த கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் போலி கம்யூனிச அரசுகள் கவிழ்க்கப்பட்டு, அவை முதலாளித்துவ அரசு முறைக்கு மாறின.

இந்தப் பின்னணியில்தான் தனியார்மயம்-தாராளமயம்-உலகமயம் உலகு தழுவிய பொருளாதார முறைமையாகத் திணிக்கப்பட்டது. அமெரிக்க மேலாதிக்க அரசு உலகின் தலைவனாக முடிசூட்டிக் கொண்டது. ஏகாதிபத்திய நாடுகளின் நலன்களை, அதாவது ஏகாதிபத்திய நிதி மூலதனக் கும்பல் மற்றும் பன்னாட்டு, தேசங்கடந்த தொழில்கழங்களின் நலன்களைப் பாதுகாக்கக்கூடிய வகையில் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வர்த்தகக் கழகம் ஆகியவை ஏழை நாடுகளின் அரசுகளுக்கு மேலான ஒன்றாகத் தம்மை நிலைநிறுத்திக் கொண்டன.

அறிவுசார் சொத்துரிமைச் சட்டம் (TRIPS) மற்றும் வர்த்தகம் சார் முதலீட்டு ஒப்பந்தங்கள் (TRIMS) ஆகியவை மூலம் ஏழை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் தமது மூலதனத்தையும் தொழில் நுட்பங்களையும் தயாரிப்பு முறைகளையும் (formula) அந்நாடுகள் தேசியமயமாக்கிவிடாமல் ஏகாதிபத்திய நாடுகள் தற்காப்பு ஏற்பாடுகளைச் செய்து கொண்டன.

இந்தியாவில் 1990-களின் தொடக்கத்தில் அந்நியச் செலாவணி நெருக்கடி ஏற்பட்டு, ரிசர்வ் வங்கியின் இருப்பிலிருந்த தங்கத்தைச் சர்வதேச நாணய நிதியத்திடம் அடமானம் வைக்க நேரிட்டது. இந்தப் பொருளாதார நெருக்கடியின் பின்னணியில் ஆட்சியைப் பிடித்த நரசிம்ம ராவ் கும்பல், ஏகாதிபத்திய நாடுகளின் நிர்பந்தத்திற்குப் பணிந்து மன்மோகன் சிங்கை நிதியமைச்சராக்கியது. இந்த இணை லைசென்ஸ் ராஜ் என சாடப்பட்டு வந்த கலப்பினப் பொருளாதாரத்தைக் கைவிட்டு, தனியார்மயம்-தாராளமயம்-உலகமயத்தை இந்தியாவில் திணித்தது.

●●●

1980-களுக்குப் பிறகு அறிவியல் மற்றும் தொழில் நுட்பங்களில் ஏற்பட்ட வளர்ச்சிகள் ஏகபோக முதலாளி வர்க்கத்திற்கு, சர்வதேச நாடுகளுக்கு இடையே ஓர் புதிய உழைப்புப் பிரிவினையை உருவாக்குவதற்கு வழி ஏற்படுத்திக் கொடுத்தது. ஒரு பொருளை முழுமையாக ஒரு நாட்டில் உற்பத்தி செய்வது அல்லது பல்வேறு நாடுகளில் உற்பத்தி செய்வது என்பதற்குப் பதிலாக, ஒரு பொருளை உருவாக்குவதற்குத் தேவையான அதனின் பாகங்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்டு, அந்நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு, வேறொரு நாட்டில் இணைக்கப்பட்டு முழு சரக்காகச் சந்தைக்கு வந்தன.


எடுத்துக்காட்டாக, ஆப்பிள் செல்பேசியை எடுத்துக் கொண்டால், அது அமெரிக்கத் தயாரிப்பாக சந்தையில் விற்கப்பட்டாலும், உண்மையில் அச்செல்பேசி உற்பத்தி செய்யப்படும் நாடு சீனாவாகும்.

ஹைட்ராக்சி குளோரோகுயின் உள்ளிட்டுப் பல்வேறு உயிர் காக்கும் மருந்துப் பொருட்கள் உற்பத்தியில் இந்தியா சர்வதேச அளவில் குறிப்பிடத்தக்க இடத்தில் இருந்தாலும், இம்மருந்துப் பொருட்களுக்குத் தேவைப்படும் மூலப்பொருட்களை சீனாவிலிருந்துதான் இந்தியா இறக்குமதி செய்துவருகிறது. இந்தியாவின் மருந்து மூலப்பொருள் இறக்குமதியில் சீனாவின் பங்கு 70 சதவீதமாகும் எனக் குறிப்பிடுகிறது, இந்தியத் தரகு முதலாளிகளின் சங்கம் (சி.ஐ.ஐ.).

விமானங்கள், ஆயுதத் தளவாடங்கள் போன்ற சில கேந்திரமான உற்பத்திப் பொருட்கள் தவிர, ஆகப் பெரும்பாலான நுகர்பொருட்களும், உயிர் காக்கும் மருந்துப் பொருட்களும், இயந்திரங்களும்கூட இந்தப்

பிரிவினையின்படிதான் இன்று உற்பத்தி செய்யப்பட்டு சந்தைப்படுத்தப்படுகின்றன.

ஏகாதிபத்திய நாடுகளைச் சேர்ந்த பன்னாட்டு நிறுவனங்களும், தேசங்கடந்த தொழிற்கழகங்களும் தத்தமது நாடுகளில் அதிகக் கூலி கொடுத்துப் பொருட்களை உற்பத்தி செய்வதற்குப் பதிலாக, இந்தியா உள்ளிட்ட ஏழை நாடுகளில் கிடைக்கும் மலிவான உழைப்பு சக்தி மற்றும் மலிவான மூலவள ஆதாரங்களைப் பயன்படுத்திப் பொருட்களை உற்பத்தி செய்வதன் மூலம் பெருத்த இலாபம் ஈட்டும் வாய்ப்பு கிடைப்பதால், அந்நாடுகளில் இருந்த தமது தொழிற்சாலைகளை ஏழை நாடுகளுக்கு இடம் மாற்றிக் கொண்டன.



பூவுலகின் நண்பர்கள் சுந்தரராஜன்.

இத்தொழிற்சாலைகள் பன்னாட்டு நிறுவனங்களின் சொந்த நிறுவனங்களாகவோ அல்லது நேரடியானதுணை நிறுவனங்களாகவோ அல்லது உள்நாட்டு முதலாளி களோடு இணைந்து நடத்தப்படும் கூட்டு நிறுவனங் களாகவோ அமைக்கப்பட்டன. மேலும், அத்தொழிற் சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களும்கூட அவுட் சோர்சிங் முறையில் சிறுதொழில் நிறுவனங் களுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டன. ஆகப்பெரும் பாலான தொழிலாளர்களும் ஒப்பந்த தொழிலாளர் களாகவே பணியமர்த்தப்பட்டனர். இதன் மூலம் நிரந்தரத் தொழிலாளர், சங்கம் ஆகிய தொல்லைகள் தவிர்க்கப்பட்டன. இத்தகைய ஏற்பாடுகளின் மூலம் ஏதாவது பிரச்சினை ஏற்பட்டாலோ அல்லது தொழிற் சாலையை வேறு மலிவான உழைப்பு சக்தி கிடைக்கும் நாட்டிற்கு மாற்ற விரும்பினாலோ தமக்கு எவ்வித நட்டமும் இன்றித் தொழிற்சாலையை மூடிவிட்டுச் செல்லும் வாய்ப்புகளை உருவாக்கிக் கொண்டது முதலாளித்துவ வர்க்கம்.

மலிவான உழைப்பு, மலிவான மூல வள ஆதாரங் களுக்காக மட்டுமின்றி, மேற்கத்திய நாடுகளில் சுற்றுப்புறச் சூழலுக்கு மாசு ஏற்படுத்திவந்த தொழில் களும் ஏழை நாடுகளின் தலையில் கட்டப்பட்டன. அமெரிக்கா தனது நாட்டில் ஹைட்ராக்சி குளோரோகுயின் மருந்தையோ, அதனின் மூலப் பொருட்களையோ உற்பத்தி செய்யாமல், அம்மாத்திரையை இந்தியாவிலிருந்து இறக் குமதி செய்துகொள்வதற்கு, அம்மாத்திரையை உற்பத்தி செய்யும்போது ஏற்படும் சுற்றுச் சூழல் மாசும் ஒரு காரணம் எனக் குறிப்பிடுகிறார், பூவுலகின் நண்பர்கள் அமைப்பைச் சேர்ந்த சுந்தரராஜன்.

அந்நிய மூலதனம் மற்றும் அந்நியத் தொழில்நுட்பம் ஆகியவற்றின் தயவின்றி ஏழை நாடுகளைச் சேர்ந்த உள்நாட்டுத் தரகு முதலாளி வர்க்கம் வளர்ச்சி அடைய முடியாது என்பதால், அவ்வர்க்கமும், அவற்றின் அரசியல் பிரதி நிதிகளும் இவ்விரண்டையும் பெறுவதற்கு ஏகாதிபத்திய நாடுகள் விதிக்கும் அனைத்து நிபந்தனைகளையும் கண்ணை மூடிக் கொண்டு ஏற்றுக்கொண்டன.


இதற்கேற்ப இந்தியா உள்ளிட்ட ஏழை நாடுகளில் அந்நிய மூலதனத்தைக் கட்டுப்படுத்தும் சட்டங்கள், வரம்புகள் மட்டுமின்றி, தொழிலாளர் நலச் சட்டங்கள், சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புச் சட்டங்கள், தொழில் வரி, வருமான வரிச் சட்டங்கள், ஏற்றுமதி - இறக்குமதி கொள்கைகள் அனைத்தும் அந்நிய மூலதனம் மற்றும் அதனின் கூட்டாளியான உள்நாட்டு தரகு முதலாளிகள் ஆகியோரின் நலனுக்கு ஏற்ற வகையில் மாற்றப்பட்டன.

இன்னொருபுறத்தில் தொழில்களில் முதலீடு செய்வதைவிட, பங்குச் சந்தையிலும், வங்கி, காப்பீடு உள்ளிட்ட நிதித் துறைகளிலும், ரியல் எஸ்டேட், மருத்துவம், சுற்றுலா, ஹோட்டல் உள்ளிட்ட சேவைத் துறைகளிலும், பெட்ரோல், நிலக்கரி, ஸ்பெக்ட்ரம் உள்ளிட்ட மூல வளங்களிலும் முதலீடு செய்வது மிகப் பிரம்மாண்டமான இலாபத்தை ஈட்டித் தருவதாக அமைவதால், விவசாயம், தொழில் ஆகிய துறைகளைவிட சேவைத் துறை ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியது.

ஒரு நாட்டின் உற்பத்தி மற்றும் வளர்ச்சியெல்லாம் அந்நாட்டு மக்களின் தேவையிலிருந்து கட்டியெழுப்பப் படாமல், முதலாளிகளின் இலாப நோக்கிலிருந்து மட்டுமே அணுகப்பட்டது. முதலாளிகளின் இலாப வேட்டைக்கு எது உகந்ததோ, அதுவே நாட்டின் வளர்ச்சிக்கு உகந்ததாகக் காட்டப்பட்டது.

எடுத்துக்காட்டாக, தனியார்மயம் - தாராளமயத்தின் விளைவாக சென்னை கார் உற்பத்தியில் ஆசியாவின் டெட்ராய்ட் நகரமாக மாறி விட்டதென்றும், சர்வதேச மருத்துவ சுற்றுலா மையமாக மாறிவிட்டதென்றும் பெருமை பாராட்டப்பட்டது.

(இடமிருந்து) பேராசிரியர் அலிமுதின் ஜும்லா மற்றும் உயிரியல் அறிஞர் ரோல்ஃப் ஹில்ஜென்ஃபெல்ட்.





இப்பெருமையால் தமிழக மக்களுக்குக் கிடைத்த பயன் என்ன? நாலாயிரத்து ஐநூறு ரூபாய் இல்லாமல் கரோனா பரிசோதனை செய்ய முடியாது என நிபந்தனை விதிக்கின்றன, தமிழகத்திலுள்ள ஐந்து நட்சத்திர தனியார் மருத்துவ மனைகள்.

வெண்டிலேட்டருக்கும் மருத்துவ பாதுகாப்பு உடைகளுக்கும் முகக் கவசங்களுக்கும் இறக்குமதியை மட்டுமே நம்பியிருந்த தமிழக அரசு, கரோனா பரவத் தொடங்கிய பிறகுதான் இம்மருத்துவ உபகரணங்களைத் தமிழகத்திலேயே தயாரிப்பதற்கான தொழிற் கொள்கைகளை வெளியிடுகிறது.

குதிரை வெளியே ஓடிப்போன பிறகு லாயத்தைப் பூட்டும் முட்டாள்தனத்திற்கு ஒப்பானது இது. வெண்டிலேட்டர் உற்பத்தி செய்யப்பட்டு, அவற்றின் தரம் உறுதிப்படுத்தப்பட்டு அரசு மருத்துவமனைக்கு வந்து சேருவதற்குள் எத்துணை பேரைக் காவு கொடுப்பது?

நட்சத்திரப் போர் நடத்தும் அளவிற்கு அறிவியல்-தொழில்நுட்பத்தில் முன்னேறியிருக்கும் அமெரிக்கா, ஹைட்ராக்சி குளோரோகுயின் மாத்திரையை இந்தியாவிலிருந்து பெற வேண்டியிருப்பதையும்; நிலவுக்கும் செவ்வாய்க்கும் ராக்கெட்டுகளை ஏவும் அளவிற்கு வளர்ச்சியடைந்திருக்கும் இந்தியா என் 95 முகக் கவசத்தை சீனாவிலிருந்து இறக்குமதி செய்து பெறுவதையும் இந்தப் பின்னணியிலிருந்துதான் புரிந்துகொள்ள வேண்டும்.

●●●

**ச**ந்தைப் பொருளாதாரத்தில் சில ஏற்ற இறக்கங்கள் இருந்தாலும், அது அனைத்தையும் சீர்படுத்திவிடும். அதனால் அரசின் தலையீடு தேவையில்லை என்றார்கள். ஆனால், இப்பொழுது நாம் காண்பதென்ன? அரசும் சமூகமும் தலையீடு செய்யவில்லை என்றால், கரோனா தொற்றிலிருந்து பெருவாரியான உயிர்களைக் காப்பாற்ற முடியாது. தொழிலாளி வர்க்கத்தை மட்டுமல்ல, நடுத்தர வர்க்கத்தையும்கூடப் பட்டினியிலிருந்து காப்பாற்ற முடியாது என்பது ஒவ்வொரு நாளும் நிரூபணமாகி வருகிறது.

ஐரோப்பிய நாட்டு அரசுகள் தொழிலாளி மற்றும் நடுத்தர வர்க்க குடும்பங்களைக் காப்பாற்ற பராமரிப்பு நிதி ஒதுக்குகின்றன. இங்கிலாந்து அரசு தமது நாட்டு உற்பத்தியாளர்களைச் சுவாசக் கருவிகளைத் தயாரிக்குமாறு கட்டளையிடுகிறது. அமெரிக்க அரசுத் தலைவர் பாதுகாப்பு உற்பத்திச் சட்டத்தைப் பயன்படுத்தி என் 95 முகக் கவசங்களைத் தயாரிக்குமாறு உத்தரவிடுகிறார். அவசியம் ஏற்பட்டால், தடுப்பூசி தயாரிக்கும் நிறுவனங்களைத் தேசியமயமாக்குவோம் என அறிவிக்கிறார், பிரெஞ்சு மக்கள் நலவாழ்வுத் துறை அமைச்சர். தனியார் மருத்துவமனைகளை அரசு எடுத்துக் கொள்வதாக அறிவிக்கிறது, ஸ்பெயின் அரசு. தேவையான அளவிலும் கட்டுப்படியாகக் கூடிய விலையிலும் மருந்துகளை உற்பத்தி செய்து விற்க வேண்டுமென இசுரேல், சிலி அரசுகள் உத்தரவிடுகின்றன.



இந்தியாவை ஏகாதிபத்திய உலகமயத்திற்குத் திறந்துவிட்ட மன்மோகன் சிங் – நரசிம்ம ராவ் இணை.

தனியார் முதலாளிகளை நம்ப முடியாது. அரசு தலையீடு செய்யாமல் இந்நெருக்கடியிலிருந்து மக்களை மீட்க முடியாது என்பதன் நிரூபணங்கள்தான் இந்த நடவடிக்கைகள். அதேசமயத்தில் கார்ப்பரேட் நிறுவனங்களோ இந்த நெருக்கடியைப் பயன்படுத்திக் கொண்டு வேலை நீக்கத்தையும் கூலி வெட்டையும் அமல்படுத்திவிடத்தான் முனைப்புக் காட்டுகின்றன.

“கரோனா வைரஸ் குடும்பத்தைச் சேர்ந்த மெர்ஸ் தொற்று நோய் பரவிய சமயத்தில் கரோனா வைரஸ் குடும்பத்தை அழிக்கக்கூடிய ஒருங்கிணைந்த தடுப்பூசியைக் கண்டுபிடிக்கக்கூடிய ஓர் அருமையான வாய்ப்பு நமக்குக் கிட்டியது. ஆனால், அந்நோய்ப் பரவல் விரிந்த அளவில் இல்லாமல் போனதால் அவ்வாய்ப்பை நாம் தவறவிட்டுவிட்டதாக”க் குறிப்பிடுகிறார், இலண்டனிலுள்ள சர்வதேசிய சுகாதாரப் பல்கலைக்கழகக் கல்லூரியில் தொற்று நோய் பேராசிரியராகப் பணியாற்றி வரும் அலிமுதின் ஜும்லா.

“சார்ஸ் தொற்றுக்கு ஒரு தடுப்பூசி கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியை, அவ்வாராய்ச்சியில் ஈடுபட்டிருந்த ஏகபோக மருந்துக் கழகங்கள் திடீரென நிறுத்திக் கொண்டன. இதற்குக் காரணம், அத்தொற்று நோய் பரவுவது குறையத் தொடங்கியதையடுத்து, அதில் முதலீடு செய்வதால் அதிக இலாபம் ஈட்ட முடியாது என அந்நிறுவனங்கள் கருதியதுதான்” எனக் குறிப்

தனியார்மயம் – தாராளமயத்தை மீண்டும் நிகழ்ச்சி நிரலுக்குக் கொண்டுவந்த மறைந்த ரொனால்ட் ரீகன் மற்றும் மார்க்கரெட் தாட்சர். (கோப்புப் படம்)



பிடுகிறார், கட்டமைப்பு உயிரியல் அறிஞர் ரோல்ஃப் ஹில்ஜென்ஃபெல்ட்.

இப்பொழுது அமெரிக்கா, ஜெர்மனி, இந்தியா எனப் பல நாடுகளைச் சேர்ந்த மருந்து கம்பெனிகள் கரோனா தொற்றுக்குக் குறிப்பான மருந்தோ, தடுப் பூசியோ கண்டுபிடிப்பதற்குத் தீவிரமாக முயன்று வருவதற்குக் காரணம், இத்தொற்று நோய் உருவாக் கியிருக்கும் பிரம்மாண்டமான சந்தைதான். ஏதோ வொரு காரணத்தால், இத்தொற்றும் பரவுவது குறையத் தொடங்கினால் மருந்து கம்பெனிகள் தமது தடுப்பூசி கண்டுபிடிக்கும் முயற்சியைக் கைவிடத் தயங்க மாட்டார்கள்.

இலாபம், அதீத இலாபம் என்பதை மட்டுமே தாரக மந்திரமாகக் கொண்டு இயங்கக்கூடிய தனியார் மயம் - தாராளமயம் - உலகமயம் என்ற இப்பொரு ளாதாரக் கட்டுமானத்தையும், அதனின் அடியாளாகச் செயல்பட்டுவரும் அரசுகளையும் பொது மக்கள் இனியும் ஏன் சுமக்க வேண்டும்? தனியார்மயம்-தாராளமயம் தங்க ஊசியா கவே இருந்துவிட்டுப் போகட்டும். அதற்காக நாம் ஏன் அதையெடுத்து நமது கண்களைக் குத்திக் கொள்ள வேண்டும்?

உலகெங்கிலுமுள்ள உழைக்கும் வர்க்கத் தினர் இன்று சந்தித்து வரும் வேலையிழப்பு, கூலி வெட்டு, வாழ்வாதாரங்கள் அழிந்து படுவது உள்ளிட்ட நெருக்கடிகளுக்குக் காரணம் கரோனா தொற்று நோய் கிடையாது. இந்த நெருக்கடிகளைத் தோற்றுவித்துத் தீவிரப்படுத்தியிருப்பது தனியார்மயம்-தாராளமயம்தான். இப்படிப்பட்டதொரு சமயத்தில், பட்ட காலிலே படும் என்பதற் கேற்ப கரோனா நோய்த் தொற்றையும் நாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது.

ஒவ்வொரு பொருளாதார நெருக்கடியும் தனியார் மயம் - தாராளமயம் - உலகமயம் தோற்றுப்போய் விட்டதை எடுத்துக்காட்டியுள்ளன. கரோனா தொற்றால் ஏற்படும் உயிர் பலிகளும், அதனைக் கட்டுப்படுத் துவதாகக் கூறி போடப்பட்ட ஊரடங்கின் எதிர் விளைவுகளும் இத்தோல்வியை சாதாரணப் பொதுமக் களும் புரிந்துகொள்ளும்படி எடுத்துக்காட்டிவிட்டது. இப்பொருளாதாரக் கொள்கை தோற்றுப் போய்விட்டது என்பதோடு, இது அடிப்படையிலேயே உழைக்கும் மக்களுக்கு எதிரான கொள்கையாகும்.

கரோனா தொற்றிலிருந்து மக்களின் உயிரைக் காப் பாற்றினால் மட்டும் போதாது. கரோனா தொற்றை எதிர்கொள்ள அறிவிக்கப்பட்ட ஊரடங்காலும், அதற்கு முன்பே தீவிரமடைந்திருக்கும் பொருளாதார நெருக்கடியாலும் அழிக்கப்பட்டிருக்கும் உழைக்கும் மக்களின் வாழ்வாதாரங்களை மீட்டெடுப்பதும் அவசிய மானதாகும்.




தனியார்மயம்-தாராளமயம்-உலகமயம் உலக மக்க ளிடம் பகற்கனவுகளைத்தான் விதைத்து வருகிறது. 2020-இல் இந்தியா வல்லரசாகிவிடும் எனக் கடைவிரிக் கப்பட்டதைப் போல. உண்மையில் இப்பொருளாதாரக் கொள்கை அது நடைமுறைக்கு வந்த 1990-கள் தொடங் கியே ஒரு கால வரிசையில் அடுத்தடுத்துப் பல நெருக் கடிகளைத் தோற்றுவித்திருக்கிறது. ஒவ்வொரு நெருக் கடியின் போதும் பொதுப் பணத்தை வாரி விழுங்கித் தன்னைக் காப்பாற்றிக் கொண்டு, அந்நெருக்கடியின் சுமை முழுவதையும் உழைக்கும் மக்களின் மீது ஏற்றி வைத்தது.

இப்பொழுதும் அந்தச் சுமையை நம் மீது ஏற்றி வைக்க கார்ப்பரேட் முதலாளி வர்க்கமும், அவர் களின் அடியாட்களாகச் செயல்படும் தேர்ந்தெடுக்கப் பட்ட அரசுகளும் முயலுகின்றன. இந்த அயோக்கி யத்தனத்தை இனியும் நாம் அனுமதிக்கக் கூடாது, அனுமதிக்க முடியாது.

ஏகாதிபத்தியங்கள் திணித்திருக்கும் தனியார்மயம் - தாராளமயம் - உலகமயப் பொருளாதாரக் கொள்கை, அதற்கேற்ற அரசு கட்டுமானத்தை ஒழித்துவிட்டு, அதனிடத்தில் உழைக்கும் மக்களின் உயிர், உணவு, வேலை, வாழ்வாதாரம் ஆகியவற்றைப் பாதுகாக்கக் கூடிய பொருளாதாரக் கொள்கையை, மக்கள் நலனை முதன்மைபடுத்தக்கூடிய அரசை உருவாக்கி நடை முறைக்குக் கொண்டுவர வேண்டும்.

கரோனா தொற்று நோய் நெருக்கடியை எதிர் கொள்ள கார்ப்பரேட் முதலாளி வர்க்கத்தின் மீது கொஞ்சம் கூடுதலாக வரி போடச் சொன்ன வருமான வரித் துறை அதிகாரிகளையே வேட்டையாடிய மோடி அரசு, தனியார்மயம்-தாராளமயத்தை ஒழிக்கக் கோருவதை நிச்சயமாக ஏற்றுக் கொள்ளாதுதான். அவ்வாறென்றால், இந்த மக்கள் விரோத அரசையும் தூக்கியெறிய நாம் முன் வரத்தான் வேண்டும்.

■ **கதிரேசன்**

## பேரழிவு முதலாளித்துவம்:

# பருவநிலை மாற்றம், கோவிட்-19 மற்றும் பொருளாதார நெருக்கடி!

**பெ**ரும்பாதிப்பை ஏற்படுத்திவரும் கரோனா வைரஸ் பெருந்தொற்றுநோயின் பின்னணியில், முதலாளித்துவத்தின் தற்போதைய நிலை மற்றும் பொருளாதார நெருக்கடி ஆகியவற்றோடு தொடர்பு படுத்தி, அத்தொற்று குறித்துப் பிரபலமான சோசலிச இதழான மன்த்லி ரிவ்யூ-வின் (Monthly Review - MR) ஆசிரியர் ஜான் பெல்லாமி ஃபாஸ்டரிடம், வங்க தேச எழுத்தாளரான ஃபரூக் சௌத்ரி கடந்த மார்ச் 2020-இல் நடத்திய நேர்காணல் மன்த்லி ரிவ்யூ இதழில் வெளியாகியிருக்கிறது.

ஓரகன் (Oregon) பல்கலைக்கழகத்தில் சமூகவியல் பேராசிரியராகப் பணியாற்றிவரும் ஃபாஸ்டர், அரசியல், பொருளாதாரம், சுற்றுச்சூழல் குறித்து ஏராளமான நூல்களை எழுதியிருப்பதோடு, பெருந்தொற்று நோய்களை முதலாளித்துவப் பொருளாதாரம், அதனின் நெருக்கடிகள் மற்றும் சுற்றுப்புறச் சூழல் மாற்றங்களோடு தொடர்புகொண்டதாகக் குறிப்பிடுகிறார்.

வங்கதேச எழுத்தாளரான ஃபரூக் சௌத்ரி, நெருக்கடியின் காலம், மாபெரும் நிதி நெருக்கடி - அடுத்தது என்ன? உள்ளிட்ட நூல்களின் ஆசிரியராவார்.

ஆங்கில மொழியில் வெளியாகியிருக்கும் இந்நேர்காணலை புதிய ஜனநாயகம் வாசகர்களுக்காக தமிழில் சுருக்கமாக மொழியாக்கம் செய்து வெளியிடுகிறோம்.

– ஆசிரியர் குழு

**ஃபரூக் சௌத்ரி :** மார்க்சின் வளர்சிதை மாற்றப் பிளவு (metobolic rift) பற்றிய கோட்பாட்டை நீங்கள் நீண்டகாலமாக ஆராய்ந்தும் அதை விரிவுபடுத்தியும் வருகிறீர்கள். இன்று இந்த கரோனா வைரஸ் பெருந்தொற்றைக் கருத்தில் கொண்டு தற்போதைய நிலைமையை, உங்களது பகுப்பாய்வின் கண்ணோட்டத்தில் எப்படிப் பார்க்கிறீர்கள்?

**ஜான் பெல்லாமி ஃபாஸ்டர் :** *திடீரெனத் தோன்றியிருக்கும் சார்ஸ்-கோவ்-2 வைரஸ் மற்றும் கோவிட்-19 பெருந்தொற்றுடன் கூடிய நிலைமை உலகெங்கும் மிகவும் கவலையளிக்கக்கூடியதாக இருப்பது கண்கூடு. இதன் காரணங்கள், விளைவுகள் இரண்டுமே முதலாளித்துவ சமூக உறவுகளுடன் நெருக்கமான தொடர்புடையவை.*

*மார்க்சின் வளர்சிதை மாற்றப் பிளவு குறித்த கோட்பாடு சூழலியலை அல்லது வளர்சிதை மாற்ற உறவுகளைப் பார்க்கும் கண்ணோட்டமாகும். குறிப்பாக, சமூகத்திற்கும் இயற்கைக்கும் இடையிலிருக்கும் சிக்கலான, ஒன்றையொன்று சார்ந்த உறவுகளைத் தற்போதைய அமைப்புச் சூழலியலின் (Systems Ecology) வளர்ச்சிக்கு வெகுநாட்களுக்கு முன்பே, ஒரு அமைப்புமுறையிலான அணுகுமுறையோடு பார்க்கும் கண்ணோட்டமாக அமைந்தது. சொல்லப்போனால், தற்போதைய அமைப்புச் சூழலியல் அதைப் போன்றதொரு அடித்தளத்திலிருந்துதான் உருவானது.*

ஜான் பெல்லாமி ஃபாஸ்டர்.




*ஜெர்மன் வேதியியலாளர் ஜஸ்டஸ் வான் லைபிக் என்பவரின் ஆய்வினை அடிப்படையாகக் கொண்டு மார்க்ஸ் மண்ணின் வளர்சிதை மாற்றத்தில் ஏற்படும் பிளவு குறித்து கவனம் செலுத்தினார்.*

*கிராமப்புறங்களிலிருந்து உணவு மற்றும் நார்ச்சத்துப் பொருட்களை நூற்றுக்கணக்கான, இன்னும் ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ள நகரங்களுக்குக் கொண்டுசெல்வதனால், அந்த மண்ணுக்கு அவசியமான ஊட்டச்சத்துக்களான நைட்ரஜன் பாஸ்பரஸ் மற்றும் பொட்டாசியம் ஆகியவை மீண்டும் அம்மண்ணுக்கே திரும்பக் கிடைக்காமல் போகின்றன. இதனால், (ஒருபுறம்) அந்த மண் சத்துக்களை இழப்பதோடு, (மறுபுறம்) வேளாண் பொருட்களின் கழிவுகள் நகரங்களை மாசாக்குவதில் சென்று முடிகின்றன. இது, இயற்கையின் அனைத்துந்தழுவிய வளர்சிதை மாற்றம் என்று மார்க்ஸ் அழைத்த நிகழ்ச்சிப்போக்கில் முதலாளித்துவ உற்பத்தியும் அதன் சீரான ஒன்றுகுவிப்பும் எவ்வாறு பிளவுகளையும் முறிவுகளையும் உண்டாக்கின என்பதில் பெரும்பங்கு வகிக்கிறது.*

*வளர்சிதை மாற்றப் பிளவின் நிலைப்பாடென்பது, உண்மையில் முற்போக்*

கான அமைப்புச் சூழலியலின் நிலைப் பாடாகும். மேலும், இது சமூக, குறிப் பாக முதலாளித்துவ உறவுகளை நடை முறை சார்ந்து ஆராய்வதாக அமைவதால், தற்போதைய கரோனா வைரஸ் பெருந் தொற்று குறித்துப் புரிந்து கொள்வதற்கு இந்நிலைப்பாடு முக்கியமானதாகும்.



காரல் மார்க்ஸ்.

பரிணாம உயிரியலாளரும் தொற்று நோய் நிபுணரும் கண வரலாற்றுப் புவியி யலாளரும் (phylogeography) பெரும் பண்ணைகள் பெரும் தொற்றுக் காய்ச் சலை உருவாக்குகின்றன (Big Farms Make Big Flu) என்ற நூலின் ஆசிரி யருமான ராப் வாலஸும், அவரோடு உடன் பணியாற்றும் அறிவியலாளர்கள் குழுவும் கோவிட்-19-இன் தோற்றத் தையும் பரவலையும் மூலதன பரவல் சுற்றுகளோடு (Capital Circuits) தொடர்புபடுத்திப் பார்க்கமுடியும் என்று வாதிடுகின்றனர் (மன்த்லி ரிவ்யூ இணைய இதழில் மார்ச் 27 அன்று வெளியான கோவிட் -19 மற்றும் மூலதனச் சுற்றுக்கள்).

முதலாளித்துவமே தன்னளவில் முதன்மையான நோய் பரப்பியாக இருக்கிறது. இயற்கையான வேளாண் அமைப்புகளில் அதி தீவிரமான வேளாண் வணிகத்தின் ஊடுருவலே சார்ஸ் கோவிட்-19 மற்றும் பிற சமீபத்திய புதிய வகை வைரஸ்களின் தோற்றுவாயாக இருப்ப தோடு, சூழலியல் அமைப்பிலும், உயிரினங்களிலும், உயிரினங்களுக்கு இடையேயும் பிளவுகளை உருவாக்கி, உலகளாவிய அளவில் பெருந்தோற்றுகள் தோன்றுவ தற்கும் காரணமாகின்றது என்று ராப் வாலஸ் விளக்கு கிறார்.

“சூழலியலுக்கும் பொருளாதாரத்திற்கும் இடையேயும் நகர்ப்புறத்திற்கும், கிராமங்கள் மற்றும் வனப்பகுதிகளுக்கும் இடையேயுமான வளர்சிதை மாற்றப் பிளவைச் சரிசெய்யக்கூடிய ஒரு சூழலிய சோச லிசத்தை (Ecosocialism) உருவாக்குவதுதான் இந்த மோசமான நோய்க்கிருமிகள் உருவா வதைத் தடுப்பதற்கான கட்டமைப்புரீதி யான தீர்வாக இருக்க முடியும்” என்று தன் புதியவகை கரோனா வைரஸ் பற்றிய குறிப்புகள் ( எம்.ஆர். ஆன்லைன், ஜனவரி 29, 2020) என்ற கட்டுரையில் வாலஸ் வாதிடுகிறார்.

இந்த சூழலியல் / தொற்று நோயியல் விமர்சனம் புதிதானது அல்ல என்பதை நாம் புரிந்து கொள்வது அவசியம். தொழிற் புரட்சியின் போது நிலவிய நோய்கள் / தொற்றுநோய்ப் பரவல் நிலைமைகள் பற்றி, குறிப்பாக அதன் வர்க்கரீதி யான அம்சங்களை, இளம் எங்கெல்ஸ் 1845-ஆம் ஆண்டு வெளியான, அவரது இங்கிலாந்தில் தொழிலாளர் வர்க்கத்தின் நிலைமைகள் என்ற நூலில் விரிவாக எடுத் துரைத்துள்ளார். எங்கெல்ஸ் கூடுதலாக, அத்தகைய இன்றியமையா நிலைமை களைச் சமூகப் படுகொலை என்றே சுட்டிக்காட்டினார்.

“சூழலியல் நிலைமைகளில் மனிதனால் ஏற்படுத்தப்படும் மாற்றங் கள்தான் அனைத்து நவீன தொற்றுநோய் களுக்கான மூல காரணம்” என்பதை ஒரு நூற்றாண்டுக்கு முன்பே சார்லஸ் டார்வின் மற்றும் தாமஸ் ஹக்ஸ்லி ஆகியோரின் சீடரும், மார்க்சின் நெருங்கிய நண்பரும், விலங்கியல்நிபுணருமானரேலங்கெஸ்டர் தனது மனிதனின் இராஜ்ஜியம் என்ற நூலில் இயற்கையின் பழிவாங்கல் என்னும் அத்தியாயத்தில் சுட்டிக்காட்டி எச்சரித்திருக்கிறார்.

பெரும் எண்ணிக்கையிலான விலங்குகளையும் தாவரங்களையும் உற்பத்தி செய்யும் தனது பேராசை மிக்க முயற்சியில், வயலிலும், பண்ணைகளிலும் இயற்கைக்கு மாறான உயிரினக் கூட்டங்களையும், நகரங் களிலும், கோட்டைகொத்தளங்களிலும் இயற்கைக்கு மாறான மனிதக் கூட்டத்தையும் மனிதன் குவித்து வைத்திருக்கிறான் என்று லங்கெஸ்டர் எழுதியுள்ளார்.

இதன் விளைவாக ஒட்டுண்ணிகள், வைரஸ்கள் மற்றும் பாக்டீரியாக்களுடன் தொடர்புடைய புதிய நோய்கள் வளர்ந்துள்ளன. மூலதனத்தின் கூர்மையான விமர்சகரான லங்கெஸ்டரைப் பொருத்தவரையில், பிரச்சினை “சந்தைகளிலும்” மாநகரங்களைச் சேர்ந்த நிதி வணிகர்களிடம் உள்ளது.

இயற்கையின் பழிவாங்கல்கள் குறித்த லங்கெஸ்டரின் எச்சரிக்கைகள், பெருமளவில் புறக் கணிக்கப்படுள்ளன. கடந்த 2000-ஆம் ஆண்டு செப்டெம்பர் மன்த்லி ரிவ்யூ இதழில் முதலாளித் துவம் ஒரு நோயா? என்ற கட்டுரையை ரிச்சர்ட் லெவின்ஸ் எழுதுகையில், “மரபுவழியிலான பொது சுகாதார முறை, பெருந்தொற்று நோய் களின் அச்சுறுத்தல் வளர்வதைப் புரிந்து கொள்ளத் தவறுவதற்கு, அது உலக வரலாறு, பிற உயிரினங்கள், பரிணாமம் மற்றும் சூழலியல் ஆகியவை குறித்து கவனத்தில் கொள்ளத் தவறியதுதான் காரணம்” என வாதிட்டிருக்கிறார்.

பிரடெரிக் எங்கெல்ஸ்.



இந்த வகையில் புதிது புதிதாக உருவாகி வரும் இத்தகைய பெருந் தொற்று நோய்கள் தடுக்கப்படவேண்டு மெனில், ஏகபோக பெரும்பண்ணை வணிகத்தின் மொத்தக் கட்டமைப்பையே புரட்டிப்போடப்பட வேண்டும் என்பதை விளக்குவதில் வாலஸின் “பெரும் பண்ணைகள் பெரும் காய்ச்சலை



**இயற்கை நியதிகளுக்கு மாறாக உருவாக்கப்படும் பெரும்பண்ணைகள் தம் பங்கிற்குப் பெருந்தொற்றுக்களைத் தோற்றுவிக்கின்றன.**

*உருவாக்குகின்றன” என்ற நூல் முக்கியப் பங்களிப்பு செய்திருக்கிறது.*

*மானுட காலகட்டமான (Anthropocene) இன்றைய தருவாயில், உயிரினங்கள், சூழலியல் அமைப்பு, வளிமண்டலம் உள்ளிட்ட அனைத்திலும், மானுடத்தால் ஏற்படுத்தப்படும் பிளவுகளை முதலாளித்துவம் தான் ஏற்படுத்துகிறது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. இது நமது காலகட்டத்தில் சமூக சூழலியல் நெருக்கடிகளை ஏற்படுத்துகிறது. இதற்கான அடிப்படைக் காரணம் உற்பத்தி ஒன்றுகுவித்தல் அமைப்பிலுள்ள முரண்பாடுகளே ஆகும்.*

*இதே மூலதனத்தின் ஆட்சி, பரந்த வர்க்க மற்றும் நாடுகளுக்கு இடையேயான ஏற்றத்தாழ்வுகளை உருவாக்குவதன் வழியாக, மோசமான சுற்றுச்சூழல் அபாயங்கள் ஏழைகளையும் நலிந்தோரையும் பாதிக்கும்படியும், பணக்காரர்கள் ஒப்பீட்டளவில் பாதுகாப்பாக இருப்பதையும் உறுதிசெய்கின்றன. இது சமூகப் படுகொலை என்ற எங்கெல்ஸின் குற்றச்சாட்டிற்கு புதிய பொருளைத் தருகிறது.*

**ஃபரூக் சௌத்ரி :** பாதிக்கப்படத்தக்க கோள் (The Vulnerable Planet) என்ற உங்களது நூல், உலக சுற்றுச்சூழலின் பொருளாதார வரலாற்றைப் பற்றிப் பேசுகையில் முதலாளித்துவ பொருளாதாரம், நமது கோளின் சுற்றுச்சூழலையும் சூழலியலையும் அழித்து, இங்குள்ள அனைத்து உயிரினங்களையும் அச்சுறுத்துவதைப் பற்றிக் கூறுகிறது. இந்த அமைப்பு இலாபத்தின் பலிபீடத்தில் அறிவியலைத் தியாகம் செய்துள்ளது. மூலதனத் திரட்டலுக்கான சேவையில், மருத்துவ அறிவியல், இயற்கை அறிவியல் ஆகியவற்றை ஈடுபடுத்தியுள்ளது. மனித வாழ்விடங்கள் பகுத்தறிவற்ற, மனிதத் தன்மையற்ற வகையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. பல நாடுகளிலும் இந்த பெருந்தொற்றின் காரணமாக ஏற்படும் பெரும் உயிரிழப்புகள் என்ற இன்றைய எதார்த்தத்தை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள் ?

**ஜான் பெல்லாமி ஃபாஸ்டர் :** *கால் நூற்றாண்டுக்கு முன்னர் நான் பாதிக்கப்படத்தக்க கோள் (மன்த்லி ரிவ்யூ பதிப்பகம்-1994) என்ற நூலை எழுதியபோது, காலநிலை மாற்றம், உலகளாவிய உயிரினங்கள் அழிவு, உலகின் காடுகள் அழிப்பு, ஓசோன் அடுக்கின் சிதைவு ஆகியவற்றின் மீதான அக்கறையே அதற்குத் தூண்டுதலாக அமைந்தது.*

*கோள் அளவிலான சூழலியல் நெருக்கடியின் பின்னால் இருக்கும் முதலாளித்துவத்தின் அரசியல் பொருளாதாரத்தை புரிந்து கொண்டால் மட்டுமே, அந்நெருக்கடியின் தீவிரத்தைப் பற்றிப் பேசமுடியும் என்பது தெளிவாக தெரிந்தது. உலகப் பொருளாதாரம் தொடர்ந்து வளரத் தொடங்கியபோது, மனிதப் பொருளாதார செயல்முறைகளின் அளவானது இந்தப் புவியின் சூழலியல் சுழற்சியை எதிர்க்கத் தொடங்கியதன் மூலம் கோள் அளவிலான சூழலியல் பேரழிவுக்கான சாத்தியத்தை முன்னெப்போதும் இல்லாத வகையில் திறந்துவிட்டுள்ளது என்பதே மையமான வாதமாக இருந்தது.*

**கச்சா எண்ணெய் துரப்பணவுத் திட்டங்களால் மீளமுடியாத வகையில் மாசடைந்து போன நைஜீரியாவின் நைஜர் டெல்டா. (கோப்புப் படம்)**







கூடுதலாக, தேவையற்ற மற்றும் (இயற்கையை ஒத்த) செயற்கை (synthetic) நச்சுப் பொருட்களின் உற்பத்தியால் இந்நிலைமை மிகவும் மோசமடைந்தது. இறுதியில், ஒன்றுகுவிப்பில் மட்டுமே அக்கறை கொண்ட குறுகிய நேர்கோட்டுத் தர்க்கமே ஏகபோக முதலாளித்துவக் கட்டமைப்பின் எதார்த்தத்தைக் கட்டமைக்கிறது. இந்தப் போக்கை மனிதகுலம் திடீரென மாற்றினாலொழிய, முதலாளித்துவம் மற்றும் சுற்றுச்சூழலுக்கு இடையிலான மோதல், தவிர்க்கவியலாத வகையில் 21-ஆம் நூற்றாண்டில் பேரழிவை ஏற்படுத்தும்.

என்னைப் பொறுத்தவரை, அச்சமயத்தில் இதன் தர்க்கம் மிகவும் வெளிப்படையானதாக எனக்குத் தோன்றியதோடு, புதிதாக எழுந்த அறிவியல்பூர்வமான ஒருமித்த கருத்துக்களும் அதற்கு ஆதரவாக அமைந்தன.

உண்மையில், வளர்சிதை மாற்றப் பிளவு குறித்து தொடக்கத்திலிருந்து செய்யப்பட்ட பகுப்பாய்வில் மிகவும் முக்கியமானது என்னவெனில், அது எங்களை முதலாளித்துவத்துக்கும் சுற்றுச்சூழலுக்கும் இடையேயான எதிர்மறை இயங்கியலைப் புரிந்துகொள்ள முழுமையாக அனுமதித்ததே ஆகும்.

இது, பல்வேறு சுற்றுச்சூழல் மார்க்சியவாதிகளைப் பருவநிலை மாற்றம், உயிரினங்கள் அழிப்பு, காடுகள் அழிப்பு, தொழிற்துறைக்காக விலங்குகள் கொடுமைப்படுத்தப்படுதல், புதைபடிவ மூலதனம் உள்ளிட்ட பலதரப்பட்ட விடயங்களை, இ.பி.தாம்சனால் நாகரிகத்தின் இறுதிக் கட்டம் (Exterminism) என அழைக்கப்பட்டதையும் உள்ளிட்டு, அவற்றைப் பொருள்முதல்வாத இயங்கியல் அடிப்படையில் ஆய்வு செய்யுமாறு இட்டுச் சென்று.



எனினும், முதலாளித்துவ பொருளாதார முரண்பாடுகளில் கவனம் செலுத்தும் ஒரு கோட்பாட்டிற்கு மாற்றீடாக, முதலாளித்துவத்தின் சுற்றுச்சூழல் முரண்பாடுகள் பற்றிய கோட்பாட்டைப் பொருத்துவது ஒரு பெரும்பிழையாக இருக்கும். மாறாக, நாம் வாழும் காலத்தை வரையறுக்கும் மூலதனத்தின் கட்டமைப்பு நெருக்கடியின் கூறுகளாக, கோள் அளவிலான சூழலியல் நெருக்கடியும் உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தின் தடுமாற்றமும் அமைந்து, அவையிரண்டும் ஒன்றொடு ஒன்று இயங்கியல்ரீதியாகப் பின்னிப் பிணைந்துள்ளன என்பதைப் புரிந்துகொள்வதுதான் மிகவும் முக்கியமானது.

**ஃபரூக் சௌத்ரி :** மனிதகுலம் இத்தகைய சூழ்நிலையை ஒருபோதும் எதிர்கொள்ளவில்லை. இதிலிருந்து மீள்வதற்கான வழி எது ?

**ஜான் பெல்லாமி ஃபாஸ்டர் :** இதற்கு ஒரே பதில், வெகுநாட்களுக்கு முன்பே பெர்டோல்ட் ப்ரெக்ட் கூறியது போல, எரியும் வீட்டிலிருந்து வெளியேற வேண்டும் என்பதுதான்.

முதலாளித்துவத்தின் முடிவைவிட உலகத்தின் முடிவை கற்பனை செய்வது எளிது என்று இன்று இடதுசாரிகள் மத்தியில் பொதுவாகச் சொல்லப்படுகிறது. காலநிலை மாற்றம், கோவிட்-19, மற்றும் அதிகரித்து வரும் உலக முதலாளித்துவத்தின் நிதி நெருக்கடி ஆகியவற்றின் விளைவாகத் தற்போது அது இறுதியாக தலைகீழாக மாறிவிட்டது. முதலாளித்துவத்தின் முடிவைப் பற்றிக் கற்பனை செய்வது என்பது உலகத்தின் முடிவை விடச் சட்டென்று எளிதாகி விட்டது. உண்மையில் முந்தையது பிந்தையதை நடைமுறைக்கு ஒவ்வாததாக மாற்றும்.

முதலாளித்துவ அமைப்புமுறை தோல்வியடைந்துவிட்டது. தற்போது மனிதகுலம், அவசியம் என்ற வகையில் சுதந்திரத்துடன் ஒருங்கிணைந்து, புதிய, மேலதிகமாக நீடித்து நிற்கக்கூடிய, மேலதிகமான சமத்துவத்துடன் கூடிய உலகைக் கட்டமைப்பதற்கான போராட்டத்தை நோக்கி நகரவேண்டும்.

ஆனால், இது தானாகவே நடந்துவிடாது. சமிர் அமின், தனது சமகால முதலாளித்துவ வெடிப்பு எனும் நூலில் குறிப்பிட்டது போல (மன்த்லி ரிவ்யூ பதிப்பகம்-2013, 146), “துணிவு, அதிகத் துணிவு, எப்போதும் துணிவு”தான் இதற்குத் தேவை.

இதற்கு முதலாளித்துவத்துடனான ஒரு புரட்சிகரமான முறிவு தேவைப்படுகிறது. முதலாளித்துவத்துடன் என்ற குறுகிய பொருளில் மட்டுமல்லாமல், இன்று மூலதனத் திரட்டல் செயல்படும் களமான ஏகாதிபத்தியத்தின் முழு கட்டமைப்புடனும் இந்தப் புரட்சிகரமான முறிவு தேவைப்படுகிறது. சமுதாயம் முற்போக்கான புதியதொரு அடிப்படையில் மாற்றியமைக்கப்பட வேண்டும். நமக்கு முன் உள்ள தேர்வு வெளிப்படையானது: அழிவு அல்லது புரட்சி!

**மொழியாக்கம்: அழகு**

# மருத்துவர்களே, நீங்கள் எந்தப் பக்கம்?

உண்மையை உரத்துப் பேசுவதன் வழியாகத்தான் கரோனா நோய்த் தொற்றிலிருந்து மக்களை மட்டுமல்ல, மருத்துவர்கள் தம்மையும் காத்துக்கொள்ள முடியும்.

கரோனா நோய்த் தொற்றிலிருந்து மனித குலத்தைக் காப்பாற்ற உலகெங்கும் மருத்துவர்களும், செவிலியர்கள் உள்ளிட்ட துணை மருத்துவப் பணியாளர்களும் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுள் பலர் இப்போராட்டத்தில் தமது உயிரையும் இழந்து தியாகியாகியிருக்கிறார்கள். அவ்வாறு மனித குலத்திற்காகத் தமது உயிரைப் பணயம் வைத்த மருத்துவர்களுள் குறிப்பிடத்தக்கவர் சீனாவைச் சேர்ந்த 34 வயதான இளம் மருத்துவர் லீ வென்லியாங்.

மருத்துவர் லீ வென்லியாங்தான் கரோனா நோய்த் தொற்றை முதன்முதலில் இனங்கண்டவர். தனது சக மருத்துவர்களிடம் சார்ஸ் போன்று ஒரு புதிய வகையான நோய்த் தொற்று பரவ ஆரம்பித்திருக்கிறதென்ற சந்தேகத்தைப் பகிர்ந்துகொண்டவர்.

சந்தேகங்களும் கேள்விகளும்தான் எந்தவொரு அறிவியல் ஆராய்ச்சியின் அடிப்படையாக இருக்க முடியும். ஆனால், சீன அரசோ, லீ வென்லியாங், தனது சக மருத்துவர்களிடம் பகிர்ந்துகொண்ட இந்த சந்தேகத்தை வதந்தி பரப்புவதாகக் குற்றஞ்சுமத்தியது. வுஹான் மாகாண போலீசார் அவர் மீது வழக்கு பதிவு செய்ததாகவும் செய்திகள் வெளிவந்தன.

ஆனாலும், கடந்த டிசம்பர் மாத இறுதியிலேயே புதிய வகை தொற்றுநோயான கோவிட் 19 வுஹான் மாகாணத்தில் மிகத் தீவிரமாகப் பரவத் தொடங்கி, லீ வென்லியாங்கின் சந்தேகத்தை உறுதிப்படுத்தியது. உண்மையைக் கண்டறிந்த தன்னை சீன அரசு சிறுமைப்படுத்தியது பற்றியெல்லாம் கவலை கொள்ளாது, கரோனா நோயாளிகளுக்குச் சிகிச்சை அளித்து வந்த லீ வென்லியாங், அந்நோயாலேயே பாதிக்கப்பட்டு இறந்தும் போனார்.

கரோனா தொற்றை முன்னறிந்து கூறிய மறைந்த சீன மருத்துவர் லீ வென்லியாங்.



தொழில் அறத்தோடு உண்மையைப் பேசிய அவரது இழப்பு சீன மக்கள் மத்தியில் அரசுக்கு எதிரான ஆத்திரத்தை உருவாக்கியது. இதனைத் தொடர்ந்து சீன அரசு தனது தவறுக்கு வருத்தம் தெரிவித்து, "லீ வென்லியாங்கின் அறிவுரையைக் கேட்டிருந்தால், இந்நோய்த்தொற்றை முன்னரே கண்டறிந்து, அது பரவுவதைக் கட்டுப்படுத்தியிருக்க முடியும். பலர் உயிர் இழந்திருக்கமாட்டார்கள். அவருக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்கைத் திரும்பப் பெற்றுக் கொள்கிறோம்" எனக் குறிப்பிட்டு லீ வென்லியாங் குடும்பத்தினரிடம் மன்னிப்புக் கோரியிருக்கிறது.

சீனா நடந்த தவறுக்கு மன்னிப்பு கேட்டிருக்கிறது. ஆனால், இங்கு, இந்தியாவில் நிலைமை என்ன?

தமக்குத் தேவையான முகக் கவசம், பாதுகாப்பு உடைகள் உள்ளிட்டவற்றைப் போதுமான அளவிற்குக் கொடுங்கள் எனக் கோருவதற்குக்கூட மருத்துவர்களுக்கு உரிமையில்லாத நிலைதான் காணப்படுகிறது.

இந்தப் பாதுகாப்பு உபகரணங்களைக் கொடுங்கள் என சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவர்கள் கடிதம் எழுதியதற்காக, அம்மருத்துவர்களுள் ஒருவரான சந்திரசேகரை ஊரடங்கு அமலில் உள்ள நிலையிலும் இடமாற்றம் செய்து மருத்துவர்களிடம் அச்சத்தை ஏற்படுத்தியிருக்கிறது, எடப்பாடி அரசு.

மேலும், கடந்த அக்டோபரில் ஊதிய உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளுக்காக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட மருத்துவர்களைப் பழிவாங்கும் விதமாக, அவர்களுள் பலரைத் தொலைதூர கிராமங்களுக்குத் தூக்கியடித்துப் பழிவாங்கியது, தமிழக அரசு. கரோனா நோய்க்குச் சிகிச்சை அளிக்கும் பொருட்டாவது இந்த இடமாற்ற உத்தரவை ரத்து செய்யுமாறு அரசு மருத்துவர்கள் இப்பொழுது கோரி வருகிறார்கள். அதனைக் காதில் போட்டுக் கொள்ளவே மறுக்கிறது, தமிழக அரசு.

உத்திரப் பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த குழந்தை நல மருத்துவர் கஃபீல் கான், தன்னை மீண்டும் பணியில் சேர்த்து கரோனா நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்க அனுமதிக்க வேண்டும் என

பிரதமர் மோடிக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். அவரது இக்கோரிக்கையை பிரதமர் மோடியும் உ.பி. மாநில முதல்வர் யோகி ஆதித்ய நாத்தும் நிராகரித்துவிட்டனர். அதேபொழுதில் அவரைப் பழிதீர்த்துக் கொள்ளும் வன்மத்தோடு அவர் மீது அடுத்தடுத்து பொய் வழக்கு களைப் போட்டுவருகிறது, உ.பி.மாநில அரசு.

தனது உயிரைப் பற்றிக் கவலை கொள்ளாமல் கரோனா சிகிச்சையில் பங்குகொள்ள விரும்பும் மருத்து வரை உ.பி. இந்துத்துவா அரசு ஏன் இப்படி நடத் துகிறது? அப்படியென்ன அவர் குற்றம் இழைத்து விட்டார்?

கடந்த 2017-இல் உத்திரப்பிரதேசத்தின் கோரக்பூரி லுள்ள பாபா ராகவ்தாஸ் மருத்துவமனையில் (BRD Hospital) ஆக்சிஜன் பற்றாக்குறையால் 70-க்கும் மேற் பட்ட குழந்தைகள் மூச்சுத்திணறி இறந்த சம்பவம் மொத்த இந்தியாவையும் உலுக்கியது. இத்துயரச் சம்பவத்திற்கு அம்மருத்துவமனையில் குழந்தைகள் சிகிச்சைப் பிரிவில் பொறுப்பு மருத்துவராகப் பணியாற்றிய கஃபீல்கான் உள்ளிட்ட மருத்துவர்கள், மருத்துவமனை ஊழியர்கள், ஆக்ஸிஜன் சிலிண்டர் சப்ளை செய்யும் காண்ட்ராக்டர் உள்ளிட்ட 9 பேரை பலிகடா ஆக்கியது, உ.பி. மாநில அரசு.

குழந்தைகள் மரணம் குறித்து விசாரிப்பதற்காக அம்மாநிலத் தலைமைச் செயலாளர் ஹிமான்சு குமார் தலைமையில் அமைக்கப்பட்ட ஒருநபர் விசாரணைக் கமிஷன், கஃபீல்கான் கவனக்குறைவாக சிகிச்சை அளித் ததற்கோ அல்லது ஊழல் செய்ததற்கோ எவ்வித முகாந் திரமும் இல்லை என அரசிடம் அறிக்கை அளித்தது. ஆனால், உ.பி. அரசோ தான் எதிர்பார்த்தபடி விசா ரணைக் கமிசனின் அறிக்கை வரவில்லை என்பதற் காக, மீண்டும் மறுவிசாரணைக்கு உத்தரவிட்டது. அதேசமயம் கஃபீல்கானோ தான் செய்யாத குற்றத்திற் காக ஒன்பது மாதங்கள் விசாரணைக் கைதியாகச் சிறை தண்டனை அனுபவித்தார்.

ஏப்ரல் 2019-இல் பிணையில் வெளிவந்த கஃபீல் கான், குழந்தைகளின் மரணம் ஆக்சிஜன் சிலிண்டர் கொள்முதலில் 10% கமிசனுக்கு ஆசைப்பட்ட மனிதர்களின் பேராசை யால் ஏற்பட்டது என்ற உண்மையைப் பத்திரிக்கைகளின் வாயிலாக அம்பலப் படுத்தினார்.

குழந்தைகளின் மரணத்திற்குக் காரண மான இந்த ஊழலை அம்பலப்படுத்திய கஃபீல்கானை அச்சுறுத்தும் நோக்கில் அவரது தம்பி காஷிஃப் ஜமீல் மீது குண்டர் களை ஏவிவிட்டுத் தாக்குதல் நடத்தியது, ஆதித்யநாத் கும்பல். மூன்று துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்த நிலையிலும், அவர் நல்வாய்ப்பாக உயிர் பிழைத்தார்.

இதனிடையே, குழந்தைகளின் மரணத்திற்குப் பொறுப்பாக்கி கிரிமினல் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த கஃபீல்கானை, அவ்வழக் கிலிருந்து குற்றமற்றவராக விடுவித்தது, நீதிமன்றம். சட்டப்படி பார்த்தால், நிரபராதியென விடுவிக்கப் பட்ட கஃபீல்கானை உ.பி. மாநில அரசு மீண்டும் அதே பதவியில் அமர்த்தியிருக்க வேண்டும். ஆனால், உ.பி. மாநில இந்துத்துவா அரசோ, அவரை மீண்டும் பணியில் அமர்த்தாததோடு, அடுத்தடுத்து மூன்று முறை பொய்க் குற்றச்சாட்டுக்களின் கீழ் அவரைக் கைது செய்தது. ஒவ்வொரு முறையும் நீதிமன்றத்தால் அவர் விடுதலை செய்யப்பட்டார்.



உ.பி. அரசால் வேட்டையாடப்பட்டு வரும் குழந்தை நல மருத்துவர் கஃபீல்கான்.

இதன் பிறகும் பழிவாங்கும் வெறி அடங்காத உ.பி. அரசு, குடியுரிமை சட்டத் திருத்தத்திற்கு எதிராக அலிகார் பல்கலைக்கழகத்தில் கஃபீல்கான் உரையாற்றி யதைக் குற்றமாகக் காட்டி, அந்த உரை நிகழ்த்தப்பட்டு 40 நாட்கள் கழிந்த நிலையில், அவர் மீது பல்வேறு கிரிமினல் பிரிவுகளின் கீழ் வழக்கு தொடர்ந்தது.

இந்த வழக்குகளில் கஃபீல்கானுக்கு நீதிமன்றம் பிணை வழங்கிய பிறகும், அவரைத் தொடர்ந்து சிறை யிலேயே அடைத்து வைக்கத் திட்டமிட்ட உ.பி. இந்துத்துவா அரசு, பிணை வழங்கப்பட்ட மூன்றாவது நாளில் அவர் மீது தேசியப் பாதுகாப்பு சட்டத்தைப் பாய்ச்சி, நீதிமன்றம் அளித்த பிணையைக் கழிப்பறை காகிதமாக்கியது.

ஒருபுறம் மருத்துவப் பணியாளர்களுக்காகப் பொதுமக்களைக் கைதட்டித் தமது நன்றியறிதலைத் தெரிவிக்கச் சொன்ன இந்துத்துவா கும்பல்தான் இன்னொருபுறத்தில் கஃபீல்கானை இவ்வளவு குரூர மாக வேட்டையாடி வருகிறது. மருத்துவர் கஃபீல்கான் முசுலீம் என்பதால் மட்டுமல்ல, அவர் அதிகாரத்திற்கு எதிராக உண்மையைப் பேசத் துணிந்தார் என்பதுதான் இதன் பின்னுள்ள காரணம்.

கைதட்டுமாறு சொன்னது இந்துத்துவ பாசிஸ்டு களின் அரசியல் ஸ்டண்ட்; பழி வாங்குவதுதான் அவர் களது உண்மை முகம்.

உண்மையைத் துணிந்து பேசுவதைக் கண்டுதான் இந்துத்துவ பாசிஸ்டுகள் அச்சங்கொள்கிறார்கள்.

நோய்த் தொற்றுக் காலங்களில் உண்மையைக் கூற வேண்டிய பொறுப்பும் கடமையும் மற்றவர்களைவிட மருத் துவர்களுக்குத்தான் அதிகமுண்டு. அவ்வுண்மையைப் பூசி மெழுகாமல், உரத்துப் பேசுவதன் வழியாகத்தான் நோய்த் தொற்றிலிருந்து மக்களை மட்டு மல்ல, மருத்துவர்கள் தம்மையும் காத்துக் கொள்ள முடியும். ஆளும் இந்துத்துவா கும்பலின் அரசியல் ஸ்டண்டுகளையும் அம்பலப்படுத்த முடியும்.

■ பூங்குழலி

## உத்திரப் பிரதேசம்:

# இந்து ராஷ்டிரத்தின் புதிய சோதனைச்சாலை!

**உ.பி.யில் குடியுரிமைச் சட்டத் திருத்தத்திற்கு எதிராகப் போராடிய முசுலிம்கள் மற்றும் ஜனநாயக சக்திகள் மீது ஏவிவிடப்படும் அடக்குமுறைகள் இட்லரின் ஜெர்மனியை நினைவுபடுத்துகின்றன.**

உத்திரப் பிரதேசம் இந்து ராஷ்டிரத்தின் புதிய சோதனைச் சாலையாக மாற்றப்பட்டிருப்பதை, அம்மாநில முசுலிம்கள் மற்றும் ஜனநாயக சக்திகள் மீது அம்மாநிலத்தை ஆளும் யோகி ஆதித்யநாத் கும்பல் அடுத்தடுத்து ஏவிவிட்டிருக்கும் அடக்குமுறைகள் எடுத்துக்காட்டுகின்றன.

டெல்லியில் நடத்தப்பட்ட இந்து மதவெறித் தாக்குதலில் தளபதிகளாகச் செயல்பட்ட பா.ஜ.க.வைச் சேர்ந்த கபில் மிஸ்ரா, அனுராக் தாக்குர், பர்வேஷ் வர்மா ஆகியோர் மீதும்; இத்தாக்குதலை நடத்துவதற்காக உ.பி. உள்ளிட்ட அண்டை மாநிலங்களிலிருந்து டெல்லிக்குக் கொண்டுவரப்பட்ட ஆர்.எஸ்.எஸ். காலிகள் மீதும் இதுநாள் வரையில் ஒரு முதல் தகவல் அறிக்கைகூடப் பதிவு செய்யப்படவில்லை.

அதேசமயம், உ.பி.யிலோ குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை எதிர்த்துப் போராடிய முசுலிம்கள் மீதும், அப்போராட்டத்திற்கு ஆதரவளித்து வரும் ஜனநாயக சக்திகள் மீதும் அடுத்தடுத்துப் பல்வேறு வழக்குகள் போடப்பட்டு, அவர்கள் அனைவரையும் தேசத் துரோகிகளாக, அரசின் எதிரிகளாகப் பொது வெளியில் சித்தரிக்கும் ஆள்காட்டி வேலையைச் செய்து முடித்திருக்கிறது, யோகி ஆதித்யநாத் அரசு.

உ.பி.யில் குடியுரிமைத் திருத்தச் சட்டத்திற்கு எதிராக நடந்த போராட்டங்களின் மீது போலீசு நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 23 பேர் கொல்லப்பட்டனர். சிறுவர்கள் உள்ளிட்டு 1,640 பேர் கைது செய்யப்பட்டு, அவர்கள் அனைவரின் மீதும் 450-க்கும் மேற்பட்ட வழக்குகள் தொடுக்கப்பட்டன. 27 பேர் மீது குண்டர் சட்டத்தின் கீழும் வழக்கு தொடுக்கப்பட்டது.

இக்கிரிமினல் வழக்குகள் உ.பி. போலீசால் புனையப்பட்ட பொய் வழக்குகள் என்பது முதற்கட்ட நீதிமன்ற விசாரணையிலேயே அம்பலமாகிவிட்டது. எனினும், இந்து மதவெறி பாசிஸ்டான யோகி ஆதித்ய நாத்தின் பழி தீர்க்கும் வெறியோ சற்றும் அடங்கிவிடவில்லை.

உ.பி. தலைநகர் லக்னோவில் நடந்த ஆர்ப்பாட்டங்களின்போது கைது செய்யப்பட்டுப் பின்னர் பிணையில் வெளியே வந்துவிட்டவர்களுள் 57 பேரைத் தேர்ந்தெடுத்து, அவர்களின் புகைப்படங்கள் மற்றும் முகவரிகள் அடங்கிய தட்டிகளை லக்னோ நகரின் 100 இடங்களில் நிறுவி, அவர்கள் அனைவரையும் அரசின் எதிரிகளாக அடையாளப்படுத்தி அவமதிக்கும் சட்ட விரோதமான, கீழ்த்தரமான தாக்குதலை ஏவியிருக்கிறது, ஆதித்யநாத் அரசு.

இந்த ஆட்காட்டி வேலையின் தொடர்ச்சியாக, அந்த 57 பேரும் ஆர்ப்பாட்டத்தின்போது வன்முறையில் இறங்கி அரசு மற்றும் பொதுச் சொத்துக்களைச் சேதப்படுத்தியதாகக் குற்றஞ்சுமத்தி, அவர்கள் அனைவரும் 1.56 கோடி ரூபாய் நட்ட ஈடும், அத்தொகையின் மீது 10 சதவீத வசூல் கட்டணத்தையும் சேர்த்து, மொத்தத்

உ.பி. அரசின் ஆட்காட்டி வேலை: குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு எதிராகப் போராடியவர்களின் புகைப்படங்கள் மற்றும் முகவரிகளோடு லக்னோ நகரில் வைக்கப்பட்டிருக்கும் விளம்பரத் தட்டி.



தொகையையும் உடனடியாகக் கட்டக் கோரும் நீதிமன்றத் தாக்கீதையும் அனுப்பி வைத்திருக்கிறது.

அலகாபாத் உயர் நீதிமன்றம் உ.பி. அரசின் இந்த ஆட்காட்டி விளம்பரத் தட்டிப் பிரச்சாரத்தைத் தானே முன்வந்து, இரண்டு நீதிபதிகளைக் கொண்ட சிறப்பு அமர்வை நியமித்து, விடுமுறை தினமான ஞாயிறு என்றும் பாராமல் விசாரித்தது. அவ்வமர்வு இந்த ஆட்காட்டி நடவடிக்கையை, "அரசியல் சாசனப் பிரிவு 21 மற்றும் தனி மனித உரிமைக்கு எதிரானது எனச் சுட்டிக் காட்டியதோடு, அரசின் நிறச் சார்பை (colour able exercise) வெளிக்காட்டுகிறது" என்றும் கண்டனம் தெரிவித்தது. மேலும், இந்தச் சுவரொட்டிகளை உடனே அகற்ற வேண்டுமென்றும், அகற்றப்பட்டது குறித்த அறிக்கையை உயர் நீதிமன்றத்திடம் அளிக்க வேண்டு மென்றும் உத்தரவிட்டது.

உ.பி. மாநில இந்து மதவெறி அரசோ ஆட்காட்டி விளம்பரத் தட்டிகளை அகற்றுவதற்குப் பதிலாக, அவற்றை அகற்றச் சொன்ன உயர் நீதிமன்றத்தின் உத்த ரவுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் உடனடியாக மேல் முறையீடு செய்ததோடு, அந்த 57 பேர் மீதும் குண்டர் சட்டத்தை ஏவித் தனது பாசிச குரூரப் புத்தியை வெளிக் காட்டிக் கொண்டது.

இந்த 57 பேர் மீதான வழக்குகள் முடிவடையாத நிலையில், அவர்களுள் ஒருவர்கூட இன்னும் எந்த வொரு நீதிமன்றத்தாலும் குற்றவாளியாக அறிவிக்கப் படாத நிலையில் அவர்களின் புகைப்படங்களையும் முகவரிகளையும் சுவரொட்டியில் அச்சிட்டு வெளி யிட்டது அடிப்படையிலேயே சட்டவிரோதமானது என்கிறார்கள் வழக்குரைஞர்கள்.

ஆனால், இம்மேல்முறையீட்டை விசாரித்த உச்ச நீதிமன்றத்தின் இரண்டு நீதிபதிகளைக் கொண்ட அமர்வோ, அலகாபாத் உயர் நீதிமன்றத்தின் உத்தர விற்குத் தடை விதிக்க மறுத்துவிட்டாலும், இந்த வழக்கைச் சட்டரீதியாக ஆராய வேண்டியிருப்பதால், அதிக எண்ணிக்கை கொண்ட அமர்வு இவ்வழக்கை விசாரிக்கப் பரிந்துரை செய்து தீர்ப்பளிப்பதிலிருந்து நழுவிக் கொண்டுவிட்டது.

உ.பி. அரசின் இந்த ஆட்காட்டி நடவடிக்கையை அரசியல் சாசனப் பிரிவு 21-க்கு எதிரானது என அலகாபாத் உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பில் சுட்டிக் காட்டிய பிறகும்கூட உச்ச நீதிமன்ற அமர்வு இந்த வழக்கைச் சட்டரீதியாக ஆராய வேண்டியிருக்கிறது எனக் கூறியிருப்பது இந்து மதவெறிக் கும்பலுக்குக் காட்டப்பட்ட சலுகை தவிர வேறில்லை.

இந்தச் சலுகையை அளித்த இரண்டு நீதிபதிகளுள் ஒருவர் நீதிபதி யு.யு.லலித் என்பது குறிப்பிடத்தக்கது. யு.யு. லலித் உச்ச நீதிமன்ற மூத்த வழக்குரைஞராகப் பணியாற்றி வந்தபோது, சோராபுதின் போலி மோதல் கொலை வழக்கில் அமித் ஷாவின் சார்பாக வழக்காடி வந்தார். அதற்குச் சன்மானமாக, நரேந்தர மோடி மே 2014-இல் பிரதமராகப் பதவியேற்ற ஒரு சில மாதங் களுக்குள்ளாகவே யு.யு. லலித்திற்கு உச்ச நீதிமன்ற நீதிபதி பதவியை அளித்தார் என்பது சமீபத்திய வரலாறு.

உச்ச நீதிமன்ற அமர்வு இவ்வழக்கைக் கூடுதல் நீதிபதிகள் விசாரிக்கப் பரிந்துரைத்திருப்பதைப் பயன் படுத்திக் கொண்டு, அரசியல் ஆர்ப்பாட்டங்களின் போது பொதுச் சொத்துக்களுக்கு ஏற்படும் சேதங் களை ஆர்ப்பாட்டக்காரர்களிடமிருந்து வசூலிப்பதற்கு ஏற்றவாறு போடப்பட்ட அரசு உத்தரவைச் சட்டமாக இயற்றிக் கொண்டுவிட்டது, யோகி ஆதித்யநாத் அரசு.

●●●

"லக்னோ நகரில் வன்முறையைத் திட்டமிட்டுத் தூண்டிவிட்ட இந்த 57 பேரும் செல்வாக்குமிக்க நபர்கள்; இவர்கள் தமது செல்வாக்கைக் கொண்டு சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிவிடுவார்கள்" என அலகாபாத் உயர் நீதிமன்றத்தில் வாதாடியது, உ.பி. அரசு. ஆனால், உண்மையோ இதற்கு நேர் எதிரானது.

இந்த 57 பேரில், லக்னோ-ஹஸன்கஞ்ச் பகுதியில் வசித்துவரும் இருபது வயதான கல்லூரி மாணவன் ஒசாமா சித்திக்கும் ஒருவன். சித்திக்கும் அதே பகுதியில் வசித்துவரும் வேறு பன்னிரெண்டு பேரும் 21.76 இலட்ச ரூபாய் நட்ட ஈடாகத் தர வேண்டு மென தாக்கீது அனுப்பியிருக்கிறது, உ.பி அரசு.

சித்திக்கை கலவரம் நடந்த பகுதியில் கையும் களவுமாகப் பிடித் ததாகக் கூறுகிறது, போலீசு. ஆனால், மதியம் இரண்டு மணி வரை வீட்டில் இருந்த சித்திக், தனக்குத் தேவையான எழுது பொருட்களை வாங்குவதற் காகக் கடைவீதிக்குச் சென்றிருந்த போது போலீசார் அவனைப் பிடித்துக் கைது செய்துவிட்டதாகக் கூறுகிறார், சித்திக்கின் தாய்.

(இடமிருந்து) முன்னாள் ஐ.பி.எஸ். அதிகாரி எஸ்.ஆர்.தாராபுரி, மூத்த வழக்குரைஞர் முகம்மது ஷோயிப் மற்றும் சமூகச் செயல்பாட்டாளர் சதாஃப் ஜாபர்



“தனது வீட்டிலிருந்து இரண்டு கி.மீ. தூரம் தள்ளியுள்ள பகுதிக்குக் கலவரம் நடந்த சமயத்தில் வர வேண்டிய அவசியமென்ன?” எனக் கேட்டு சித்திக் கூறியதை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டது, நீதிமன்றம். அதே சமயம், சித்திக் நேரடியாக ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டதற்கோ, வன்முறையில் இறங்கியதற்கோ எந்தவிதமான நேரடியான ஆதாரம், சாட்சியங்களை போலீசும் அளிக்கவில்லை. எனினும், நட்ட ஈடு கேட்டு சித்திக்கிற்கு நீதிமன்ற நோட்டீசு அனுப்பப்பட்டிருக்கிறது.

சித்திக்கின் தந்தைக்கு நிரந்தர வருமானம் தரும் வேலையெதுவும் கிடையாது. அவர்கள் வீட்டின் ஒரு பகுதியை வாடகைக்கு விட்டு, அதில் கிடைக்கும் வாடகைப் பணம்தான் குடும்ப வருமானம். “இப்படிப்பட்ட நிலையில் எங்களால் எப்படி நட்ட ஈட்டைச் செலுத்த முடியும்?” எனக் கேள்வி எழுப்புகிறார், சித்திக்கின் தாய்.

உ.பி. அரசால் கிரிமினல் வழக்கு தொடுக்கப்பட்டிருக்கும் 25 பேரின் வழக்குரைஞரான ஆஷ்மா இஜ்ஜத், “தனது கட்சிக்காரர்கள் பெரும்பாலோர் தினக் கூலிகள். சிலரோ வேலையில்லாத பரம ஏழைகள். இந்த 25 பேரில் ஒருவரான மேற்கு வங்கத்தைச் சேர்ந்த வாசீம் சையத் சிறிய உணவகமொன்றில் உணவு பரிமாறும் தினக் கூலி. கலீம் என்பவர் ரிக்சா ஓட்டி வாழ்க்கை நடத்திவரும் ஏழைத் தொழிலாளி. நட்ட ஈடு கேட்டு நோட்டீசு அனுப்பப்பட்டவர்களுள் இருவர் சிறுவர்கள்” எனப் பட்டியலில் இடுகிறார்.

பொதுச் சொத்துக்களைச் சேதப்படுத்தியதாகக் குற்றஞ்சுமத்தப்பட்டிருக்கும் முகம்மது ஆனஸ், வணிகவியல் பட்டப்படிப்புப் படித்துவரும் மாணவன். சம்பவ நாளன்று தனிப்பயிற்சி வகுப்புக்குச் சென்று கொண்டிருந்த தன்னை போலீசு பிடித்துச் சென்று வழக்குப் போட்டதாகக் கூறுகிறார், ஆனஸ்.

உ.பி. அரசால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள முகம்மது தாரிக், கல்லூரி மாணவன். “தனது தந்தைக்கு மருந்து வாங்குவதற்காகக் கடைவீதிக்குச் சென்றிருந்த தன்னை போலீசு பிடித்துச் சென்றதாகவும், அப்பொழுது ஆர்ப்பாட்டம் தொடங்கியிருக்கவேயில்லை” என்றும் கூறுகிறார், தாரிக்.

லக்னோவின் பரிவர்தன் சௌக் என்ற பகுதியில் இருந்து மட்டும் 15 இளைஞர்களை, அவர்கள் இரவில் தூங்கிக் கொண்டிருந்தபோது பிடித்துச் சென்று வழக்குத் தொடுத்திருக்கிறது, உ.பி. அரசு. இவர்கள் அனைவருமே அந்தப் பகுதிகளில் உள்ள சிறு உணவகங்களில் வேலை செய்து வரும் தினக் கூலிகள். இவர்களுள் ஒரு சிலர் அஸ்ஸாம் மற்றும் மேற்கு வங்கத்தைச் சேர்ந்த முசுலிம்கள் என்பதைச் சாக்காகக் கொண்டு, அவர்கள் வங்க தேசத்தைச் சேர்ந்த ஊடுருவிகள் எனக் குற்றஞ் சுமத்தி, தனது கைது நடவடிக்கையை நியாயப்படுத்தியிருக்கிறது, உ.பி. போலிசு.

உ.பி. அரசால் குற்றவாளியென அடையாளப்படுத்தப் பட்டிருப்பவர்களுள் முன்னாள் ஐ.பி.எஸ். போலீசு அதிகாரியும் அம்பேத்கர் இயக்கமொன்றை நடத்தி வருபவருமான எஸ்.ஆர்.தாராபுரியும் ஒருவர். உ.பி. மாநிலமெங்கும் குடியுரிமைச் சட்டத் திருத்தத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடைபெற்ற டிசம்பர் 19-ஆம் தேதிக்கு முன்பே அவரை வீட்டுக் காவலில் அடைத்துவிட்டது உ.பி. போலீசு. ஆனாலும், ஆர்ப்பாட்டம் நடைபெற்ற நாளன்று அவர் தனது முகநூலில், “அரசியல் சாசனத்தைக் காப்போம்” எனப் பதிவிட்டதால், மறுநாள் காலையில் தாராபுரியைக் கைது செய்த போலீசு, தனது குற்றப்பத்திரிக்கையில் டிசம்பர் 20 அன்று இரவு ஏழு மணிக்கு தாராபுரியைப் பொது இடத்தில் வைத்துக் கைது செய்ததாகப் புளுகியிருந்தது. நீதிமன்றமும் இந்தப் புளுகை மறுவார்த்தையின்றி ஏற்றுக்கொண்டு, தாராபுரியைச் சிறைக்கு அனுப்பியதோடு, அவர் அரசுக்கு நட்ட ஈடு செலுத்த வேண்டுமென்றும் தாக்கீது அனுப்பியிருக்கிறது.

ரிஹாய் மஞ்ச் என்ற பெயரில் மனித உரிமை அமைப்பொன்றை நடத்திவரும் மூத்த வழக்குரைஞரான முகம்மது ஷோயிப்பும் தாராபுரியைப் போலவே, ஆர்ப்பாட்டத்திற்கு முன்பாகவே வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்தார். உ.பி. போலீசின் போலி மோதல் கொலைகளைத் தொடர்ச்சியாக அம்பலப்படுத்திவரும் முகம்மது ஷோயிப்பைப் பழிதீர்த்துக் கொள்ளக் காத்திருந்த உ.பி. அரசு இச்சந்தர்ப்பதைப் பயன்படுத்திக் கொண்டு, அவரையும் கைது செய்து சிறையில் தள்ளியதோடு, சுவரொட்டியில் புகைப்படமாக வெளியிட்டும் அவமானப்படுத்தியிருக்கிறது.



உ.பி. மாநிலத்தில் மிகப் பிரபலமான ஷியா மத போதகர் கல்ரே சாதிக்கின் மகனான கல்பே சிப்தைன் நூரியும் அவரது நண்பருமான மௌலானா சாயிப் அப்பாஸும் ஆர்ப்பாட்டம் நடைபெற்ற டிசம்பர் 19 அன்று இமாம்பதா என்ற பகுதியில் முசுலிம்கள் மத்தியில் அமைதியாக இருக்கும்படி பிரச்சாரம் செய்துள்ளனர். இவர்கள் முசுலிம்கள் மத்தியில் பிரச்சாரம் செய்ததையே சாட்சியமாகக் காட்டி, கலவரத்தைத் தூண்டிய சதிகாரர்கள் என அவர்கள் இருவர் மீதும் குற்றஞ்சுமத்தி வழக்குத் தொடுத்திருக்கிறது, உ.பி. போலீசு.

உ.பி போலீசால் கைது செய்யப்பட்ட ஏழை முசுலிம்களின் வாக்குமூலத்தை மட்டுமல்ல, முன்னாள் ஐ.பி.எஸ். அதிகாரி தாராபுரி, மூத்த வழக்குரைஞர் முகம்மது ஷோயிப், காங்கிரசு கட்சியைச் சேர்ந்தவரும் சமூகச் செயல்பாட்டாளருமான சதாஃப் ஜாபர் ஆகியோரும் தம்மை போலீசார் கெடுமதி நோக்கத்தோடு வழக்கில் இணைத்திருப்பதாக அளித்த வாக்குமூலங்களையும் கூடுதல் மாவட்ட குற்றவியல் நீதிபதி காது கொடுத்துக் கேட்கவில்லை. மாறாக, “10,000-க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டிருந்த ஆர்ப்பாட்டங்களில் வெறும் 57 பேர் மீது மட்டுமே நட்ட ஈடு கேட்டு தாக்கீது அனுப்பப்பட்டிருப்பது, உ.பி. போலீசின் திறமையின்மையைக் காட்டுவதாக”க் குற்றஞ்சுமத்தியிருக்கிறார். அரசனை விஞ்சிய விசுவாசி போலும் அந்நீதிபதி!

சுவரொட்டியில் அடையாளப்படுத்தப்பட்டிருக்கும் 57 பேரில் 52 பேர் முசுலிம்கள் என்பது தற்செயலானது அல்ல. யோகி ஆதித்யநாத் அரசு தனது முசுலிம் வெறுப்பு-காழ்ப்புணர்ச்சியை இந்நடவடிக்கையின் மூலம் மிகவும் வெளிப்படையாகக் காட்டிக் கொண்டிருப்பதோடு, யார் போராடினாலும் அவர்களுக்கும் இதே கதிதான் எனப் பீதியூட்டவும் இந்நடவடிக்கையைப் பயன்படுத்தியிருக்கிறது. உ.பி மாநில அமைச்சரும், அவ்வரசின் பத்திரிகை தொடர்பாளருமான சித்தார்த் நாத் சிங், “யோகி அரசுக்கு எதிராகப் போராடத் துணிபவர்களை இப்படி விளம்பரப்படுத்தி அவமானப்படுத்துவது தடுப்பு நடவடிக்கையைப் போன்றதாகும்” எனக் கூறி, இச்சட்டவிரோதச் செயலை வெளிப்படையாகவே நியாயப்படுத்தியிருக்கிறார்.

அவ்விளம்பரத் தட்டியில் அடையாளப்படுத்தப்பட்டிருக்கும் இந்த 57 பேர் மீதான வழக்குகள் நிலுவையில் இருப்பதை உ.பி. அரசு அத்தட்டிகளில் எங்கும் குறிப்பிடவில்லை. மாறாக, அவர்களைத் தேசத்தின், அரசின் எதிரிகளாக காட்டியிருப்பதன் மூலம் ஆர்.எஸ்.எஸ். கும்பலால் அவர்கள் எளிதில் அடையாளம் காணப்பட்டுத் தாக்கப்படும் அபாயகரமான சூழலை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது.

இட்லரின் ஜெர்மனியில் யூதர்கள் மீதான இன அழித்தொழிப்பு நடவடிக்கை தொடங்குவதற்கு முன்பாக, யூதர்களை இழிவான வெறுக்கத்தக்க குடிமக்களாகவும், இட்லரைத் தேவதூதனைப் போன்றும் சித்தரிக்கும் சுவரொட்டி பிரச்சாரம் முன்னெடுக்கப்பட்டது. மோடி அரசு கொண்டு வந்திருக்கும் குடியுரிமைச் சட்டத் திருத்தமும், உ.பி.யில் அச்சட்டத்திற்கு எதிராகப் போராடத் துணிந்த முசுலிம்களை, ஜனநாயக சக்திகளைத் தேசத் துரோகிகளாகச் சித்தரிக்கும் இந்தச் சுவரொட்டிப் பிரச்சாரமும் நாடு இட்லரின் பாதையில் இழுத்துச் செல்லப்படுவதை எடுத்துக் காட்டுகின்றன.

■ **குப்பன்**

# முக்கிய அறிவிப்பு !

புதிய ஜனநாயகம் இதழின் அலுவலகம் விரைவில் இடம் மாற்றம் செய்யப்படவிருக்கிறது. நமது அலுவலகம் உள்ளிட்டு நூற்றுக்கும் மேற்பட்ட வணிக நிறுவனங்கள் செயல்பட்டு வந்த சென்னை-கோடம்பாக்கம் மாநகராட்சி வணிக வளாகக் கட்டிடம் தொடர்ந்து பயன்படுத்த முடியாதவாறு சிதிலமடைந்துவிட்டதால், சென்னை மாநகராட்சி நிர்வாகம் மொத்த வணிக வளாகத்தையுமே மூடி முத்திரையிட்டிருக்கிறது.

எனவே, வாசகர்கள் அலுவலகத்திற்கு நேரில் வருவதைத் தவிர்க்குமாறு கோருகிறோம். கரோனா ஊரடங்கு காரணமாக புதிய அலுவலகம் தேர்வு செய்யும் பணியும் தற்காலிகமாகத் தடைபட்டிருக்கிறது. விரைவில், புதிய அலுவலக முகவரியை அறிவிக்கிறோம்.

புதிய அலுவலக முகவரியை அறிவிக்கும் வரையில், இதுவரை பயன்படுத்தி வந்த அலுவலக முகவரிக்கு பதிவு அஞ்சல், கூரியர், பணவிடை ஆகியவற்றை அனுப்ப வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறோம். எமது மின்னஞ்சலுக்குக்கு (puthiyajananayagam@gmail.com) கடிதங்களை அனுப்பி வைக்குமாறு கோருகிறோம்.

மின்னஞ்சல் அனுப்பி வைக்க இயலாத வாசகர்கள் மற்றும் தவிர்க்கவியலாத கடிதப் பரிமாற்றங்களை மேற்கொள்ள வேண்டிய அவசியமிருப்பவர்கள் பழைய முகவரிக்கு சாதாரண அஞ்சலில் மட்டும் கடிதங்களை அனுப்பிவைக்கவும்.

அலுவலகத் தொலைபேசி எண்ணில் (94446 32561) தொடர்பு கொள்ள விரும்பும் வாசகர்கள், முகவர்கள் மறு அறிவிப்பு வரும் வரையில் காலை 11 மணி முதல் மாலை 5 மணி வரையில் மட்டுமே தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**– ஆசிரியர் குழு.**

இந்திய இறையாண்மை:

# தேசபக்தாளின் மற்றொரு பூச்சாண்டி!

**குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு எதிரான வழக்கில் ஐ.நா. மனித உரிமை ஆணையம் தலையிட முயலுவதை இறையாண்மை என்ற போர்வையில் தடுத்துவிட முயலுகிறது, மோடி அரசு.**

குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டிருக்கும் வழக்கில் தம்மை நீதிமன்ற நண்பனாக (அமிகஸ் கியுரி - *amicus curiae*) இணைத்துக் கொள்ளக் கோரும் மனுவை இந்திய உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறது, ஐ.நா. மனித உரிமை ஆணையம்.

“இச்சட்டம் பாரபட்சம் காட்டும் கருவியாகப் பயன்படுத்தப்படும் என்பதால், இதன் காரணமாக நாடற்றவர்கள் உருவாகும் அபாயமிருப்பதாக” ஐ.நா. மன்றப் பொதுச் செயலர் ஆண்டனியோ குடேரஸ் குடியுரிமை திருத்தச் சட்டத்தை விமர்சித்திருந்தார். “இச்சட்டம் அடிப்படையிலேயே பாரபட்சமானது” என ஐ.நா. மனித உரிமை ஆணையம் இச்சட்டத்திற்கு எதிராகக் கண்டனம் தெரிவித்திருந்தது. இந்த விமர்சனங்களின் தொடர்ச்சியாக சர்வதேச அமைப்பான ஐ.நா. மனித உரிமை ஆணையம், தானே முன்வந்து, தன்னை நீதிமன்ற நண்பனாக இணைத்துக் கொள்ளக் கோரும் மனுவைத் தாக்கல் செய்திருப்பது எதிர்பாராத அதிர்ச்சியை பா.ஜ.க. அரசிற்கு ஏற்படுத்தியிருக்கிறது.

“இந்திய உச்ச நீதிமன்றத்தின் விதிகள் மற்றும் நடைமுறைகளுக்கு உட்பட்டே இந்த மனுவைத் தாக்கல் செய்திருப்பதாக”க் கூறியிருக்கிறது ஐ.நா. மனித உரிமை ஆணையம். மேலும், “ஐ.நா. மன்றப் பொதுச் சபையில் நிறைவேற்றப்பட்டிருக்கும் தீர்மானம் எண்.48/141, மனித உரிமைகளைக் காக்கவும், அவற்றை வளர்த்தெடுக்கவும் மற்றும் உலக நாடுகளுக்கு இது குறித்து ஆலோசனைகளை வழங்கவும் தமக்குப் பொறுப்பும் கடமையும் அளித்திருக்கும் அடிப்படையிலும்; சர்வதேச மனித உரிமை நியதிகள் குறித்து இந்திய உச்ச நீதிமன்றத்திடம் விளக்கிக் கூறும் வகையிலும் மட்டுமே இந்த மனுவைத் தாக்கல் செய்திருப்பதாகவும்” அவ்வாணையம் விளக்கமும் அளித்திருக்கிறது.

“இந்திய ராஜதந்திர வரலாற்றிலேயே இது நிச்சயமாக முன்னெப்போதும் கண்டிராத ஒன்று” என முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சர் நட்வர் சிங் குறிப்பிட்டிருப்பதிலிருந்தே, ஐ.நா. மனித உரிமை ஆணையம் தாக்கல் செய்திருக்கும் மனுவின் முக்கியத்துவத்தை யாரும் உணர்ந்து கொள்ளலாம்.

ஓர் அசாதாரணமான சட்டத்திற்கு எதிராக அசாதாரணமான முறையில் தொடுக்கப்பட்டிருக்கும் மனு இது. இந்த மனு உச்ச நீதிமன்றத்தால் ஏற்கப்படாமல் நிராகரிக்கப்பட்டாலும்கூட இது நரேந்திர மோடி அரசுக்கு சர்வதேச அரங்கில் ஏற்பட்டிருக்கும் முக்கியமானதொரு பின்னடைவாகும்.

இந்திய அரசின் வெளியுறவுத் துறை, “குடியுரிமைத் திருத்தச் சட்டம் இந்தியாவின் உள்நாட்டு விவகாரம். சட்டங்களை இயற்றும் அதிகாரம் இந்திய நாடாளுமன்றத்தின் இறையாண்மையோடு தொடர்புடையது. எந்தவொரு வெளிநாட்டு அமைப்பிற்கும் இந்திய இறையாண்மை தொடர்பான விவகாரங்களில் தலையிடுவதற்கான அங்கீகாரமோ தகுதியோ கிடையாது” என எச்சரித்து இம்மனுவிற்கு எதிராக அறிக்கை வெளியிட்டிருக்கிறது.



ஐ.நா. மனித உரிமை ஆணையர் மிச்சேல் பேச்லெட்.

ஐ.நா. மனித உரிமை ஆணையம் இந்த வழக்கில் தன்னை மனுதாரராகச் சேர்த்துக்கொள்ளக் கூறவில்லை. நீதிமன்ற நண்பனாக, மனித உரிமை குறித்து சர்வதேச நியதிகளும், ஒப்பந்தங்களும் கூறுவதென்ன என விளக்கும் அடிப்படையில் மட்டுமே வழக்கில் சேர்த்துக் கொள்ளக் கூறியிருக்கிறது. வலதுசாரி நரேந்திர மோடி அரசால் மட்டுமல்ல, நடுநிலையாளர்கள் எனக் கூறிக்கொள்ளும் பலராலும்கூட ஐ.நா. மனித உரிமை ஆணையம் இவ்வழக்கில் இம்மட்டில் தலையிடுவதைக்கூடப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

“இந்த வழக்கின் மனுதாரர்களுள் ஒரு பிரிவினரே சர்வதேச மனித உரிமை நியதி

கள் மற்றும் ஒப்பந்தங்கள் குறித்து உச்ச நீதிமன்றத்தில் விளக்கம் அளிப்பார்கள் என்பதால், ஐ.நா. மனித உரிமை ஆணையத்தின் மனு அவசியமற்ற ஒன்று” எனக் கூறுகிறது, தி இந்து நாளிதழ்.

“குடியுரிமை திருத்தச் சட்டம் இந்திய அரசியல் சாசனத்தின் அடிப்படையில்தான் பரிசீலிக்கப்பட வேண்டுமேயொழிய, அதனைச் சர்வதேச ஒப்பந்தங்கள் அடிப்படையில் பரிசீலிக்கத் தேவையில்லை” எனக் கூறியிருக்கிறார், மூத்த வழக்குரைஞர் மோகன் பராசரன். சுருக்கமாகச் சொன்னால், ஐ.நா. மனித உரிமை ஆணையம் தாக்கல் செய்திருக்கும் இந்த மனு ஆளும் இந்துத் துவக் கும்பலுக்கு மட்டுமின்றி, நடுநிலையாளர்கள் பலருக்கும்கூட தொண்டையில் சிக்கிய முள் போலாகிவிட்டது.



ஐ.நா. மன்றப் பொதுச் செயலர் ஆண்டனியோ குடேரஸ்

•••

இந்தியாவின் போலி சுதந்திரம் போன்றே, சொல்லிக் கொள்ளப்படும் இந்திய இறையாண்மையும் போலியானதுதான். இதுவொருபுறமிருக்க, உலகமயக் காலகட்டத்தில் எது உள்நாட்டு விவகாரம், எது சர்வ தேச விவகாரம் என்பதைக் கறாராகப் பிரிக்கும் எல்லைக் கோடு எதுவும் இல்லை. ஒவ்வொரு நாட்டின் ஆளும் வர்க்கமும், அவர்களின் அறிவார்ந்த பிரதிநிதிகளும் தமது நலனுக்கு ஏற்றாற்போலத் தான் இதற்கு வியாக்கியானம் அளித்து வருகிறார்கள்.

எடுத்துக்காட்டாக, இந்திய அரசு ஒவ்வொரு ஆண்டும் தயாரித்து அறிவிக்கும் பட்ஜெட் இறையாண்மை மிக்கதொரு நடவடிக்கையாகும். ஆனாலும், அப்பட்ஜெட்டில் எந்தளவிற்குப் பற்றாக்குறையை அனுமதிப்பது என்பதையும் கல்வி, சுகாதாரம், உணவு உள்ளிட்ட சமூக நலத் திட்டங்களுக்கு எவ்வளவு மானியம் ஒதுக்கீடு செய்வது என்பதையும் உள்நாட்டின் நிலைமைகளுக்கு ஏற்ப மைய அரசு தன் விருப்பப்படித் தீர்மானித்துவிட முடியாது. மாறாக, ஏகபோக நிதி நிறுவனங்களும், சர்வதேச அமைப்புகள் என்ற பெயரில் செயல்பட்டு வரும் உலக வங்கி உள்ளிட்ட மேற்குலக ஏகாதிபத்திய நாடுகளின் கைத்தடி அமைப்புகளும் விதிக்கும் நிபந்தனைகளுக்கு ஏற்றபடிதான் இந்த ஒதுக்கீடுகள் தீர்மானிக்கப் படுகின்றன.





குறிப்பாக, மைய அரசின் நிதிப் பற்றாக் குறை நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் மூன்று சதவீதத்திற்குள் இருக்க வேண்டும் என்பதுதான் மேற்கூறப்பட்ட ஏகபோக நிதி மூலதனக் கும்பலின் நிபந்தனை. இதனை ஏற்று நிறைவேற்றும் விதத்தில் 2003-ஆம் ஆண்டிலேயே நிதிப் பற்றாக்குறையைக் கட்டுப்படுத்தும் சட்டமொன்றை இயற்றி, அதற்கேற்பவே பட்ஜெட் தயாரிக்கப்பட்டு வருகிறது. கரோனா தொற்றை எதிர்கொள்ள மைய அரசு ஒதுக்கியிருக்கும் 1.70 இலட்சம் கோடி ரூபாய் பெறுமான ஒதுக்கீடுகளும்கூட, இந்தச் சட்டத்திற்குட்பட்டுத்தான் ஒதுக் கப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறது, இந்து நாளேடு.

இந்திய மக்கள் ஒரு பேரபாயத்தை எதிர்கொண்டுவரும் துயரமான நிலையிலும்கூட, அந்நிய ஏகாதிபத்திய நிறுவனங்கள் விதித்திருக்கும் பற்றாக்குறை விதியை மீறாமல், அதற்குப் பணிந்து நடந்துகொண்டுள்ள மோடி அரசுதான், ஐ.நா. மனித உரிமை ஆணையத்தின் மனுவிற்கு எதிராக இறையாண்மை என்ற பூச்சாண்டியைத் தூக்கிக் காட்டுகிறது.

உலகமயமும், உலக வர்த்தகக் கழகமும் நடைமுறைக்கு வந்த 1990-களிலேயே, ஒரு தேசத்தின்/நாட்டின் இறையாண்மை என்ற கருத்து காலாவதியாகிவிட்டதாக ஏகாதிபத்தியவாதிகளும், அவர்களின் உள்ளூர் கைத்தடிகளும் அறிவித்ததை யாரும் மறந்திருக்க முடியாது. ஏகாதிபத்திய நிதி மூலதனம் ஒரு நாட்டினுள் நுழைந்து இலாபம் ஈட்டுவதற்கு அந்நாட்டின் சட்டங்கள் எந்தவிதத்திலும் தடையாக இருக்கக் கூடாது. அப்படியிருப்பின் அதற்கேற்ப அந்நாட்டின் சட்டங்கள் கைவிடப்பட்டோ, திருத்தப்பட்டோ, ஏகபோக நிதிமூலதனத்தின் இலாபத்தைப் பாதுகாக்கும் அடிப்படையில் மட்டுமே சட்டங்களும் விதிகளும் இருக்க வேண்டும் என்பதுதான் இதன் பொருள்.

ஒரு தேசத்தின், நாட்டின் இறையாண்மை என்பது அந்நாட்டு மக்களின் சமூக, பொருளாதார, அரசியல் உரிமைகளைப் பாதுகாப்பதைத் தவிர வேறு எதுவுமாக இருக்க முடியாது. இந்த வரையறையின்படி பார்த்தால், இந்திய நாட்டின் போலித்தனமான இறையாண்மையும்கூட முப்பது ஆண்டுகளுக்கு முன்பே ஏகாதிபத்திய நிதி மூலதனத்தின் பலிபீடத்தில் படையலாக வைக்கப் பட்டுவிட்டது என்பதே உண்மை. எனவே, ஐ.நா. மனித உரிமை ஆணையத்தின் மனுவை இறையாண்மையின் அடிப்




படையில் எதிர்ப்பதற்கு மைய அரசிற்கு அறம் சார்ந்த அடிப்படை எதுவும் கிடையாது.

மேலும், குடியுரிமைச் சட்டத் திருத்த விவகாரத்தில் அந்நிய அமைப்பு தலையிட அனுமதிக்க முடியாது எனச் சவால்விட்டு வரும் மோடி அரசுதான், ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்குச் சிறப்புரிமைகளை வழங்கும் அரசியல் சாசனப் பிரிவு 370-ஐ ரத்து செய்த விவகாரத்தில் மேற்குலக நாடுகளின் ஆதரவைப் பெறுவதற்காக, அந்நாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரை ஜம்மு காஷ்மீருக்கு அழைத்து வந்து, சுற்றிக் காண்பித்து அறிக்கைவிடச் செய்தது. மாமியார் உடைத்தால் மண் குடம், மருமகள் உடைத்தால் பொன்குடமா?

உலக வர்த்தகக் கழகத்தின் நிபந்தனைகளுள் ஏதாவது ஒன்றை இந்திய அரசு மீறிவிட்டதாக அக்கழகத்தின் உறுப்பு நாடுகள், குறிப்பாக ஏகாதிபத்திய நாடுகள் குற்றஞ்சுமத்தினால், அதற்கான விசாரணையும், தீர்ப்பும் இந்தியச் சட்டங்களின்படி இந்திய நீதிமன்றங்களில் நடைபெறுவதில்லை. உலக வர்த்தகக் கழகத்தின் தீர்ப்பாயங்களில்தான் வழக்குகள் தீர்த்து வைக்கப்படுகின்றன. அப்பொழுதெல்லாம் இந்திய அரசோ, ஆளும் வர்க்க அறிவுஜீவிகளோ இந்திய இறையாண்மை குறித்து மூக்கைச் சிந்துவதில்லை.

இந்திய அரசு சர்வதேச வர்த்தக ஒப்பந்தங்களில் மட்டும் கையெழுத்திட்டிருக்கவில்லை. சமூக மற்றும் அரசியல் உரிமைகள், பொருளாதார, சமூக, கலாச்சார உரிமைகள் குறித்த சர்வதேசிய ஒப்பந்தங்களிலும் கையெழுத்திட்டிருக்கிறது. ஒரு சாதாரண வர்த்தக ஒப்பந்தத்தை இந்திய அரசு மீறும்போது, உலக வர்த்தகக் கழகத் தீர்ப்பாயம் அதில் தலையிட்டு இந்திய அரசு மீது வழக்குத் தொடுத்து விசாரிக்கலாம் எனும்போது, சர்வதேச மனித உரிமை ஒப்பந்தங்களை இந்திய அரசு மீறும்போது அவ்விவகாரத்தில் ஐ.நா. மனித உரிமை ஆணையம் ஏன் தலையிடக் கூடாது? உலக வர்த்தகக் கழகத்தின் நிபந்தனைகளாலோ, வழக்கு விசாரணைகளாலோ பாதிப்புக்குள்ளாகாத “இந்திய இறையாண்மை”யின் புனிதம், ஐ.நா. மனித உரிமை ஆணையம் நீதிமன்ற நண்பனாகத் தலையீடு செய்வதால் பாதிப்புக்குள்ளாகிவிடுமா?

குடியுரிமைத் திருத்தச் சட்டம் இந்திய நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்டிருந்தாலும், அச்சட்டத் திருத்தம் பாகிஸ்தான், ஆப்கான், வங்கதேசம் ஆகிய மூன்று நாடுகளிலிருந்து வெளியேறி இந்தியாவிற்குள் தஞ்சமடைந்திருக்கும் அகதிகளின் குடியுரிமையைத் தீர்மானிப்பதில் முசுலீம் மதத்தினரைப் பாகுபடுத்தும் வண்ணம் மதத்தை அளவுகோலாகப் பயன்படுத்துவதால், இப்பிரச்சினையில் ஐ.நா. மனித உரிமை ஆணையம் தலையிடுவதற்கு நியாயம் உண்டு. அம்மன்றம் தலையிடுவதை இறையாண்மை என்ற பூச்சாண்டியைக் காட்டி தடுத்து நிறுத்த மோடி அரசு முயலுவதை நாம் அனுமதிக்க முடியாது.

இதுவொருபுறமிக்க, இந்திய உச்ச நீதிமன்றம் ஆளும் இந்து மதவெறிக் கும்பலின் கைத்தடியாகச் செயல்பட்டு வருவது பல்வேறு வழக்குகளில் அளிக்கப்பட்டிருக்கும் தீர்ப்புகள், உத்தரவுகள் - ரஃபேல் ஊழல் வழக்கு, பாபர் மசூதி நில உரிமை வழக்கு, அய்யப்பன் கோவிலில் பெண்கள் வழிபடும் வழக்கு உள்ளிட்டவை - வழியாக அம்பலமாகிவிட்டது. இந்த நிலையில் குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு எதிரான வழக்கை சர்வதேச நீதிமன்றம் விசாரிக்க வேண்டுமெனக் கோருவதுகூடத் தவறாகிவிடாது.

■ **செல்வம்**

---

"புதிய ஜனநாயகம்" உரிமையாளர் மற்றும் இதர விவரங்கள்
படிவம் IV (விதி 8-இன் படி)

1. வெளியிடும் இடம் : 110, இரண்டாம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை - 600 024.
2. வெளியிடும் காலம் : மாதம் ஒருமுறை
3. அச்சிடுபவர் பெயர் : இரா. சண்முகராசு
   இந்தியக் குடிமகனா? : ஆம்
   முகவரி : எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை - 600 024.
4. உரிமையாளர் மற்றும் வெளியிடுபவர் பெயர்: இரா. சண்முகராசு,
   இந்தியக் குடிமகனா? : ஆம்
   முகவரி : 110, இரண்டாம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை - 600 024.
5. ஆசிரியர் பெயர் : இரா. சண்முகராசு
   இந்தியக் குடிமகனா? : ஆம்
   முகவரி : 110, இரண்டாம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை - 600 024.

இரா. சண்முகராசுவாகிய நான், மேலே குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மை என்று உறுதியளிக்கின்றேன்.

(ஒப்பம்) இரா. சண்முகராசு,
வெளியிடுபவர்.

01.03.2020

## பெண்கள் மீதான வன்முறைகள்:

# தோற்றுப்போன சட்டங்கள்!

**பெண்களைப் பாதுகாக்கக் கொண்டுவரப்பட்டிருக்கும் கடுமையான சட்டங்கள் புண்ணுக்குப் புனுகு தடவிவிடும் ஆறுதலைக்கூடத் தருவதில்லை.**

கடந்த மார்ச்-8 சர்வதேச உழைக்கும் மகளிர் தினத்தன்று இந்தியாவின் 7 பெண் சாதனையாளர்களிடம் தனது டிவிட்டர் வலைத்தளக் கணக்கை ஒப்படைத்த மோடி, அதை நாட்டிலுள்ள பெண்களுக்காகச் சமர்ப்பிப்பதாக அறிவித்தார். தமிழக அரசும் தன் பங்குக்கு அந்நாளை பெண் குழந்தைகள் பாதுகாப்பு நாளாகக் கொண்டாடியது. இப்படி அனைத்தும் நல்ல விதமாகச் சென்று கொண்டிருப்பதாகக் காட்டப்பட்ட சமயத்தில்தான் உசிலம்பட்டியில் நடந்திருந்த பெண் சிசுக்கொலைகள் அம்பலமாகி மோடி-எடப்பாடி இணையின் மலிவான விளம்பரங்களைச் சந்திசிரிக்க வைத்தன.

உசிலம்பட்டி என்றாலே 1990-களில் அவ்வட்டாரத்தில் நடந்துவந்த பெண் சிசுக் கொலைகள் நம் நினைவுக்கு வந்துவிட்டுப் போகும். அச்சமயத்தில் அதனைத் தடுப்பதற்குச் சட்டத்தைக் கடுமையாக்கிய தமிழக அரசு, தொட்டில் குழந்தைத் திட்டத்தையும் அறிமுகப்படுத்தியது. அதன் பின் அந்த அவலம் குறையத் தொடங்கி, கடந்த முப்பதாண்டுகளில் கிட்டத்தட்ட இப்பிரச்சினை வழக்கொழிந்து போய்விட்டது எனக் கருதப்பட்ட நிலையில்தான், அப்பகுதியில் அடுத்தடுத்து 3 பெண் சிசுக்கள் கொல்லப்பட்டுள்ளன.

கடந்த மார்ச்-2 அன்று உசிலம்பட்டிக்கு அருகேயுள்ள உள்ள செக்காணூரணியில் தமது இரண்டாவது பெண் குழந்தையைப் பிறந்த ஒரு மாதத்திலேயே அக்குழந்தையின் பெற்றோர்கள் வைரமுருகன்-சவுமியா தம்பதியினர் எருக்கம்பால் கொடுத்துக் கொன்று புதைத்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து ஆண்டிப்பட்டியிலும் ஒரு கொலை நடந்திருக்கிறது. அங்கு எருக்காம்பால் கொடுத்துக் கொல்லப்பட்ட பெண் குழந்தை பிறந்து ஆறு நாட்கள்கூட இவ்வுலகில் உயிரோடு இருக்கக் கொடுத்து வைக்கவில்லை.

மூன்றாவதாக, உசிலம்பட்டி அருகே கோவிலாங்குளத்தில் மர்மமான முறையில் ஒரு பெண் குழந்தை இறந்துள்ளது. அப்பச்சிளம் பெண் குழந்தையின் அகால மரணத்திற்கு மூச்சுத் திணறல் காரணமெனக் கூறப்படுகிறது.

வறுமையின் காரணமாகத்தான் தமது இரண்டாவது பெண் குழந்தையை எருக்கம்பால் கொடுத்துக் கொன்றதாக வைரமுருகன் - சவுமியா தம்பதியினர் வாக்குமூலம் அளித்துள்ளனர். தற்போதுள்ள மோசமான பொருளாதாரச் சூழலில் அடித்தட்டு மக்கள் குழந்தைகளைப் பெற்று வளர்ப்பது என்பது மிகச் சிரமமான காரியம்தான். எனினும், இதுவே ஆண் குழந்தை பிறந்திருந்தால் கொன்றிருப்பார்களா?

சவுமியாவின் பெண் குழந்தை மட்டுமல்ல, மற்ற பெண் சிசுக்களும் கொல்லப்பட்டதற்கு வறுமை அடிப்படையான காரணமாக இருந்துவிட முடியாது. வேறென்ன காரணம் என்பது நாம் அனைவரும் அறிந்ததுதான். பெண் குழந்தைகளைவிட ஆண் குழந்தைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் தந்தைவழி ஆணாதிக்க சமூகக் கண்ணோட்டம்தான் இதன் ஆணிவேர்.

இந்தக் கண்ணோட்டம் இந்தியாவில் பெண்ணினத்தை அழிவின் விளிம்புக்குக் கொண்டு சென்றுவிடுமோ என அஞ்சுமளவிற்கு அபாயகரமாக மாறிவருவதைச் சமீபத்திய புள்ளிவிவரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. இந்தியாவில் 2007-ஆம் ஆண்டில் 1000 ஆண் குழந்தைகளுக்கு 903 பெண் குழந்தைகள்

உசிலை - செக்காணூரணியில் பிறந்து ஒரு மாதமேயான பச்சிளம் பெண்குழந்தை கொன்று புதைக்கப்பட்ட இடம்.





வைரமுருகன் – சவுமியா தம்பதியினர் மற்றும் வைரமுருகனின் தந்தை சிங்கத்தேவன்.

என்றிருந்த தேசிய ஆண்-பெண் பாலின விகிதாச் சாரம் *(Sex Ratio at Birth)*, 2016-ஆம் ஆண்டு 877 ஆக குறைந்துவிட்டதாக உள்ளூராட்சிப் பதிவு கணக் கெடுப்பு வழியாகத் *(Civil Registration Survey)* தெரிய வந்திருக்கிறது.

இதில் அதிர்ச்சி தரத்தக்க விடயம் என்னவென்றால், முன்னேறிய மாநிலமாகக் கருதப்படும் தமிழகத்தில் பெண் குழந்தை பிறப்பு விகிதம் தேசிய சராசரியை விடக் குறைவாக இருக்கிறது என்பதுதான். தமிழகத்தில் 2004-இல் 936 ஆக இருந்த இவ்விகிதம் 2016-இல் 840-ஆக வீழ்ந்திருப்பதாக அக்கணக்கெடுப்பு குறிப்பிடு கிறது. (ஆங்கில இந்து, 09.03.2020)

இது நம்புவதற்குக் கடினமாகத் தோன்றினாலும், தமிழகத்தில் ஆண்-பெண் விகிதாச்சாரம் குறைந்து வருகிறது என்பதே உண்மை. பத்தாண்டுகளுக்கு முன்பு எடுக்கப்பட்ட மக்கள்தொகை கணக்கெடுப்பை ஆதாரமாகக் கொண்டு மைய அரசின் புள்ளிவிவரத் துறை 2019-இல் வெளியிட்டுள்ள ஆவணமொன்றில் தமிழகத்தில் பெண் குழந்தை பிறப்பு விகிதம் 2011-இல் 996 ஆக இருந்தது எனக் குறிப்பிடப்பட்டிருந்தாலும், அதே ஆவணத்தில் 0-6 வயதுள்ள பெண் குழந்தை களின் எண்ணிக்கை விகிதம் 943 எனச் சரிந்திருப்பதாகக் காட்டப்பட்டிருக்கிறது. *(http://www.mospi.gov.in/sites/default/files/publication_reports/Women%20and%20Men%20%20in%20India%202018.pdf)*

பிறந்து ஆறு வயது முடிவதற்குள் 53 பெண் குழந்தைகள் எப்படிக் காணாமல் போக முடியும்? இந்தச் சரிவை இயற்கையானதாக ஏற்றுக்கொள்ள இயலுமா?

●●●

**ஒ**வ்வொரு ஏழு பெண் கருக்களிலும் ஒரு பெண் கரு, அக்கரு பெண் என்ற காரணத்தாலேயே அழிக்கப் படுவதாகப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

கருவிலிருக்கும் குழந்தை ஆணா, பெண்ணா எனத் தெரிவிப்பதும், பெண்கருக்களைக் கலைப்பதும் கடுமையான தண்டனைக்குரிய குற்றமாக அறிவிக்கப் பட்டிருக்கிறது. மோடியின் ஆட்சியில் பெண் குழந்தை களைக் காப்போம், பெண் குழந்தைகளைப் படிக்க வைப்போம் என்ற முழக்கத்தின் அடிப்படையில் பெண் குழந்தைகளைப் பாதுகாக்கும் திட்டங்கள் முன்னெடுக் கப்படுவதாகக் கூறப்படுகிறது. எனினும், பெண் கருக் கள் அழிக்கப்படுவது தடையின்றி நடைபெறுவதை மேற்கண்ட புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. அப்படி யென்றால், அச்சட்டமும் அச்சட்டத்தை நடைமுறை படுத்தும் பொறுப்பும் கடமையும் கொண்ட மருத்துவத் துறை, காவல் துறை, நீதித் துறை ஆகியவையும் என்ன செய்கின்றன?

உசிலம்பட்டி சம்பவத்தில் தொடர்புடைய பெற்றோர்களும் உறவினர்களும் கைது செய்யப் பட்டுவிட்டனர். ஆனால், பெண் கருவை அழிக்கும் பெற்றோர்கள் எத்தனை பேர் கைது செய்யப்பட்டுத் தண்டிக்கப்பட்டிருக்கின்றனர்? இதற்குத் துணைபோன எத்தனை மருத்துவர்கள், ஸ்கேன் சென்டர் முதலாளிகள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்?

2016-ஆம் ஆண்டில் கடலூர், நாமக்கல், திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் இயங்கி வந்த 20 ஸ்கேன் சென்டர்கள் மூடப்பட்டதாகச் செய்திகள் வெளிவந்தன. ஆனாலும், அந்த மையங் களின் உதவியோடு பெண் கருக்களை அழித்த பெற்றோர்கள் அடையாளம் காணப்பட்டதாகவோ, கைது செய்யப்பட்டதாகவோ எந்தவொரு தகவலும் இல்லை.

பெண் சிசுக்கள் கொல்லப்படுவதில் நுட்பமாகச் செயல்படும் வர்க்கத் தன்மையையும் நாம் காண வேண்டியிருக்கிறது. பிறந்த பெண் குழந்தையைக் கள்ளிப் பாலை ஊற்றிக் கொல்லுபவர்கள் அடித் தட்டு வர்க்கம் என்பதால், சட்டம் பாய்ந்துவிடுகிறது. ஆனால், கருவை அழிக்கும் கனவான்கள் பெரும்பாலும் நகர்ப்புற நடுத்தர வர்க்கம் அல்லது அதற்கும் மேலுள்ள உயர் வர்க்கம் என்பதால் சட்டம் மௌனித்துவிடுகிறது.

பெண்களைப் பாதுகாக்கப் பல்வேறு சட்டங்கள் நடைமுறையில் உள்ளன. பெண்களைப் பாதுகாக்கும் சட்டங்களை மென்மேலும் கடுமையாக்குவதன் மூலம் அவர்கள் மீது நிகழ்த்தப்படும் வன்முறைத் தடுத்துவிடலாம் என்ற கண்ணோட்டமும் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகிறது.

இது உண்மையெனில், பெண் கருவும், பெண் சிசுவும் அழிக்கப்படுவதும், கொல்லப்படுவதும் தடுக் கப்பட்டு, இந்த இருபது ஆண்டுகளில் பெண் குழந்தை பிறப்பு விகிதம் கணிசமாக அதிகரித்திருக்க வேண்டும். நிர்பயா வழக்கிற்குப் பிறகும் பாலியல் வன்முறை நடப்பது குறைந்திருக்க வேண்டும். ஆனால், உண்மை யென்ன?

பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லாத நாடுகளின் பட்டியலில் இந்தியா முதலிடத்தில் இருக்கிறது. பெண் களுக்கு எதிராக நடைபெறும் பல்வேறு விதமான குற்றங் களைக் கணக்கில் கொண்டால், 2016-இல் 3,38,954 வழக்குகள், 2017-இல் 3,59,849 வழக்குகள், 2018-இல்

3,78,277 வழக்குகள் என ஒவ்வோர் ஆண்டிலும் முந்தைய ஆண்டைவிடக் கூடுதலாக வழக்குகள் பதிவாகியுள்ளன. பதியப்படாமல் மறைக்கப்பட்ட, தட்டிக்கழிக்கப்பட்ட வழக்குகள் எத்தனையோ, யார் அறிவார்? குறிப்பாக, சிறுமியர் மீது நடத்தப்படும் பாலியல் ரீதியான தாக்குதல்கள் இருமடங்கு அதிகரித் துள்ளதாகப் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன.

நிர்பயா வழக்கில், இரவு நேரத்தில் அந்தப் பெண்ணுக்கு வெளியே என்ன வேலை? வீட்டுக்குள் இருந்திருந்தால் பிரச்சினை வந்திருக்குமா என ஆணாதிக்கவாதிகள் குதர்க்கமாக வாதிட்டனர். ஆனால், உண்மை நிலைமை என்ன?

கரோனா பரவல் காரணமாக ஊரடங்கு அமலில் இருக்கும் நிலையில் கடந்த மார்ச் 20 முதல் 31 வரையிலான 11 நாட்களில் மட்டும் 3.07 இலட்சம் அழைப்புகள் சைல்டு ஹெல்ப் லைனுக்கு வந்துள்ள தாகக் கூறுகிறார் சைல்டு லைன் இந்தியா துணை இயக்குநர் ஹர்லின் வாலியா. இதில் 30%, அதாவது 92,105 அழைப்புகள் துன்புறுத்தல் மற்றும் வன்முறையில் இருந்து பாதுகாக்கக் கோரி விடுக்கப் பட்டுள்ளன. மேலும், 18 நாட்களுக்குள் 123 குடும்ப வன்முறைப் புகார்கள் தேசிய மகளிர் ஆணையத்தில் பதியப்பட்டுள்ளன.

பெண்களுக்கு வீட்டிலும் பாதுகாப்பில்லை, வெளி யிலும் பாதுகாப்பில்லை என்பதுதான் உண்மை நிலை. அது மட்டுமின்றி, பெண்களைப் பாதுகாக்கக் கொண்டு வரப்பட்டிருக்கும் கடுமையான சட்டங்களும் குற்ற வாளிகளின் வர்க்க நிலைக்குத் தகுந்தவாறுதான் அவர் கள் மீது பாய்கின்றன. நிர்பயா வழக்கின் குற்றவாளி களைத் தூக்கிலேற்றிய சட்டம், ஆசாராம் பாபு போன்ற மேல்மட்டத்துக் குற்றவாளிகளை ஏன் சிறையில் வைத்துப் பாதுகாக்கிறது?

ஹைதராபாத் சம்பவத்தில் தொடர்புடையதாகக் கூறப்பட்ட குற்றவாளிகளைப் போலி மோதலில் சுட்டுக் கொன்ற போலீசின் வரம்பற்ற அதிகாரம், பொள்ளாச்சி பாலியல் குற்றவாளிகள் மீது ஏன் பாய மறுக்கிறது? அக்குற்றவாளிகள் மீது போடப்பட்ட குண்டர் தடுப்புச் சட்ட வழக்கு விசாரணையில் நிற்க வில்லை. அக்குற்றவாளிகளைத் தப்புவிக்கும்படி மொன்னையாக வழக்குகள் புனையப்பட்டுள்ளன.

உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியாக இருந்த ரஞ்சன் கோகாய் மீது பாலியல் குற்றச்சாட்டு சுமத் தப்பட்டபோது, சட்டம் அவர் மீது பாயவில்லை. மாறாக, அவர் தனது அதிகாரத்தையும் சட்டத்தையும் முறைதவறிப் பயன்படுத்தித் தன் மீது குற்றஞ்சுமத்திய பெண்ணையும் அவரது உறவினர்களையும் பழிதீர்த்துக் கொண்டார்.

நிர்மலா தேவி விவகாரத்தில் சிக்கிக்கொண்ட கவர்னர் தாத்தா பன்வாரிலால் புரோகித், தானே ஒரு விசாரணைக் கமிசன் அமைத்துத் தன்னைத் தற்காத்துக் கொண்டார். இப்படிச் சட்டத்தின் பாரபட்சம் குறித்துக் கூறிக்கொண்டே போகலாம்.



சமூகத்தின் மேல்மட்டம், கீழ் மட்டம் என்ற வேறுபாடின்றி, இந்தியாவின் இன்றைய சமூகக் கட்ட மைப்பே தந்தை வழி ஆணாதிக்கக் கண்ணோட்டத்தில் ஊறிப் போயிருப்பதால், பெண்களுக்கு எதிரான குற்றங் களும், வன்முறைகளும், ஒதுக்குதலும் அன்றாட நிகழ்வு களாகி, அதனை இயல்பாக எடுத்துக்கொள்ளும் மனோ நிலை உருவாக்கி வைக்கப்பட்டிருக்கிறது. பெண்கள், சிறுமிகள் மீது நடத்தப்படும் பாலியல் குற்றங்களுக்கு எதிராகக் கோபங்கொள்ளும் பலரும்கூட, பெண்கள் நுட்பமாக ஒடுக்கப்படுவதை, ஆணுக்குக் கீழான வள்தான் பெண் என்பதை ஏற்றுக்கொள்ளும் மனோ நிலையில் இருப்பதை நாம் பார்க்கிறோம்.

பருவ வயதுடைய பெண்கள் சபரிமலை கோவிலுக்குள் செல்ல அனுமதித்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பை ஆர்.எஸ்.எஸ். கும்பல் மட்டும் எதிர்க்கவில்லை. அடித்தட்டு வர்க்கத்தைச் சேர்ந்த ஆண்களும், பெண் களும்கூட எதிர்த்துப் பேசினார்கள். பின்னர் அத்தீர்ப்பை உச்ச நீதிமன்றமே நிறுத்திவைத்துப் பெண்களுக்கு அநீதி இழைத்தது.

இந்திய இராணுவத்தின் போருக்குச் செல்லாத படைப்பிரிவுகளில் பெண்களை கர்னல் மற்றும் அதற்கும் மேம்பட்ட உயர் பதவிகளில் நிரந்தர அதிகாரி களாக நியமிப்பதை மைய அரசும், இந்திய இராணுவம் எதிர்த்து நின்ற கேவலத்தைச் சமீபத்தில் நாம் கண்டோம். இத்தகைய தீண்டாமைகள் பெண்ணுடலின் மீது நிகழ்த் தப்படும் குற்றங்களுக்கு இணையானவை.

பெண்களை வீட்டுவேலைகளைச் செய்யும் வேலைக்காரியாக, பிள்ளைபெறும் எந்திரமாகக் கருதும் நிலப்பிரபுத்துவ ஆணாதிக்கக் கண்ணோட்டத் தோடு, பெண்ணை நுகர்வுப் பண்டமாக, போகப் பொருளாகக் கருதும் மறுகாலனியாக்க கலாச்சாரச் சீரழிவும் நம்நாட்டில் வேரூன்றியுள்ளது. இந்த அழுகிப் போன சமூகக் கட்டமைப்பை மாற்றுவதற்கான முயற்சி களை, போராட்டங்களைத் தீவிரமாக நடத்தாமல், சட்டங்களை மட்டுமே நம்பியிருப்பது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதற்கு ஒப்பாகும். இந்தச் சட்டங்கள் பல சமயங்களில் புண்ணுக்குப் புனுகு தடவிவிடும் ஆறுதலைக்கூடத் தருவதில்லை என்பதே உண்மை.

■ **மேகலை**

Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, 2nd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, 2nd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGA RAJ.

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No. 42648/85
REGISTERED No. TN/CC(S)DN/190/18-20. Liscensed to Post without pre-payment under WPP No. TN/PMG(CCR)/WPP562/2018-2020.









# வீட்டிலிருந்தும் குரலெழுப்புவோம்!

கொரோனா நெருக்கடியை வெல்ல, பசியிலிருந்து மக்களை காக்க...

## கவன ஈர்ப்பு இயக்கம்

“வீட்டில் முடங்கச் சொல்லும் அரசே, வயிற்றுக்குச் சோறு போடு! செலவுக்குக் காசு கொடு! என்ற முழக்கத்தை முன்வைத்து வீட்டிலிருந்தும் குரலெழுப்புவோம்!” என்ற அறைகூவலை மக்கள் அதிகாரம், தமிழ்த்தேசிய விடுதலை இயக்கம், மே 17 இயக்கம், திராவிடர் விடுதலைக் கழகம், தந்தை பெரியார் திராவிடர் கழகம் உள்ளிட்ட பல்வேறு ஜனநாயக முற்போக்கு சிந்தனை கொண்ட அமைப்புகள் விடுத்திருந்தன.

இந்த அறைகூவலை ஏற்று கடந்த 26.04.2020, ஞாயிற்றுக்கிழமை அன்று தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் அவரவர் வீட்டின் முன்பாகவும் தெருக்களிலும் தனிநபர் இடைவெளியுடன் கூடி நின்று பொதுக்கோரிக்கைகளைத் தாங்கிய பதாகைகளுடன் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதில், ஜனநாயக அமைப்புகளின் முன்னணியாளர்களும் பொதுமக்களும் திரளாகப் பங்கேற்றனர்.

வாய்ச்சவடால் அடித்து, மக்கள் உயிரோடு விளையாடாதே!
உடனே ஐந்து இலட்சம் கோடிக்குக் குறையாமல் நிதி ஒதுக்கு!

வீட்டில் முடங்கச் சொல்லும் அரசே!
வயிற்றுக்குச் சோறு போடு! செலவுக்குக் காசு கொடு!

நிரம்பி வழியுது உணவு கிடங்கு
பட்டினியால் மக்களைக் கொல்லாதே!
ஒவ்வொரு குடும்பத்திற்கும் 3 மாதங்களுக்கு தேவையான
உணவு தானியங்களை இலவசமாக வழங்கு!

அம்பானி, அதானிகளுக்காக துடிக்கும் மத்திய அரசே...
மக்களின் நெருக்கடியை போக்க ஒவ்வொரு குடும்பத்திற்கும்
3 மாதங்களுக்கு மாதம் ரூ. 6000 வழங்கு!

கை தட்டினால் போதாது!
மருத்துவர்கள், செவிலியர்கள், நல்வாழ்வுப்
பணியாளர்களுக்குப் பாதுகாப்புக் கருவிகள் கொடு!

ஓரவஞ்சனை செய்யாதே!
தமிழக அரசுக்குத் தேவையான நிதியை வழங்கு!

கொரோனாவைவிட அபாயகரமான பாசிச பா.ஜ.க.
– மோடி அரசை எதிர்த்து வீட்டிலிருந்தும் போராடுவோம்!